# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 48

சுடர் 32 | கதிர் 225 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை 09.07.2017


## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக இன்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூலை 9
கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான பிரார்த்தனை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலய வருடாந்த பொங்கல் விழா >> 45

## நவாலிப் படுகொலையின் 22ஆவது நினைவு இன்று



யாழ்ப்பாணம், ஜூலை 9
நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 147 பேரின் 22 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி சிறி கதிர்காம (சின்னகதிர்காமம்) முருகன் ஆலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று நினைவு கூரப்படும் என்று >> 42

## மாவட்டச் செயலக விடுதியை ஒருநாள் மட்டுமே பாவித்தேன்

அதனை மீள எடுத்துக் கொள்ளுமாறு முன்னாள் எம்.பி சந்திரகுமார் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
வவுனியா மாவட்டச் செயலகத்தின் விடுதிக் கட்டடம் எனது பதிவில் உள்ளபோதிலும் அதனை ஒரு நாள் மாத்திரமே நான் உபயோகித்தேன். நீங்களே அதனை மீள எடுத்துக் கொள்ளலாம்.
இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், வவுனியா மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
வவுனியா மாவட்டச் செயலகத்துக்குச் சொந்தமான மூன்று விடுதிக் கட்டடங்களை 3 அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அனுமதி இன்றிப் பாவிப்பதால் அதனை மீண்டும் மாவட்டச் செயலகத்திடமே ஒப்படைக்குமாறு மாவட்ட ஒருங்கி >> 45



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினை நாகபூசணி அம்மன் தேரேறி அருட்காட்சியளித்தார். (மேலும் படங்கள் பக்.02)

# புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு பௌத்த பீடங்கள் 3 நிபந்தனைகள்

- ஒற்றையாட்சியை நீக்க முடியாது
- பௌத்தத்துக்கு முன்னுரிமை கட்டாயம்
- காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கக்கூடாது

கொழும்பு, ஜூலை 9
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அரசுக்கு மூன்று நிபந்தனைகளை விதிக்கின்றன முதன்மைப் பௌத்த பீடங்கள்.
ஒற்றையாட்சியை நீக்கக்கூடாது, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை கட்டாயம் வழங்கப்படவேண்டும், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கக்கூடாது என்ற மூன்று முக்கிய நிபந்தனைகளையே அவை முன்வைத்துள்ளன. >> 45

## இழுவைமடித் தடைக்கு இந்திய மீனவர் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 9
இழுவை மடி மீன்பிடி முறைமையை முற்றாகத் தடை செய்யும் சட்ட வரைவு இலங்கை நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப் >> 06

## கடற்படையின் கெடுபிடியால் பக்தர்களுக்கு அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
பாதுகாப்பு அங்கி இல்லாமல் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் சென்றவர்களைக் கடற்படையினர் தடுத்தனர். அதனால் நீண்ட நேரம் குறிகாட்டு வான் இறங்குதுறையில் காத்திருக்க வேண்டியிருந்தது என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.
தேர் உற்சவத்துக்குச் செல்வதற்காக நேற்று ஏராளமான பக்தர்கள் >> 45

## பிறக்காத குழந்தைக்கு எதற்காகச் சோதிடம்?

கோத்தாவைக் கடிந்தார் மல்வத்தை பீடாதிபதி

கொழும்பு, ஜூலை 9
பிறக்காத குழந்தைக்கு ஏன் சோதிடம் பார்க்கிறீர்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச >> 45

## மகிந்தவுக்கும் கோத்தாவுக்கும் மன்னிப்புக் கொடுக்கவேண்டும்

கோருகிறார் அமைச்சர் அமரவீர

கொழும்பு, ஜூலை 9
மகிந்தவும் கோத்தபாயவும் எவ்வாறான குற்றங்கள் செய்திருந்தாலும் நாட்டுக்குச் செய்த சேவையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என்று அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் >> 45

## கிளி. பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் நாளை முதல் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 9
வடக்கு மாகாணப் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தில் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங் >> 45

## கோத்தாவை உடனே கைது செய்யவேண்டும்

அமைச்சர் பொன்சேகா விடாப்பிடி

கொழும்பு, ஜூலை 9
பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் >> 43

## விபத்தில் ஒருவர் சாவு ஹைஏஸ் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
பூநகரியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பய >> 45

## மகாநாயக்கர்களிடம் நடுநிலைவேண்டும்

தென்மாகாண முதல்வர் வலியுறுத்தல்



கொழும்பு, ஜூலை 9
மகாநாயக்க தேரர்கள் நடுநிலையாகச் செயற்படவேண்டுமென தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா தெரிவித்துள்ளார். >> 44

## எமது சொல்லை அரசு கேளாவிடின் வெளியேறுவோம்

மகிந்த அணி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 9
இடைக்கால அறிக்கையில் எமது யோசனைகள் உள்ளடக்கப்படவேண்டும். இல்லாவிடின் வழிநடத்தல் குழுவிலிருந்து வெளியேறு . >> 42

## தேவாலயக் காணி எல்லைத் தூண்களை அடித்து நொறுக்கி சிலர் பெரும் அடாவடி

*மன்னார் பெரிய கரிசலில் சம்பவம் பொலிஸார் பாராமுகம் எனக் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜூலை 9
மன்னார் பெரிய கரிசல் கிராமத்தில் நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் நடப்பட்ட எல்லைத் தூண் >> 45

## பௌத்த தலைவர்களுடன் பேசவேண்டும் சம்பந்தன்

செல்வம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 9
அரசமைப்பு பற்றிய தமிழரின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மகாநாயக்கர்க >> 07


011 5 411 411

SDB வங்கியிலிருந்து நிலையான வைப்புக்களுக்கு 16% வரையிலான கவர்ச்சிகரமான வட்டி

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ 1.5 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் கூடுதல் வட்டியும் உரித்தாகும்.

அழையுங்கள்: 0115 411 411

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

newuthayan.com புதுப் பொலிவுடன் உதயன் இணையத்தளம்

# கோத்தா கைது விவகாரம் சோடிக்கப்பட்ட கட்டுக்கதை

## சு.க. விளக்கம்



கொழும்பு,ஜூலை 9

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படுவார் என வெளியான செய்தி போலியாகச் சோடிக்கப்பட்ட கட்டுக்கதை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகர சபைவளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மேல்மாகாண முதலமைச்சரும், சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினருமான இசுறு தேவப்பிரிய இதனைக் கூறினார். "அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கும், கோத்தபாய ராஜபக்சவுக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதனைத் தெளிவுபடுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரே அமைச்சர் மகிந்த அமரவீர. கோத்தபாய ராஜபக்சவுக்கும், ராஜபக்ச குடும்பத்தினர் மீதும் அடக்குமுறைகளைக் கையாள்வதற்கான எந்த முடிவுகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்திருக்கவில்லை. இது குறித்து ஆராயும்போது கோத்தபாய ராஜபக்சவோ அல்லது அமைச்சர் மகிந்த அமரவீரவோ இப்படி ஒருபோதும் கூறவில்லை.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குக் கூறிய கேலிக்கதையாகும்" என்றார். (ஐ)



# சைட்டத்துக்கு எதிராக லண்டனில் போராட்டம்

லண்டன்,ஜூலை 9

இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அரசின் வன்முறையை கண்டித்தும் ,கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படைசேவைகளின் தனியார்மயப்படுத்தலைக் கண்டித்தும் லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக நேற்றுப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது. சைட்டத்துக்கு எதிரான பெற்றோர், மாணவர்இயக்கம்இந்தப்போராட்டத்தை முன்னெடுத்தது. தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். தமிழ், முஸ்லிம் மற்றும்பல்லினமக்களும்போராட்டத்தில் கலந்து கொண்டனர். "கல்வியும் சுகாதாரமும் விற்பனைக்கு இல்லை" , "மாணவர்களை ஒடுக்காதே", "அரசியல்கைதிகளை விடுதலை செய்" , "மாணவர்களை விடுதலை செய்" போன்ற சுலோக அட்டைகளை மூன்று மொழிகளிலும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றைகையளிக்க முற்பட்டபோது இலங்கை தூதரக அலுவலர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை.

இறுதியில் போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அலுவலக வாயிலில் ஒட்டிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# திருத்தம் செய்யப்பட்ட ஓட்டோ திடீரெனத் தீயில் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருத்தகத்தில் திருத்த வேலை செய்யப்பட்ட முச்சக்கர வண்டி திடிரெனத் தீப்பற்றி எரிந்தது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள திருத்தகம் ஒன்றில் நேற்று இடம்பெற்றது.

திருத்தகத்தின் தொழிலாளர்கள் முச்சக்கர வண்டியைத் திருத்தம் செய்து கொண்டிருந்தனர். முச்சக்கரவண்டியின் தாங்கிக்குள் பெற்றோல் நிரப்பப்பட்டிருந்தது.

திருத்தத்தின் போது தாங்கியிலிருந்த பெற்றோல் கசிந்து திடீரெனத் தீப்பிடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. நிலமையை உணர்ந்து சுதாகரித்துக் கொண்ட தொழிலாளர்கள் எரிந்து கொண்டிருந்த முச்சக்கர வண்டியை விரைவாக திருத்தகத்துக்கு வெளியே அகற்றினர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவின ருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

முச்சக்கர வண்டி முற்றுமுழுதாகத் தீயில் எரிந்து நாசமானது. என்று கூறப்பட்டது.

(ஐ-10)

# புதையல் தோண்டிய இருவர் கைது

திருகோணமலை, ஜூலை 9

திருகோணமலை-கிண்ணியாமகாமாரிக்குளம்பகுதியில்புதையல்தோண்டிய குற்றச்சாட் டில், இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்என்று பொலிஸார் தெரிவித்தனர். கிண்ணியா பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவினருக்குக்கிடைத்த இரகசியதகவலின் அடிப்படையில்மகாமாரிக்குளம் பகுதிக்கு விரைந்த பொலிஸார், அந்தப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை வழிமறித்து விசாரித்த போது அவர்களிடமிருந்து விநாயகர் சிலை, இரு சிறு பெட்டகங்கள், தங்கத் தோடுகள் மற்றும் அவற்றைத் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களைக் கைப்பற்றினர்.

கிண்ணியா மகரூப் நகர் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-10)

# கொழும்பு- விசாகபட்டினம் வானூர்தி சேவை ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 9

இலங்கைக்கும் மற்றும் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் விசாகபட்டினத்துக்கும் இடையேயான பன்னாட்டு ரீதியான வானூர்தி சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இந்தச்சேவையை ஆரம்பித்துள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வானூர்தி சேவைகள் வாரத்தின் 4 முறைகள் நடைபெறவுள்ளன. இதனிடையே, எதிர்வரும்12ஆம்திகதிதெலுங்கானா மாநிலத்தின் ஐதராபாத்துக்கான வானூர்தி சேவையும், எதிர்வரும் 16 ஆம் திகதி தமிழகத்தின் கோயம்புத்தூருக்குமான வானூர்திசேவையும் இலங்கையில் இருந்து நேரடியும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீதிமன்றச் சந்தியில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஜூலை 9

அம்பாந்தோட்டை நீதிமன்றச் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் தற்போது அம்பாந்தோட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். காயமடைந்த நபர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்த குழுவொன்றே இந்தத் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது. சம்பவம்தொடர்பில் விசாரணைள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ்ஸார் தெரிவித்தனர். (ஐ-10)

# மரம் முறிந்து வீழ்ந்து பல்கலை. மாணவர்கள் மூவருக்குக் காயம்

கொழும்பு,ஜூலை 9

கண்டலம கங்கையின் அருகாமையில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்த சம்பவத்தில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமதியம் இடம்பெற்ற சம்பவத்தில் அம்பாறை, மகரகம மற்றும தங்காலைப் பிரதேசங்களைச் சேர்ந்த வணிக பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களே காயமடைந்தனர்.

காயமடைந்த மாணவர்கள் தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளநிலையில்அவர்களில் ஒரு மாணவரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முதியவர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஜூலை 9

காலையில் கழிப்பறைக்குச் செல்வதாகக்கூறிச்சென்றமுதியவர்வீட்டுமுற்றத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் மீசாலையில் நேற்று இடம்பெற்றது.

வீட்டுக்கு அருகில் இருக்கும் கழிப்பறைக்குச்செல்வதாகக்கூறிச்சென்றவர், வீட்டு முற்றத்தில் இறந்த நிலையில் காணப்பட்டார்என்றுசாவடைந்தவரின் மனைவி தெரிவித்தார்.

முதியவரின் சாவு தொடர்பாக விசாரணைகளைமேற்கொண்டபொலிஸார் சாவகச்சேரிநீதிமன்றநீதிவான் முன்னிலையில்அறிக்கைதாக்கல்செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான்பிரதேசதிடீர்சாவுவிசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சாவகச்சேரிமருத்துவமனைசட்டமருத்துவ அதிகாரி விடுமுறையில் சென்றுள்ளதால்சடலத்தையாழ். போதனாமருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் [illegible] டார். (ஐ-9,131)

# டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் யாழ். சிறைச்சாலை கைதிகள்




யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் கைதிகள் இணைந்து யாழ். நகரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டனர். சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி. எம். சுவாமிநாதனின் ஆலோசனைக்கமைவாக யாழ். சிறச்சாலை மூத்த அத்தியட்சகர் எச். ஏ. சி .பெரேரா தலைமையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்.மாநகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு டெங்கு பரவுவதற்கு ஏதுவாகக் காணப்படும் இடங்கள் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. அந்த இடங்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 15 பேரும், கைதிகள் 25 பேரும் இணைந்து சிரமதானப் பணிகளை முன்னெடுத்த னர்.

(ஐ-8)

# பெரியபண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



மன்னார், ஜூலை 9

மன்னார், மடு பிரதேச சபைக்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. மாவீரர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப் பட்ட சிரமதானம் சுமார் 2 மணிநேரம் இடம்பெற்றது. அதில் முன்னாள் போராளிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மாவீரர் துயிலுமில்லத்தில் கடந்த வருடம் மாவீரர்களின் உறவுகளினால் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. அதேவே மட்டக்களப்பு மாவட்டத்தில்உள்ளதரவைமாவீரர்துயிலும் இல்லம், வாகரை கண்டலடி துயிலும் இல்லம், படுவான்கரை துயிலும் இல்லம் என்பன கடந்த வாரம் துப்பரவு செய்யப்பட்டன.

(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைச் சட்டம் அநீதியானது

## வைகோ கண்டனம்

கொழும்பு, ஜூலை 9
தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தை மீளப் பெறுவதற்கு இந்திய மத்திய அரசு அழுத்தம் கொண்டு வர வேண்டும் இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;
இலங்கை அரசு ஜனவரி மாதம் இலங்கை நாடாளுமன்றில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது. கடந்த ஆறு மாத காலமாக இந்திய அரசு இந்தச் சட்டம் குறித்து அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டது.
தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, மே மாதம் இலங்கையில் நடந்த பன்னாட்டு வெசாக் விழாவில் பங்கேற்கச் சென்ற போதும் தமிழக மீனவர்களுக்கு எதிரான



இலங்கை அரசின் சட்டம் தொடர்பில் பெயரளவுக்குக் கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதன் விளைவாக இலங்கை அரசு, இலங்கையின் கடற்றொழில் சட்டதிருத்த முன்வரைவு ஒன்றை அந்த நாட்டு நாடாளுமன்றில் தாக்கல் செய்திருப்பது தமிழக மீனவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.
இந்த சட்டத் திருத்தத்தின்படி, தமிழக மற்றும் புதுவை மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடித்தால் சிறைத் தண்டனை மற்றும் தண்டம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டாலும், இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் உரிமை அந்தப் பகுதியில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் சார்பில், இலங்கை அரசுக்கு உரிய முறையில்அழுத்தம்கொடுக்காமல், ஏனோ தானோ என்று பிரச்சினை யைக் கண்டு கொள்ளாமல் இருப்பதால், இன்று வரையில் தமிழக மீனவர்கள் 50 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, அந்த நாட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். கோடிக்கணக்கான மதிப்புக் கொண்ட 143 மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குத் தீர்வு காண முயலாமல் இந்திய அரச வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பது கண்டனத்துக்கு உரியது - என்றுள்ளது. (ஐ-10)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மருத்துவமனையில்

திருகோணமலை, ஜூலை 9
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மஹதிவுல்வெவப் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
திருகோணமலை மஹதிவுல்வெவப் பகுதியில் நேற்று பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 70 வயதுடைய தாயார், அவரது மகன், மருமகள் ஆகியோர் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.
வீட்டுக்கு மேல் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர்த் தாங்கியைச் சுத்தப்படுத்தும் போது, அருகிலிருந்த குளவிக் கூடு கலைந்ததால் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
குளவிக் கொட்டுக்கு இலக்கான கணவன், மனைவி மஹதிவுல்வெவ பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 70 வயதுடைய தாயார் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலைப் பொது மருத்துமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-10.45)

# சாரணர் சின்ன நூற்றாண்டு விழா மட்டக்களப்பில் நேற்று ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூலை 9
சாரணர் இயக்கத்தின் நட்சத்திரச் சின்னத்துக்கான நூற்றாண்டு விழா நேற்று மட்டக்களப்பில் வைப வரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரும் மாவட்ட சாரணர் ஆணையாளருமான கே. பாஸ்கரன் தலைமையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நாடளாவிய ரீதியில் தெரிவான 100 சாரணர்களுக்கு நட்சத்திரச் சின்னம் அணிவிக்கப்பட்டது.





இதன்போது மாணவர்களின் நடனம் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த மாநாட்டில் மூத்த சாரணர் ஆணையாளர் பேராசிரியர் நிமல் சில்வா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். நாடளாவிய ரீதியில் 300 சாரணர்கள் கலந்து கொண்டனர். இலங்கையின் சாரணர் வரலாற்றில் அதிகமானோருக்கு சின்னம் சூட்டப்பட்ட முதல் நிகழ்வு இதுவென்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



# வடக்கில் சில இடங்களில் காற்றுடன் மழை

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கில் குறிப்பிட்ட சில இடங்களில் நேற்று சில மணி நேரம் கடும் மழை பொழிந்தது. மழையுடன் காற்றும் வீசியதால் கட்டடங்கள் சிலவற்றுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. தற்போது நிலவும் வறட்சியான காலநிலையில் திடீரென மழை பெய்ததால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.
தென்மராட்சிப்பகுதியில் கடும் காற்றுடன் பெருமழை நேற்றுக் கொட்டித் தீர்த்தது. சுமார் 45 மணி நேரம் நீடித்த மழையால் விவசாயிகள் உட்பட பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்று பகல் 10.45 மணிக்கு ஆரம்பமான மழை சுமார் 45 நிமிடங்கள் வரை நீடித்தது. திடீரென வீசிய கடும் காற்றால் பயன் தரு மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பல இடங்களில் தென்னை மற்றும் பனை மரங்கள் முறிந்து சாலையோரங்களில் வீழ்ந்தன. மின்சார கம்பிகள், தொலைத் தொடர்புக் கம்பிகள் அறுந்து தொங்கிய நிலையில் சாலைகளில் காணப்பட்டன . இந்த மழை தொடர்ந்து பெய்ததால் பல இடங்களில் வெள்ளமும் தேங்கி நின்றது. சாலைகளின் குறுக்கே பெரிய மரங்கள் வீழ்ந்து காணப்பட்டதால் போக்குவரத்துத் தடைகளும் ஏற்பட்டன. பெருங்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் பெரிய தென்னை மரம் முறிந்து மின்சார கம்பிகளில் வீழ்ந்ததில் சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு மின்கம்பிகள் அறுந்து தொங்கிய வண்ணம் காணப்பட்டன. நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு அருகில் நடப்பட்டிருந்த 100 அடி விளம்பரப்பலகை அடியுடன் சாய்ந்து அருகில் உள்ள வெதுப்பகத்தின் மீது வீழ்ந்து காணப்பட்டது. நுணாவில் மேற்கில் உள்ள சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தின் கூரைத் தகடுகள் சில கடும் காற்றால் தூக்கி வீசப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு திடீரென வீசிய கடும் காற்றால் பல பாதிப்புக்கள் ஏற்படுத்திய போதிலும் தெய்வாதீனமாகப் பொதுமக்களுக்கு எந்தப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.



அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆரம்பித்த மழை சுமார் பத்து நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகப் பெய்தது.
சில மணி நேரம் மட்டுமே மழை நீடித்தது. தொடர்ந்தும் அங்கு இலேசான மழை பெய்து வருவதால் மாவட்டம் முழுவதும் மழை பொழியும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர். (ஐ-9.6-131)

## வெளிநாட்டுச் சிகரெட்டுக்களுடன் சந்தேகநபர் கைது

அம்பாறை, ஜூலை 9
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தீர்வை செலுத்தப்படாத டொப் ரக மௌன்டென் 310 சிகரெட்டுக்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் அம்பாறை, சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நிந்தவூர் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.
சிகரெட்டுக்களை அவர் விற்பனைக்காக வைத்திருந்த வேளையில், பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ-10)



வரலாற்றுச் சிறப்பு மிக்க [illegible] ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று [illegible] இடம்பெற்றது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இராணுவத்தின் ஏற்பாட்டில் பூநகரியில் மருத்துவமுகாம்

கிளிநொச்சி, ஜூலை 9
கிளிநொச்சி மாவட்ட இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் பூநகரி மத்திய கல்லூரியில் மாபெரும் மருத்துவ முகாம் நேற்று நடத்தப்பட்டது. மருத்துவர் லக்ஷ்மன்எல்.வீரசேனதலைமையிலான மருத்துவ குழுவினர், மற்றும்கிளிநொச்சிசுகாதாரமருத்துவ சேவைகள் திணைக்களம், இராணுவ மருத்துவக் குழுவினர் இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தினர்.
சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் இந்த மருத்துவ முகாமில் பயன்பெற்றனர். வெளி நோயாளர்பிரிவு, மருத்துவபரிசோதனைகள், மலேரியா தொற்றுப் பரிசோதனை உள்ளிட்ட மருத்துவ சேவைகள் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

(ஐ-10, 35)

## வடிகாலுக்குள் கழிவு நீர் 6பேருக்கு எதிராக வழக்கு

அம்பாறை, ஜூலை 9
வடிகாலுக்குள் வீட்டுக் கழிவு நீரை விட்டு சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் 6 நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று சம்மாந்துறை பொலிஸ் நிலைய சுற்று சூழல் பாதுகாப்பு பொறுப்பதிகாரி எம். எஸ். அப்துல் மஜீத் தெரிவித்தார்.
அம்பாறை, சம்மாந்துறைபிரதேசத்தில் சிலர் வீட்டுக் கழிவு நீரை மிகவும்சூட்சுமமான முறையில்வடிகாலுக்குள்விட்டதால்அந்தப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசி வருவதோடு, சுகாதாரத்துக்கும் பெரும் பங்கம் ஏற்படுவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.
அதையடுத்து பொலிஸார் மற்றும் பொதுசுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது, வடிகாலுக்குள்கழிவுநீரைசெலுத்திய நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.
கழிவு நீரை அகற்றிய குழாய் மற்றும் உபகரணங்களும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.
இந்த நபர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 8 நபர்கள் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-10)

# சட்டத்துறையே தமிழருக்குப் பலம்

## அமைச்சர் துரைராசசிங்கம் சுட்டிக்காட்டு



திருகோணமலை, ஜூலை 9
சட்டத்துறையில் தமிழர்களுக்கென ஒரு பலம் இருப்பதால் தான் அரசால் பல நெருக்கீடுகள் ஏற்படுகின்ற போதும் அதனை எதிர்த்துப் போராட முடிகிறது.
தமிழ் மாணவர்கள் சட்டத்துறையைத்தெரிவுசெய்துஎதிர்காலத்தில் சட்ட வல்லுநர்களாக உருவாக வேண்டும். அதன் மூலம் எமது இனத்தின்இருப்பைத்தக்கவைக்க வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண விவசாயஅமைச்சர்கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.
வாழைச்சேனை கிண்ணையடிக் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
மக்களுடைய ஆணை எவ்வாறு இருப்பினும் பரவாயில்லை. அதிகாரம் வேறு ஒருவருடைய கைகளில் இருந்ததன் காரணமாக அந்தஅதிகாரத்துக்குஏற்றவிதத்தில் நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகத் தான்கல்விப்புலத்தில்பலஇறுக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.
கல்விப் புலத்தில் இடம்பெறுகின்ற இடமாற்றம் என்கின்ற விடயங்கள் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கின்ற அல்லது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகளுக்கு எல்லாம் அப்பால் அந்தவிதிகளையெல்லாம்புறந்தள்ளித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர் நியமனங்கள் ஒழுங்காகக் கிடைக்கும். ஆனால்நியமனத்தின்பின்புஆசிரியர்கள்தற்காலிகஇடமாற்றம்என்று கூறிச்சென்றுவிடுவார்கள். ஆனால் அவர்களுக்கான சம்பளங்கள் எல்லாம் அவர்கள் நியமனம் பெற்ற பாடசாலைகளிலேயே இருக்கும். அவர்கள் அங்கு கடமை புரிவதில்லை. இது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இருக்கின்ற உயர் அதிகாரிகளின் வித்துவம்.
கிழக்கு மாகாணக் கல்வியைப் பொறுத்த மட்டில் ஒரு செயற்கையான நிலைமையில் எல்லாவற்றையும்கையாளுகின்றஒருசெயற்பாடு இங்கு இடம்பெறுகின்றது. பாடசாலை மாணவர்களின் சித்தியடைந்த விகிதாசாரத்தைக் கூட்டிக்காட்டவேண்டும்என்பதற்காகக் கல்வி அளித்தல் தொடர்பாக இருக்கின்றஅடிப்படைவிதி. எல்லாமாணவர்களுக்கும்கல்விவழங்கவேண்டும். அதிலும்மெல்லக்கற்போருக்கு இன்னும்கூடுதலானகவனத்துடன் கல்விவழங்கவேண்டும்என்கின்ற விடயங்களை யெல்லாம் புறந்தள்ளித் திறமையான மாணவர்களை மட்டும் தனியாக எடுத்து மாணவர்தொகையைக்குறைத்து பரீட்சைப்பெறுபேற்றில்முதன்மை பெறவேண்டும்என்கின்றசெயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவை இயற்கையானவிடயங்கள்அல்ல. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் புள்ளி விபரங்கள் ஒவ்வொரு இடத்துக்கு வித்தியாசமான முறையில்காட்டப்படுகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனால் கிழக்குமாகாணத்தில்தேவையான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். ஆனால் எந்தவொரு விதத்திலும் அது இல்லாது காட்டப்படுகின்றது.
வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றதைப் போல் செய்ய முடியாது. ஒவ்வொருவரையும் அரவணைத்துக் கொண்டு செல்ல வேண்டும்.
அதற்கேற்ற விதத்திலான அணுகு முறைகளைக் கையாண்டு மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.
-என்றார்.

(ஐ-10)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. அதிகாலை மூன்று மணிக்கு ஆரம்பமான அபிஷேகம் மற்றும் சிறப்புப் பூசைகளைத் தொடர்ந்து காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபபூசை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பெருந்திரளான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் அம்மன் வீதி உலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தார்.

(ஐ-37)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் முதன்மைச் சுற்றுலா மையமாக மாறுகிறது மன்னார்

கொழும்பு, ஜூலை 9
வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டம் முதன்மைச் சுற்றுலா மையமாக மாற்றப்படவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சை மேற்கோள் காட்டி சீனச் செய்தி நிறுவனமான சின்ஹுவா செய்தி வெளியிட்டுள்ளது.
பிரபலமான மடுத் தேவாலயம், வில்பத்து தேசிய பூங்கா உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல்வேறு இடங்களை மன்னார் மாவட்டம் கொண்டிருக்கிறது.
மேலும் சுற்றுலாப் பயணிகளை கவரும் பல இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.
சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மாவட்டமாக, மன்னாரை மாற்றும வகையில், பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
கடற்கரையுடன் இணைந்த 300 ஏக்கர் பகுதி அடையாளம் காணப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. (த)

# ஆண்டு நிறைவு விழாவும் மாடிக் கட்டடத்திறப்பும் இன்று

யாழ்ப்பாணம்.ஜூலை.9
சிவபூமி பாடசாலையின் 14ஆம் ஆண்டு நிறைவு விழாவும் புதிய மேல்மாடிக் கட்டடத் திறப்பு விழாவும் இன்று 9.30 மணிக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.
சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தொழிலதிபர் செல்வி. அ. றூபா அருளானந்தம். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் சு.ரவிராஜ். மதிப்புறு விருந்தினராக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் ந. சரணவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (21,12)

## லயன்ஸ் கழக பதவியேற்பும் ஆண்டு விழாவும் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் 45ஆவது செயற்குழுவின் பதவியேற்பு நிகழ்வும் 44 ஆவது பட்டய ஆண்டு விழாவும் யாழ்ப்பாணம் லொயலாஸ் திருமண மண்டபத்தில் இன்று முற்பகல் 10.30மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இரண்டாவது மாவட்ட ஆளுநர் லயன்.ஏ.மகேந்திரன் தம்பதியினர் கலந்து கொள்வர். புதிய செயற்குழுவின் தலைவராக செ.மகாலிங்கமும், செயலாளராக லயன் த. அன்பானந்தனும், பொருளாராக லயன் எப். றிபெலும் பதவியேற்கவுள்ளனர் என்று லயன் கழகத்தலைவர் லயன் லொயலாஸ் தெரிவித்தார். (4,12)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பும் இன்று

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.
பாடசாலையின் கதிர்காமசேகரம் திறந்த வெளியரங்கில் கல்லூரி முதல்வர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பிரதித் தலைமைச் செயலர் உ.சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபனும் கலந்துகொள்வர். நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர் கெ.இந்திரமோகன் நிகழ்த்துவார். (4)

## நல்லூரான் திருவிழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு சமயப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 9
நல்லூர்க் கந்த சுவாமி ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சைவ சமய போட்டிப்பரீட்சைகளை நடத்தவுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் தகவல் வழங்கும் உத்தயோகத்தர் ச.லோகசிவம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் தரம் 6 முதல் 11 வரையான 21 ஆயிரத்து 735 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இந்தப் பரீட்சைகள் யாவும் பாடசாலைகளில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். பரீடசையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டின் போது கௌரவிக்கப்படவுள்ளனர் - என்றார். (21,ரி)

## ஆசிரியரின் இறுதி ஊர்வலம் இன்று 12 மணிக்கு ஒன்று கூடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மூத்த ஆசிரியர் சு.சாந்தகுமாரின் இறுதிக் கிரியை கந்தரோடையில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து ஊர்வலம் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளதாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எம்.இந்திரபாலா தெரிவித்தார்.
இறுதி ஊர்வலத்தில் சாரணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியினர், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியேரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளார். அதற்காக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று மதியம் 12 மணிக்கு ஒன்றுகூடவும்.
நோய் காரணமாக உயிரிழந்த சாந்தகுமார் வரலாற்றுப் பாட மூத்த ஆசிரியர் என்று அதிபர் மேலும் தெரிவித்தார். (4,8)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று

சாவகச்சேரி டிபிஎம்எஸ் கணினிக் கல்வி நிறுவனத்தின் ஐந்தாவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறும்.
நிறுவன இயக்குநர் மு.றுக்சாந் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குத் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கலந்து கொள்வார். (4,9)

## யோகா பயிற்சி நெறிக்கான அறிமுக நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்.ஜூலை 9
புதிய யோகா பயிற்சி நெறிக்கான அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் நல்லூரில் இன்று மாலை 4.30மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
யோகா உலகம் அமைப்பின் பொதுச்செயலாளர் சோ.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரனின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் யோகா எனும் தொனிப்பொருளிலான கருத்துரையும், யோகா உலகம் அமைப்பின் இயக்குனர் எஸ். உமாசுதனின் யோகா கலையின் சிறப்புப் பற்றிய கருத்துரையும் இடம்பெறும். தொடர்ந்து பிராணாயாமமும் குண்டலினியும் என்ற நூல் அறிமுகமும் இடம்பெறும்.
யோகா பயிற்சிகள் இரண்டு மாதங்கள் தினமும் காலை 6மணி தொடக்கம் 7மணிவரைக்கும், 2ஆவது பயிற்சி நெறி மாலை 4.30 மணி தொடக்கம் 5.30மணி வரைக்கும், 3ஆவது பயிற்சி நெறி மாலை 6மணிதொடக்கம் இரவு 7மணிவரைக்கும், 4ஆவது பயிற்சி நெறி இரவு 7மணிதொடக்கம் 8 மணிவரைக்கும் நல்லூர்த்தேரடி அருகே 63 நாயன்மார்கள் குருபூசை மடத்தில் நடைபெறும். என்றும் தெரிவிக்கப்பட்டது. (21,12)

## சங்குமுழுக்கு நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை 9
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சிவஞான வைரவர் ஆலய வருடாந்த 1008 சங்குமுழுக்கு நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கிரியைகளு டன் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
வைரவப் பெருமான் முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் ஆலயத்தில் இருந்து வீதியுலாவாகச் சென்று கே.கே.எஸ்.வீதியூடாக தட்டாதெருச் சந்தியால் அரசடி வீதி வழியாக வந்து கஸ்தூரியார் வீதி வழியாகக் கல்லூரியின் ஆலயத்தை வந்தடைவார் என அறிவிக்கப்பட்டது. (21)

## தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாண போதனா மருத்துவ மனை வளாகத்தினுள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டதாக மருத்துவ மனையின் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
இதனை உரியவர்கள் அடையாளம் காட்டி மருத்துவமனையின் காசாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (21,ரி)

## கற்றல் செயற்பாடுகள் நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம்.ஜூலை 9
யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் கற்றல்ச் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை வழமைபோன்று நடைபெறும் என கல்லூரியின் அதிபர் எஸ். லோகேஸ்வரன் தெரிவித்தார். (21,12)

## பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 9
முத்துத்தம்பி மகா வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு நாளை திங்கட்கிழமை மதியம் ஒரு மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் ஆர். பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (21,ரி)

# மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணக் கல்வி வலய மாணவர் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நாடாளுமன்ற செயலாளரும் யாழ்ப்பாண வ்லயக் கல்விப் பணிப்பாளருமான ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அழகுசுந்தரம் கிருபாகரனும் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி, பண மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் தெற்கைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.
"யாழ்ப்பாணம், கைதடியைச் சேர்ந்த பெண்ணொருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து அவரிடம் இருந்து 6 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தை எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பெற்றுள்ளார். அதன் பின்னர் குறித்த பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்காமல் அவர் ஏமாற்றி வந்துள்ளதுடன், பணத்தையும் திருப்பிக் கொடுக்காமல் இழுத்தடித்துள்ளார். இதனால் பாதிக்கப்பட்ட கைதடியைச் சேர்ந்த பெண், யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
அந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார்" என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (21,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவை மடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்த நிலையில், தமிழக மீனவர்கள் அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடானது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ள தென இராமேஸ்வர மீனவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சட்டம் தொடர்பில் இந்திய மத்திய அரசு இலங்கையுடன் பேச்சு நடத்தி உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென தமிழக மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள், தடை செய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடி முறைகளை பயன்படுத்துவதால் கடல் வளம் முற்றாக அழிவடையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதோடு, வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இழுவைமடி மீன்பிடி முறையைத் தடுக்கும் சட்டவரைவு கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)


Vacancy for
**Senior Software Engineer (.NET Full-stack)**

TECHNICAL REQU!REMENTS
Minimum 2 years of hands on experience must in
- .NET technologies (MUST)
( **C#.Net, ASP.Net, MVC, LINQ, XML, XSL, Threading**).
- MS SQL database design and development.
- Experiance in front-end technologies **AngularJs, Angular 2**, KnowkoutJs, ReactJs,HTML, CSS, Javascript, Jquery.
- Experiance in distributed application development ( REST, WCF, Web API, Web Service ).
- Experiance with TFS
- Excelent understanding of OOA & OOD.
- Exposure to AGILE / SCRUM development methodology.
- Your exams and interview will be through Skype

**Please apply only if you satisfy these requirements**

**Reliance Network Solutions (Pvt) Ltd** is an Australian software venture building applications since 1999 and established its main development facilities in Sri Lanka in 2007 with a strong customer base in Australia and Europe
Join Our Family Forward your CV to:
**info@reliancenetworks.com.au**
**Call : Shanjeev 0779261129**
RELIANCE
NETWORK SOLUTIONS (PVT)LTD

**E.S Printers**
Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch | Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print | Book Printing | Mouse Pad Print



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற.
வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.



357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471 / 021 492 7472

## வீடு விற்பனைக்குண்டு
தொட்டிலடி சங்கானைப் பகுதியில் பிரதான வீதிக்கருகில் 4பரப்புக் காணியுடன் சகல வசதி கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு.
**077 972 5918/077 795 8445**

## வேலையாள்கள் தேவை
நல்லூர் பிரதேசத்தில் பான்சி கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள பெண் வேலைக்கு தேவை. தையல் அனுபவமும் விரும்பத்தக்கது.
**077 620 0727/ 077 604 7459**

## வீடு /காணி விற்பனைக்கு
கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் புதிய வீட்டுடன் கூடிய 2 ஏக்கர் மேட்டுக்காணியும் 3 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. மாறாத விலை 83 இலட்சம்.
**076 660 4584**

## பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம், கந்தர்மடம், நல்லூரடியில் வீட்டுவேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
(காலை வந்து மாலை போகலாம். அல்லது தங்கியும் நிற்கலாம்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
**076 851 4296**

## தேவை
பெண் வேலையாள்கள் தேவை. வயது 35 இற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். (மாலை கட்டத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)
**077 400 5023**

## Vacancy
தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, நுகேகொடை, கிருலப்பனை, ரத்மலானை மேலும் பல இடங்களில் உள்ள எமது தனியார் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு அதிகாரிகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். வயது 60இற்கு உட்பட்டவர்கள். உணவு, தங்குமிடம் செய்து தரப்படும். முன்னனுபவம் தேவையில்லை. பயிற்சி அளிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு உடன் அழைக்கவும்.
**072 699 9886/072 720 0005/011 721 4444**
292B2/1, Havelock Road, Colombo - 05

## வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்துக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.
✓ **சிம்காட்**, Kit Card **விற்பனை செய்வதற்கு**
✓ **கணினி அறிவுடையோர்**
✓ **சிட்டை எழுதுநர்**
✓ **விற்பனையாளர் தேவை.**
**தகைமை :-** (O/L, A/L) இருபாலரும் தொடர்பு கொள்ளவும்.
**076 851 4296**

## முதலீட்டாளர் தேவை
இலங்கையின் வட பகுதியில் (யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சியில்)
Palm Oil (மரக்கறி எண்ணெய்) மற்றும் தேங்காய் எண்ணெய்
வியாபாரத்தின் தாங்கிகள் (Tanks) அமைத்து புதிய இலச்சினையில் (New Brand) வடபகுதி பூராகவும் வியாபாரத்தில் ஈடுபட சிறந்த முதலீட்டாளர்கள் தேவை.
- கொழும்பிலிருந்து நேரடியாக கொள்கலன்களில் விநியோகிக்க முடியும் அல்லது மலேசியாவிலிருந்து இறக்குமதி ஒழுங்கு செய்து தரவும் முடியும்.
- இது சம்பந்தமான அமைப்பு முறை, விநியோக முறை, வியாபார திட்டமிடல், இறக்குமதி ஒழுங்குகள் செய்து தரப்படும்.

K.Vivekananthan
Wellawatte, Colombo, Sri Lanka.

## தேவை
வெள்ளவத்தை - Communication, Phone Shop ஒன்றுக்கு காசாளர், Phone Technician (Software, Hardware), Laptop Technician உடன் தேவை. அனுபவத்துக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். (CS 0508) (14)
**071 619 0562**

## காணி விற்பனைக்கு
சாவகச்சேரி - பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடா வில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500M மீற்றர் தூரத்திலும் ஆண், பெண் பாடசாலைகள், தபாற்கந்தோர், புகையிரத நிலையம், சந்தை முதலியவற்றிலிருந்து நடந்து செல்லக் கூடிய தூரத்தில் பஸ் வசதியுடனும்) அமைந்துள்ள 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. துண்டங்களாகவோ (வரைபடமுள்ளது) முழுமையாகவோ விரும்பியபடிவாங்க முடியும். உடனே தொடர்பு கொள்ளுங்கள் : திருமதி யோகா நாகேந்திரம் கெருடாவில் கந்தசாமி கோயில் அருகில், பருத்தித்துறை வீதி, கெருடாவில் , சாவகச்சேரி
தொலைபேசி இல **077 160 1115**
விலை பேசித் தீர்மானிக்கலாம். (வீதி ஓரமாக எனில் பரப்பு $3\frac{1}{2}$ லட்சம், பின்பகுதி எனில் பரப்பு $2\frac{1}{2}$ லட்சம்)

## காணி விற்பனைக்கு
கொல்லன் கலட்டி றோட் தெல்லிப்பழை (குகன் டிஸ்பென்சரி வளவு) $5\frac{1}{2}$ பரப்பு நிந்த கிணறுடன் கூடிய காணி உடனடி விற்பனைக்கு.
**076 677 8468** ( Mrs. Yasotharadevi )

## விற்பனைக்கு
L.G.தயாரிப்பான புத்தம் புதிய Electrical goods உடனடி விற்பனைக்கு. Smart TV (42") Fridge, Washing Machine, கம்பனி விலையிலிருந்து 10% முதல் 15% வரையான விலைக்கழிவு வழங்கப்படும்.
**077 774 4312 / 077 155 5532**

## வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ் தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8, புகையிரதவீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
**011 250 4281, 071 299 1256**

## காணி விற்பனைக்கு
வறுத்தலைவிழான் தெல்லிப்பழை
வறுத்தலை விழான் தெல்லிப்பழையில் 37 பரப்பு 17 குழிகள் காணி விற்பனைக்கு உள்ளது. இக் காணி தெல்லிப்பழைப் புகையிரத நிலைய வீதியில் அரசாங்க வைத்திய சாலையில் இருந்து ½ கிலோ மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் உள்ளது. நீர்வளம் உள்ள கிணறும் தோட்டச் செய்கைக்கு ஏற்ற செம்மண் தரையும் உடைய இக்காணி வீடு கட்டங்கள் அமைப்பதற்கும் ஏற்றது.
**077 600 8818**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

CCIY

## யாழ்ப்பாணம் வர்த்தகதொழில்துறை மன்றத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. கணக்கு உதவியாளர் - 01 (Account Assistant)
- A/L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்து கணக்கியல் துறையில் டிப்புளோமா கற்கைகள் எதனையும் பூர்த்தி செய்தவராகவோ அல்லது நீண்டகாலம் கணக்கு உதவியாளராக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பணிபுரிந்தவராகவோ அல்லது கணக்காய்வு நிறுவனமொன்றில் பயிற்றப்பட்டவராகவோ இருத்தல் விரும்பத்தக்கது.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.
- ஆவணங்கள் அனைத்தும் ஆங்கிலமொழியில் பேணப்படல் வேண்டும்.

2. திட்டஉதவியாளர் - 01(Project Assistant)
- திட்டஅமுலாக்கல் அனுபவம் விரும்பத்தக்கது.
- திட்டங்களுடன் தொடர்புடைய இதரசெயற்பாட்டில் ஈடுபட்டஅனுபவம் விரும்பத்தக்கது.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.
- ஆவணங்கள் அனைத்தும் ஆங்கிலமொழியில் பேணப்படல் வேண்டும்.

விண்ணப்பிக்கதகுதியுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் ஏனைய தகமைச் சான்றிதழ்களின் பிரதிகளினையும் இணைத்துஎதிர்வரும் 20.07.2017ம் திகதிக்கு முன்னதாக கீழ்குறிப்பிடப்படும் எமதுமன்றத்தின் விலாசத்திற்கு மின்னஞ்சல் (jaffnacciy@gmail.com) மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைவர்.**
**யாழ்ப்பாணம் வர்த்தகதொழில்துறைமன்றம்,**
**இல.106. பலாலிவீதி,கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**மன்றத்தினரால் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுதகுதியானவர்கள் மட்டும் நேர்காணலிற்கு அழைக்கப்படுவர்.**
**நேர்காணலின் போது ஏனைய விடயங்கள் ஆராயப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைச் சந்திக்க வேண்டும் என்று நாடாளு மன்றக் குழுக்க ளின் பிரதித் தலைவர் செல் வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகா சங்கத்தினருக்கு அரசமைப்புத் தயா ரிப்பு பற்றித் தவறான புரிதல் ஏற்பட்டிருக் கலாம். எனவே கூட்டமைப்பின் தலைவ ரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம் பந்தன் மகா சங்கத்தினரைச் சந்திக்க வேண் டும் என நான் கோரி யிருக்கிறேன்.

தமிழ் மக்கள் தங்க ளின் அபிலாசைகள் புதிய அரசமைப்பின் ஊடாக பூர்த்தி செய் யப்படும் என்ற எதிர் பார்ப்புடன் இருக்கின் றனர். பிரதான நிக்கா யாக்கள்கூட்டாகஒன்றி ணைந்து புதிய அரச மைப்போ அல்லது தற்போதைய அரச மைப்பில் மாற்றங்க ளையோ செய்யக்கூ டாது எனக் கூறியி ருப்பது மக்களை அதிர்ச்சிக்கு உள் ளாக்கியுள்ளது.

பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் தாமாக முன்வந்து தேசிய அரசாக ஆட்சி யில் அமர்ந்து முற் போக்குச் சிந்த னை யுடன் இந்தச் செயற் பாடுகளை முன்னெ டுத்து வந்திருக்கின் றன. தமிழ் மக்கள் இதற்கே ஆணை வழங்கியிருந்தனர். அவ்வாறிருக்கை யில்தற்போதுபௌத்த சமயத்தலைவர்கள் இவ்வாறான அறி விப்பை விடுத்தி ருப்பது தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

சமயத்தலைவர்கள் இந்த நாட்டின் அனைத் துக் குடிமக்களுக்கும் பொதுவானவர்கள். அவர்களைச் சந்தித்து எமது நிலைப்பாடு களை தெளிவுபடுத்துவதன் ஊடாகத் தற் போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடியை மாற்றியமைக்க முடியும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆகவே விரைவில் எதிர்க் கட்சித்தலைவர் மகாநாயக்கர்களைச் சந்திக் கவேண்டும் - என்றார். (த)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# குப்பி விளக்குத் தீயால் குடும்பத் தலைவர் சாவு


யாழ்ப்பாணம், ஜூலை 9
குப்பி விளக்குத் தட்டுப்பட்டுத் தீப்பற்றி எரிகாயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தார்.
குஞ்சுக்குளம் மன்னாரில் கடந்த 21 ஆம் திகதி தீ பற்றியது. அதே இடத்தைச் சேர்ந்த தேவசகாயம் அலெக்சாண்டர் (வயது - 30) என்பவரே உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை.
தலைச்சுற்று ஏற்பட்டுக் குறித்த குடும்பத் தலைவர் சரிந்தபோது அருகிலிருந்த குப்பி விளக்குத் தட்டுப்பட்டுத் தீப் பற்றியது. அதனால்அவர்எரிகாயமடைந்தார். மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார். சிகிச்சை பயனளிக்காது நேற்றுஅதிகாலை 4 மணியளவில் அவர் உயிரிழந்தார். பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் ஆகியோர் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டது. (4,8)

# குறைபாடுகளை நீக்குவதற்காகவே புதிய அரசமைப்பை கோருகின்றோம்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 9
தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் குறைபாடுகள் உள்ளமையினாலேயே மக்கள் புதியதொரு அரசமைப்பைக் கோரி நிற்பதாக கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.
அத்துடன், அரசமைப்பில்சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதகமான விடயங்கள் உள்ளமையினாலேயே பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்எனவும் அவர் குறிப்பிட்டார்.
புதிய அரசமைப்புத் தொடர்பில் நாட்டில் உருவாகியுள்ள கருத்தாடல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அதிகாரப் பகிர்வு தொடர்பான தவறான தோற்றப்பாடு நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதால் நாட்டின் அனைத்து மக்களும் அதில் நன்மையடைவார்கள்.
அதிகாரப் பகிர்வின் ஊடாக இந்த நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தவும் நிர்வாகக் கட்டமைப்பைப் பலப்படுத்தவும் முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.
இன்று அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்படாமையினால் பல மாகாணங்களில் உள்ள வளங்கள் பயன்படுத்தப்படாமலே அழிந்து போகக்கூடிய நிலமை உள்ளது. குறித்த பகுதிகளில் உள்ள வளங்கள் தொடர்பில் அந்த மாகாணத்திலுள்ளவர்களுக்கே அதிகம் தெரியும் என்பதால் அவற்றை நிர்வகிக்கும் அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் அவற்றினூடாக அதிக பலனை இந்த நாட்டு மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.
அதிகாரம் பகிரப்படுவது என்பது நாட்டைப் பிரிப்பது எனப் பொருள் கொள்ளலாகாது என்பதுடன் அதிகாரப் பகிர்வின் ஊடாக அனைத்துப் பகுதிகளிலுமுள்ள மக்களின் அபிலாசைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய சூழலை நம் நாட்டில் உருவாக்க முடியும்
அத்துடன், அதிகாரப் பகிர்வின் ஊடாக நாடு பிளவுபடும் என்ற கருத்து முட்டாள்தனமானது என்பதையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.
அதிகாரம் வெறுமனே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வழங்கப்படப் போவதில்லை. தெற்கு, மேற்கு மற்றும் மத்திய உள்ளிட்ட அனைத்து மாகாணங்களுக்கும் வழங்கப்படும்.
வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்கள் இந்த நாட்டுக்கு எதிரிகளல்லர். அவர்களும் இந்த நாட்டை நேசிப்பவர்கள் தான். இன்று முடக்கப்பட்டுள்ள அதிகாரங்களால் நிர்வாக ரீதியாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் அவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றார்கள். இதே சவால்களை அம்பாந்தோட்டையில் வாழ்பவர்கள் கதிர்காமத்தில் உள்ளவர்கள் அக்குரணையில் உள்ளவர்கள் என அனைவரும் எதிர்கொள்கிறார்கள்,
அதிகாரம் கொழும்பில் முடங்கியுள்ளதாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது கொழும்பிலுள்ள அதிகாரத்தை ஏன் மட்டக்களப்புக்கு, அம்பாந்தோட்டைக்கு, யாழ்ப்பாணத்துக்கு, காலிக்கு, பொலனறுவைக்கு, குருணாகலுக்கு வழங்குவதில் ஏன் இந்த தயக்கம் என்று தான் நாம் கேட்கின்றோம். எனவே, அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டின் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அனைவருக்கும் சுதந்திரமாக தமது உரிமைகளை அனுபவிக்கக் கூடிய அரசமைப்பை உருவாக்க முன்வர வேண்டும்- என்றார். (த)

## கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்



தோற்றம் 15 . 10 . 1973
மறைவு 07 . 07 . 2017

**சுவாமிநாதன் சாந்தகுமார்**
*(அரசியல் விஞ்ஞான பாட ஆசிரியர்)*

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் பிரபல சமூக சேவையாளருமாகிய சுவாமிநாதன் சாந்தகுமார் அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாருக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.**

## ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சுவாமிநாதன் சாந்தகுமார்**
(ஆசிரியர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி)

சின்ன வயதில் சிந்திக்க வைத்துவிட்டு சிறகடித்துச் சென்றாயே சாந்தன்
சிரித்து சிரித்து மற்றவர்களை மகிழ வைத்துவிட்டு
உந்தன் குடும்பத்தினர் உறவுகளை ஆறாத துயரில்
ஆழ்த்திவிட்டுச் சென்றாயே சாந்தன்

உனை இழந்து தவிக்கும் அன்பான குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். உந்தன் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குமரகுருநாதன் குடும்பத்தினர்.**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02 . 06 . 1966
ஆண்டவன் அடியில் 09 . 07 . 2010

**அமரர் கந்தையா சிவகுமார்**

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய் வாழ்ந்து வழிகாட்டிய
எமது அன்பின் குல விளக்கே
அவனிதனில் எமை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன
ஆனால் நீர் எம் மனதைவிட்டு என்றுமே நீங்கவில்லை.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

சி.கந்தையா (தந்தை),
க.வாமதேவி (தாய்),
சகோதரர்கள், உறவினர்கள்.

## நினைவஞ்சலி

பதினொராம் ஆண்டு



தோற்றம் 03.08.1931
மறைவு 26.04.2006

**அமரர் நாகலிங்கம் பரம்சோதி**
(முன்னாள் உப்பு கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)
பூர்வபட்ச சதுர்தசி

மூன்றாம் ஆண்டு



தோற்றம் 31.05.1933
மறைவு 13.07.2014

**திருமதி றெஜீனா கனகம்மா பரம்சோதி**
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)
அமரபட்ச பிரதமை

தனித்துவம் நிறைந்தவர்களே! அன்பினில் விளைந்த ஆரமுதுகளாய் நீவீர்
என்பும் எமக்கென என்றுமே வாழ்ந்தீர்களே!
பன்முக நோக்கினிலே பல்வகைக் கருமங்களாற்றி
தன்னலம் கருதாது தனித்துவம் ஆனவர்களே!

பறிஜின்டிசைன்குறூப்
100, அம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பேரப்பிள்ளைகள்:
தர்மதா மனோகரதாஸ், [illegible] மனோகரதாஸ்
நர்மதா மனோகரதாஸ், [illegible]

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி வள்ளிப்பிள்ளை பரம்சோதி**

அன்னை மடியில் 21.04.1947
இறைவன் அடியில் 03.07.2012

திதி: பூரணை

அத்தனையும்
இழந்தின்று ஆண்டும் ஐந்தாகின்றது!

முத்தென்ன மாணிக்கம் மரகதமும் வைடூரியம்
முழுமையாய் அருகிருந் தாலென்ன எங்களுக்கு
சொத்தோடு முதுசொங்கள் பலவும் சேர்ந்தாலென்ன!
முன்தோன்றும் தெய்வமாம் உங்களுக்கு ஈடாகுமோ!
எத்துணை பெரிதென்று சொல்லியும் வார்த்தையில்லை
எவரெவர் இருந்தாலும் தாயன்பு கிடைக்காதம்மா!
அத்தனையும் இழந்தின்று ஆண்டும் நாலாகின்றது!
அம்மாவுனை இனியெப் பிறவியில் காண்போமோ!

[illegible], கந்தரோடை,
சுன்னாகம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுவரெலியாவில் இடர்களை கட்டுப்படுத்தத் திட்டங்கள்

கொழும்பு, ஜூலை 9

நுவரெலியா மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்களைக் கட்டுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த வருடத்துக்குள் வலப்பனை, ஹங்குராங்கெத்த, அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுகளில் இயற்கை இடர்களைக் கட்டுப்படுத்துவதற்கான 41 வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக, மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அரசு இதற்காக 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## மகிந்த குடும்பத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 9

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிரான பாரதுமானதுமான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசின் தலைவர்கள் ராஜபக்சாக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரணைக்கு உட்படுத்த இணங்கியுள்ளனர் எனவும், எதிர்வரும் மூன்று மாதங்களில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. இந்தநிலையில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு என்பன அரச தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# எட்டு அமைச்சர்கள் மகிந்தவுடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 9

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் 8 பேர், நேற்றுமுன்தினம் மாலை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது,

எதிர்கால அரசியல் நடவடிக்கைககள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கிடையேயான உடன்பாடு நிறைவுக்கு வரவுள்ளது.

அத்துடன், நல்லாட்சியிலிருந்து வெளியேற சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் 18 பேர் தயாராக உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் முன்னாள் அரச தலைவரைச் சந்தித்த அமைச்சர்கள், குறித்த 18 பேரில் உள்ளடங்குபவர்களில் சிலர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கப்பல்களைச் செலுத்தும் பயிற்சியில் இலங்கைக் கடற்படை



கொழும்பு, ஜூலை 9
இந்தியாவிடம் வாங்கப்படும் பெரும் ஆழ்கடல் ரோந்துக் கப்பலைச் செலுத்தும் பயிற்சிகள் மற்றும் சோதனைகளில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாக, அனைத்துலகப் பாதுகாப்பு ஊடகமான 'ஜேன்ஸ் 360" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவிடம் இருந்து இலங்கைக் கடற்படைக்கு 105 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை இலங்கை வாங்கியுள்ளது.

கோவா கப்பல் கட்டும் நிறுவனம் இந்த இரண்டு ரோந்துக் கப்பல்களையும் கட்டியுள்ளது.

இதில் முதலாவது கப்பலுக்கு எஸ் எல்என்எஸ் சயுரால என்று பெயரிடப்பட்டுள்ளது. பி623 என்ற தொடரிலக்கத்துடன் இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படும்.

2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கட்டத் தொடங்கப்பட்ட இந்தக் கப்பல், 2016ஆம் ஆண்டு நடுப் பகுதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது. பி624 என்ற தொடரிலக்கமிடப்பட்டுள்ள இரண்டாவது கப்பல், 2016 டிசெம்பரில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

தற்போது கோவா சென்றுள்ள இலங்கைக் கடற்படை அதிகாரிகள், இந்தக் கப்பலைச் செலுத்தும் பயிற்சிகளை மேற்கொண்டு, இதிலுள்ள கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து வருகின்றனர்.

மேலும், இந்தக் கப்பலில் தேவைப்படும் வசதிகள், மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பாகவும் இவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்தக் கப்பலின் ஆற்றல்கள் தொடர்பாக, தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாக, இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற சங்கல்ப் வகை ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் இந்திய கடலோரக் காவல்படையினால் பயன்படுத்தப்படுகின்றன.

18 அதிகாரிகள் உள்ளிட்ட 118 கடற்படையினர் இதில் பணியாற்றுவர். ஒரு உலங்குவானூர்தி தரையிறங்கும் வசதியைக் கொண்ட இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல், 4500 மைல்கள் வரை சென்று ரோந்துப் பணியில் ஈடுபடக் கூடியதாகும். (த)

# சவாலையும் தாண்டி புதிய அரசமைப்பு வந்தாகவேண்டும்

## மன்னாரில் வலியுறுத்தினார் ஹக்கீம்



மன்னார், ஜூலை 9
புதிய அரசமைப்பு விடயத்தில் மத பீடங்கள் சவால் விட்டாலும் அதனைச் சாதுரியமான முறையில் எதிர்கொண்டு, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு நிறைவேற்றவேண்டுமென சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உலர் வலய நகர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் 2,200 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மன்னார் குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்த பின்னர், எழுத்தூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலைதூக்குவதற்கு மேற்கொள்ளப்படும் எத்தனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரச தலைவரும் தலைமை அமைச்சரும் மிகுந்த பிரயத்தனங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் சட்டவரைவுகளை நிறைவேற்ற வருகின்றபோது, அதனை மீளப் பெறுகின்ற அளவுக்கு மதபீடங்கள் அரசுக்குப் பகிரங்கமாகச்சவால் விட்டுக்கொண்டிருக்கின்றன.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு குறுகிய நோக்கமுடைய சில அரசியல் தலைமைகள் மதபீடங்களை ஊக்குவிக்கின்ற முயற்சிகளைச் செய்து வருகின்றன. அரச தலைவரும் தலைமை அமைச்சரும் இந்தப் பிரச்சினையைச் சுமுகமான முறையில் தீர்க்கின்ற அதேவேளை, நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும்.

மீண்டுமொரு குழப்பநிலையை தோற்றுவித்து, அசம்பாவிதங்கள் நடைபெற்று நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீரழிகின்ற நிலைக்கு கொண்டுவராமல் தடுப்பதற்கான சாதுரியமான முடிவுகளை அரச தலைவரும் தலைமை அமைச்சரும் மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். நாங்கள் அடிக்கடி முரண்பட்டுக் கொண்டாலும், பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம்-என்றார். (த)

# பொய்த் தகவல் பரப்பி அரசியல் நடத்துகின்றது கூட்டு எதிரணி

## கடுமையாகச் சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 9
நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகக் கூட்டு எதிரணி பொய்யான தகவல்களைச் சமூகமயப்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறி கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களின் அபிவிருத்திக்காகச் செயற்படும் அரசின் பயணத்தை சீர்குலைக்கக் கூட்டு எதிர்க்கட்சி கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை வரைவுப்படுத்தப்படாத மற்றும் இறுதி செய்யப்படாத அரசமைப்புச் சட்டம் சம்பந்தமாகப் பல பொய்களைக் கூட்டு எதிர்க்கட்சி சமூகமயப்படுத்த முயற்சித்து வருகிறது.

கூட்டு எதிர்க்கட்சி பௌத்த சங்கச் சபையினரைப் பயன்படுத்தி இதனைச் செய்ய முற்படுகிறது. அரசமைப்புச் சட்டத்தில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது.

அரசு மாத்திரமல்லாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணியும் புதிய அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டு வர இணங்கியுள்ளது.

இதனால், அது சம்பந்தமாக எவரும் அச்சம்கொள்ளதேவையில்லை -என்றார். (த)

## வேலைத் திட்ட உத்தியோகத்தர் (பதவிகள் எண்ணிக்கை:11)

1. வேலைத்திட்ட உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்
2. வேலைத்திட்ட உத்தியோகத்தர் முல்லைத்தீவு
3. வேலைத்திட்ட உத்தியோகத்தர் வவுனியா
4. வேலைத்திட்ட உத்தியோகத்தர் மன்னார்
5. வேலைத்திட்ட உத்தியோகத்தர் கிளிநொச்சி
6. வேலைத்திட்ட உத்தியோகத்தர் மாத்தளை,கண்டி
7. வேலைத்திட்ட உத்தியோகத்தர் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை
8. வேலைத்திட்ட உத்தியோகத்தர் அனுராதபுரம்,பொலனறுவை
9. வேலைத்திட்ட உத்தியோகத்தர் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை

AFRIEL இளைஞர் அமைப்பானது இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை வலுவூட்டுவதற்கு வினைத்திறனுடன் செயற்படும் ஒரு இளம் அமைப்பாகும். இலங்கையில் இளம் சமூகங்களுக்கு ஜனநாயகவழிமுறைகள் ஊடாக நீதிக்கும், நியாயத்திற்கும் செயற்படுவதற்கான கோட்பாடு ரீதியான அறிவையும், செயன்முறை அறிவையும் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் AFRIEL இளைஞர் அமைப்பினால் செயற்படுத்தப் படுகின்றது.

AFRIEL இளைஞர் அமைப்பினால் செயற்படுத்த எதிர்பார்க்கும் பயிற்சி வேலைத் திட்டங்களிலும், மக்கள் விழிப்புணர்வு செயற்றிட்டங்களிலும் இவ் வேலைத்திட்ட உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

### வேலைத்திட்ட உத்தியோகத்தர் பதவிக்குரியகடமைகள்

AFRIEL தொண்டு செயற்பாட்டாளர்களுக்கு மனித உரிமைகள், ஜன்நாயகம்; மோதல் தவிர்ப்பு, தேர்தல் முறைகள் மற்றும் கண்காணிப்பு செயல்முறை, வாக்குரிமை, இலஞ்ச ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மற்றும் அமைப்புக்கள் பற்றிய அறிவினை பெற்றுக் கொடுக்கும் விரிவுரைகளை வழி நடத்துவது.

AFRIEL தொண்டு செயற்பாட்டாளர்களுக்கு மனித உரிமைகள், ஜனநாயகம், மோதல் தவிர்ப்பு, இலஞ் சஊழலுக்கு எதிரான சட்டமும் அமைப்புக்களுக்குமுரிய செயன்முறைப் பயிற்சியில் தெளிவான அறிவைபெற்றுக் கொள்ளும் வகையிலான வேலைத் திட்டங்ளை அமைத்து செயற்படுத்துவது.

வேலைத்திட்ட உத்தியோகத்தரினால் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களின் அறிக்கையிடல் செயற்பாடுகள்.

### எதிர்பார்க்கும் தகமைகள்

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொண்ட பட்டம்.

குறைந்தபட்சம் மனித உரிமைகள் விடயத்தில் இரண்டு வருட முன் அனுபவம்.

நிர்வாக செயற்பாடுகளுக்காக போதிய அளவு கணினி சார்ந்த அறிவு.

விண்ணப்ப பத்திரங்கள் hello@afrielyouthnetwork.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2017-07-15 இற்கு முன்பு அனுப்பி வைக்கவும்.

(சகல விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு சமூகமளிக்க வேண்டியதுடன் அதில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் 15 நாள்கள் பயிற்சியின் பின். சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.)

**தொடர்புகளுக்கு:- 076-6802016** (C/30840)(10)

உமா ஓயா தொடர்பில்

# மைத்திரியின் தீர்மானம் வரவேற்கத்தக்கதொன்று



கொழும்பு, ஜூலை 9
உமா ஓயாத் திட்டம் குறித்து அரச தலைவர் எடுத்துள்ள தீர்மானம் குறித்து தனிப்பட்ட ரீதியில் தான் மகிழ்ச்சியடைவதாகவும் அதனை அரசியல் மயப்படுத்துவதன் மூலம் பண்டாரவளை மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உமா ஓயாத் திட்டம் குறித்து தெளிவுப்படுத்துவதற்காகச் சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவருடன் நடைபெற்ற பேச்சின்போது உமா ஓயா திட்டத்தை நிறுத்துமாறு அமைச்சர்கள் எவரும் கோரிக்கை விடுக்கவில்லை.

கடந்த 2015ஆம் ஆண்டு தற்போதைய அரசு பதவிக்கு வந்த நேரத்தில் உமா ஓயா திட்டத்தின் 15 கிலோ மீற்றர் திட்டத்தில் 4.1 கிலோ மீற்றர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. திட்டத்தின் 48 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தாகத் திட்டப் பணிப்பாளர் அரச தலைவருக்கு அறிவித்திருந்தார்.

அத்துடன் இந்தத் திட்டத்திற்கான பொறுப்பை எந்த வகையிலும் தற்போதைய அரசு ஏற்க முடியாது. எனினும் அரசுக்கு இது தொடர்பான பொறுப்பு உள்ளது.

அரசுக்குள் இருந்து கொண்டு இதனை [illegible] -என்றார். (த)

# மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள்

## கவலைப்படுகிறார் லக்ஸ்மன்

கொழும்பு, ஜூலை 9
அரசியல்வாதிகள் தற்போது பொது மக்களை ஏமாற்றி வருகின்றனர். மக்களும் அவர்களிடம் ஏமாறுகின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை அக்குருகொட பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசியலில் அனைத்தும் கிடைக்கும் இல்லாமலும் போகும். அரசியல் அப்படித்தான். எனினும் அதற்கு வந்தமைக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் தற்போது மக்களை ஏமாற்றுகின்றனர். நாங்கள் மக்களுக்குச் சேவை செய்கின்றோம். இதனால், நாம் நேர்மையாகச் செயற்படவேண்டும்.

டெங்கு நோய் முழு நாட்டைப் பீடித்துள்ளது. அரசியல்வாதிகள், பொது மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து தற்போது வேலை செய்ய வேண்டும். கட்சியை விட நாட்டின் எதிர்காலச் சந்ததியினர் குறித்தே சிந்திக்க வேண்டும்-என்றார். (த)

# சீனப் பெண்ணிடம் கொள்ளை; சாரதியும் மனைவியும் கைது

வெள்ளவத்தைப் பகுதியில் சீனப் பெண்ணொருவரின் பணத்தை திருடிய சம்பவம் தொடர்பாக உமா ஓயாத் திட்டத்தில் தொழில் புரியும் வாகனச் சாரதி ஒருவரையும் அவரது மனைவியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு குடாப்பாடு பிரதே சத்தில் வைத்துச் சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபரின் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளை சம்பவத்தை இந்தப் பெண்ணே நெறிப்படுத்தியுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி இந்த கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. பணத்தைப் பறிகொடுத்த சீனப் பெண், இரவு நேரக் களியாட்ட விடுதிகளுக்கு வரும் நபர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து வந்துள்ளார். சீனப் பெண் 10 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வசித்து வருகிறார். இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னரும் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சாரதி மற்றும் அவரது மனைவி எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கான நிதியத்தையும் ஆயுட் பாதுகாப்பையும் வழங்கும் ஒரே திட்டம்

## Ceylinco Life Degree Saver

மேலதிக விபரங்களுக்கு
**0112 461 461**

செலிங்கோ லைஃப் இன்சூரன்ஸ் லிமிட்டடால் வெளியிடப்பட்டது (PB5183)




**CEYLINCO LIFE®**

வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

செலிங்கோ லைஃப் இன்சூரன்ஸ் லிமிட்டட், செலிங்கோ லைஃப் கோபுரம், 106, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05.
கம்பனிப் பதிவு இல. PB 5183. தொ: (011) 2 461 461 மின்னஞ்சல்: service@ceylife.lk வலைத்தளம்: www.ceylincolife.com

### விற்பனைக்கு

வௌ்ளம்புரம், கொழும்புத்துறையில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும்

**077 663 3722/ 077 809 9047**

### வாடகைத்தாய் தேவை

நல்ல உள்ளம் கொண்ட 31 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் IVF மூலம் செய்தற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் உண்டு. இரகசியம் பேணப்படும்.

**077 637 3804** (C 30146) (14)

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் அறைகள் (Room) வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு : **077 728 3811**

### விற்பனைக்கு

பெரிய, சிறிய சணல் ஆடுகள், பொம்மேரியன் அல்சேசன் நாய்கள், நாய்க்குட்டிகள், மாடுகள் விற்பனைக்குண்டு.

**077 101 6407**

### வேலையாள்கள் தேவை

யாழ்.நகரிலுள்ள பான்சிக்கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
(ஆண்.பெண் இருபாலாரும்)

**077 2899 820**

### தேவை

பல்தேசிய நிறுவனம் ஒன்றின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு
01. விற்பனைப் பிரதிநிதி (DSR)
02. பொதிகள் ஏற்றி இறக்குபவர்கள் இருவர் (02) தேவை. (CS 5532) (14)

**077 362 8944**

### வீடு வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை

யாழ்.நகர எல்லைக்குள் சிறு குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை.

**077 301 3700**

### விற்பனைக்கு

இயங்கிக் கொண்டிருக்கும் இரும்பகத்தின் (ஹாட்வெயார்) பொருள்களும், தளபாடங்களும் விற்பனைக்குண்டு. (CS 5561) (14)

**076 873 8075**

### வான் விற்பனைக்கு

52 - XXXX இலக்கமுடைய கயஸ் வான், செல்மொடல் உடன் விற்பனைக்குண்டு.
விலை - 17,00,000/= (CS 5548) (14)

**077 983 2869**

### குருக்கள் உதவி குருக்கள் பரிசாரகர் தேவை

கொழும்பு-13. ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு குருக்கள், உதவி குருக்கள், பரிசாரகர் (மடப்பள்ளி ஐயர்) தேவை. வீடு வசதி செய்து தரப்படும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி.
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
Tel : 072 244 7606
Fax : 2336033
Email : muguganginthupitiya@gmail.com

## வவுனியா மாவட்டத்தில் பெண்களுக்கான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிலையான பாதையை நோக்கி!!

### பெண்களுக்கான சுய உதவி குழு (Self Helped Group-SHG) செயற்பாட்டின் ஊடாக பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பினை அதிகரித்தல்

- **நீங்கள் வவுனியா மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவரா ?**
- **18 வயதிற்கு மேற்பட்டவரா ?**

அவ்வாறாயின் நீங்களும் பெண்களுக்கான சுய உதவி குழு முயற்சியில் இணைந்து, உங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள, நாங்கள் உங்களுக்கு உதவுகின்றோம்.

உங்கள் சுய உதவி குழு முயற்சியை உருவாக்க / பலப்படுத்த வவுனியா மாவட்டத்தில் FOSDOO பொஸ்டோ தயாராகவுள்ளது.

பொஸ்டோ நிறுவனம் வவுனியா மாவட்டத்தில் 38 கிராமங்களில் ஏறத்தாழ 120 சுய உதவி குழுக்கள் (1000 பெண்கள்) உருவாகுவதற்கும், பலமுள்ள குழுக்களாக இயங்குவதற்கும், தன்னாலான உதவிகளையும் ஊக்குவிப்பினையும் கிராம மக்களுக்கு வழங்கி வருகின்றது.

இச் செயற்பாட்டில் தாங்களும் இணைந்து பயன்பெற விரும்பினால் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**024-2223152 / 0776140971**

எமது நிறுவன ஊழியர்கள் தங்களுடன் தொடர்பு கொண்டு, தாங்களும் இச்செயற்பாட்டினை தங்கள் கிராமத்தில் முன்னெடுப்பதற்கு தங்களுக்கு உதவிசெய்வார்கள்.

**பெண்களுக்கான நிலையான அபிவிருத்திக்கூடாக அவர்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை நோக்கி ...!!!!**

திட்ட அமுலாக்கம்:
FOSDOO
Creating Synergy for Energy

நிதி அனுசரணை:
ZOA
RELIEF | HOPE | RECOVERY
40 years

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## நலம் தரும் வீட்டுத் தோட்டம்

போருக்குப்பின்னரானதமிழ்மக்களின்வாழ்வுபோர்க் காலங்களோடு ஒப்பிடுகையில் பெருமளவு மாறி வருகிறது. உலகமயமாதல் போக்கோடு ஒத்தோடத் தொடங்கிவிட்டார்கள் தமிழர்கள்.

ஒருகாலத்தில் மிதிவண்டிகளின் (சைக்கிள்) நகரமாக விளங்கிய யாழ்ப்பாணம் மற்றும் வடக்கின் பல மாவட்டங்களை, மோட்டார் சைக்கிள்களும் சொகுசு வாகனங்களும் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. வீதிகள் இன்னும் பழைய காலத்துக்குரியவையாகவே நீடித்தாலும் நவீன வாகனங்களின் பயன்பாட்டுப் பெருக்கம் வேறு பல போக்குவரத்துப் பிரச்சினைகளை உருவாக்குகிறது. அது பற்றியெல்லாம் கவலைப்படாமலேயே வசதி படைத்தவர்கள், குறிப்பாக நடுத்தரவர்க்கத்தைச்சேர்ந்தவர்கள் எல்லோரும், சந்தைக்கு வரும் புதிய புதிய ரக வாகனங்களாகவே வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வி, பண்பாடு, உணவு என்று எல்லாவற்றிலும் தமிழர்கள் உலகமயமாக்கலுக்குள் விரைவாக இழுக்கப்பட்டு அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது உலகமயமாதலின் பாதிப்பால் மட்டுமே நடைபெறுவது அல்ல. அதையும் தாண்டி மேற்குலக மோகமும் இந்த மாற்றத்தை விரைவு படுத்திக் கொண்டே இருக்கின்றது.

புலம்பெயர் தமிழர்களின் வழி, மேற்குலகுடன் மிக நெருங்கிய உறவைக் கொண்டிருக்கக்கூடிய தாயகத் தமிழர்களிடம் அதன் தாக்கமும் அளவுக்கதிகமாகவே இருக்கிறது. இது தவிர்க்கமுடியாதது என்றபோதும் மேற்குலகிலிருந்து நல்ல விடயங்களையும் இறக்குமதி செய்வதற்கு நாம் தவறுவதே கவலைக்குரியதாக இருக்கிறது. மேம்போக்கான, எமது வாழிடத்துக்கும் வாழ்முறைக்கும் பொருத்தமில்லாத விடயங்களை மேற்கிலிருந்து விரைவாக இறக்கத் துடிக்கும் தமிழர்கள், அங்கிருக்கக்கூடிய நல்லவைகளையும் இறக்குமதி செய்தார்களானால் சிறப்பாக இருக்கும்.

கடந்த சில ஆண்டுகளில் வீட்டுத் தோட்டம் செய்வது அமெரிக் காவில் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. பெரும் பண்ணை முறையில் மிகப் பெரும் விவசாய உற்பத்திகளை அமெரிக்கா மேற்கொண்டு வந்தாலும் தூய, சத்தான காய்கறிகளை உற்பத்தி செய்து உண்பதில் அமெரிக்கர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

கடந்த 5 வருடங்களில் மட்டும் வீட்டுத் தோட்டம் செய்யும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை 17 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இப்போது 35 சதவீதமான அமெரிக்கர்கள், அதாவது 4 கோடியே 20 லட்சம் வீடுகளில் தோட்டம் செய்யப்படுகிறது. 2008ஆம் ஆண்டுக்குப்பின்னர் இளைஞர்களின் பங்கு இதில் பெரிதும் அதிகரித்திருக்கின்றது என்று மகிழ்ச்சியடைகிறார்கள் ஆய்வாளர்கள். 63 சதவீதம் உயர்ந்திருக்கிறதாம் அவர்களின் பங்கு. அதாவது ஒரு கோடியே 30 லட்சம் இளைஞர்கள் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபாடு காட்டுகிறார்கள்.

79 சதவீதமான பட்டதாரிகள், 68 சதவீதமான 45 வயதுக்கு மேற்பட்டோர், 54 சதவீதமான பெண்கள் என வீட்டுத் தோட்டத்தில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர்களையும் பட்டியிலிடுகின்றன புள்ளிவிவரங்கள். ஆகக் குறைந்தது 96 அடியிலிருந்து சராசரியாக 600 அடிகள் வரையான இடத்திற்குள்ளேயே இந்தத் தோட்டங்க்ள் எல்லாம் அடங்குகின்றன. சராசரியாக ஒரு வாரத்தில் 5 மணித்தியாலங்கள் மட்டுமே வீட்டுத் தோட்டத்துக்காகச் செலவிடுகிறார்கள் அமெரிக்கர்கள்.

இந்த வீதம் தொடர்ந்து வளர்ந்துகொண்டே செல்கிறது. ஆரோக்கியத்தையும் பொருளாதாரத்தையும் ஒருங்கே தரும் வீட்டுத் தோட்டமே தமிழர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அளவுக்கதிகமான உரப் பாவனை மற்றும் கிருமி நாசினிப் பாவனையால் பக்கவிளைவுகளையும் நோய்களையும் மலட்டுத்தனத்தையும் எதிர்கொண்டிருக்கும் தமிழ் இனம் அதிலிருந்து மீள, தமது ஆரோக்கியத்தை மீட்டெடுக்க வீட்டுத் தோட்டத்தைக் கையில் எடுப்பதே சிறந்தது.

மேற்குலகில் இருந்து எதையெதையோ எல்லாம் இறக்குமதி செய்யும் தமிழர்கள், இதையும் இறக்குமதி செய்து தாமும் வீட்டுத் தோட்டம் செய்ய முன்வருவார்களானால் வாழ்க்கை சிறக்கும். தூய, சத்தான காய்கறிகளை எமது கொல்லைப் புறத்திலேயே பயிர் செய்வோம், வாரீர்!

## பௌத்த பீடங்களின் நிலைப்பாடும் சுதந்திரக் கட்சியின் சூழ்ச்சியும்

எம்.ஐ.முபாறக்

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்றொரு வேலைத் திட்டம் என்று தொடங்கப்பட்டதோ, அன்றிலிருந்தே அதற்கான எதிர்ப்பும் சமாந்தரமாகத் தொடங்கப்பட்டுவிட்டது. அந்த இரண்டும் இன்றுவரை சமாந்தரமாகவே பயணித்துக் கொண்டு இருக்கின்றன. இதனால் அந்த எதிர்ப்பை இலகுவில் முறியடிப்பதற்கோ அல்லது அரசியல் தீர்வை உடனடியாக வழங்குவதற்கோ முடியாமல் இருக்கின்றது.

ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் அரசியல் தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதும், அந்த நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள், பேரினவாதிகள் முட்டுக்கட்டைகளாக இருப்பதும் இன்று வரை தொடரவே செய்கின்றன. அதிலும் அரசுகள் அதிகமாக அரசியல் தீர்வை வழங்குவதாகக் கூறினாலும், மறைமுகமாக அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வந்த வரலாறுகளே அதிகம்.

முன்னால் வந்து ஆதரிப்பதும், பின்னால் சென்று மறைந்திருந்து அதை எதிர்ப்பதும், எதிர்ப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் காலாதிகாலமாக அரசுகள் பின்பற்றி வரும் இராஜதந்திரமாகும். இதனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது அரசியல் தீர்வுக்கான ஆதரவு என்பதை விடவும், எதிர்ப்பும் காலை வாருதலுமே அதிகம். இதனால்தான் இன்று வரை அரசியல் தீர்வு என்ற ஒன்று எட்டப்படாமல் உள்ளது. அரசுகள் ஆட்சிக்கு வந்த புதிதில் அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்குவதும், அதற்காக நடவடிக்கை எடுப்பதும், பின்னர் அதற்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப்புக்களை அடிப்படையாக வைத்து தீர்வு முயற்சியை இழுத்தடிப்பதும் பிற்போடுவதும், நாம் கண்டு கண்டு பழகிப்போன செயற்பாடுகளாகும்.

சந்திரிகாவின் ஆட்சியில் தீர்வுத் திட்டம் ஒன்று நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது இப்போது அரச தரப்பாக இருக்கும் அப்போதைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, அதைக் கிழித்து வீசித் தீ மூட்டி எதிர்ப்புத் தெரிவித்தது. அந்தக் கட்சிதான் இன்று அரசியல் தீர்வு தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகக் காட்டிக்கொள்கிறது.

### மகிந்த காட்டிய படம்

2005இல் ஆட்சியைக் கைப்பற்றிய மகிந்தவும் தீர்வு முயற்சியில் இறங்கினார். புலிகளுடன் பேச்சுக்களில் ஈட்டுட்டார். அவை எல்லாம் தோல்வியில் முடிந்து போர் தொடங்கப்பட்டதும், அந்தப் போர் அரசின் பக்கம் வெற்றியைக் கொண்டுவரத் தொடங்கியதும் அரசியல் தீர்வைமகிந்த மறக்கத் தொடங்கினார்.


போர் முடிந்து பன்னாட்டு அழுத்தம் காரணமாகவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளவர்போல் காட்டிக்கொள்வதற்காகவும், மகிந்த மீண்டும் தீர்வு முயற்சியைத் தொடங்கினார். ஆனால் இதய சுத்தியுடன் அந்த முயற்சி இருக்கவில்லை. தீர்வு ஒன்றை வழங் கும் திட்டம் ஒன்று அவரிடம் இருக்கவே இல்லை.

தீர்வு முயற்சி என்ற பெயரில் வெறும் படத்தையே மகிந்த காட்டினார். காலத்தை இழுத்தடித்துக்கொண்டு சென்றார். சர்வகட்சிக் குழுவொன்றை அமைத்து, அந்தக் குழு முன் வைக்கும் யோசனைகளின் அடிப்படையிலேயே தீர்வு முன் வைக்கப்படும் என்றார்.

இலங்கை அரசியலில் ஈடுபட்டிருக்கும் அனைத்துக் கட்சிகளும் அந்தக் குழுவில் இருந்ததால் அந்தக் குழுவின் வழியாக வரும் யோசனைகள் அனைவரும் ஏற்றுக்கொண்டதாகவே இருக்கும். அவற்றுக்கு எதிர்ப்பு எதுவும் இருக்காது. மிக இலகுவாக எதிர்ப்புகள் எவையுமின்றி அரசியல் தீர்வைத் தயாரித்துவிட முடியும் என்ற நம்பிக்கை அப்போது எல்லோருக்கும் ஏற்பட்டது.

ஆனால் நடந்ததோ வேறு. சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலை வர் திஸ்ஸ விதாரணவிடம் இருந்து இறுதி அறிக்கையை, முழுமையான யோசனைகளைப் பெற்றுக்கொண்ட மகிந்த, அந்த அறிக்கையை முழுமையாக வாசித்துக்கூடப் பார்க்காமல் தூக்கி வீசினார் அவர் வழங்கியிருந்த வாக்குறுதியை மீறினார்.

> தீர்த்தல் என்ற பெயரில் காலத்தை இழுத்தடிப்பது தவிர்க்க முடியாதது. மகிந்தவைப் போல் இந்த அரசும் இருக்கும் வரை காலத்தைக் கடத்திவிட்டு எதுவுமே செய்யாமல் ஆட்சியை விட்டுச் சென்றாலும் அதிசயப்படுவதற்கில்லை. அதுதான் நடக்கப் போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதில் மூன்று வருடங்களை வீணாக்கி விட்டு மீண்டும் முதலில் இருந்து வேறு வழியின் ஊடாகத் தீர்வு முயற்சியைத் தொடங்கினார்.

அதுதான் நாடாளுமன்றத் தெரிவுக் குழு. அரசியல் தீர்வு தொடர்பாக ஆராய்ந்து அந்தக் குழு வெளியிடும் யோசனைகளின் அடிப்படையில் தான், இறுதித் தீர்வு தயாரிக்கப்படும் என்று மகிந்த கூறினார்.

அவர் ஆட்சியில் இருக்கும்வரை அரசியல் தீர்வு முயற்சி என்ற பெயரில் இவ்வாறு காலத்தை இழுத்தடித்தது்க் கொண்டே போகப்போகின்றார். அவரிடம் தீர்வு வழங்கும் திட்டம் அறவே இல்லை. பன்னாட்டுச் சமூகத்தையும் தமிழர்களையும் ஏமாற்றப் போகின்றார்.

இறுதியில் எதையும் வழங்காது அவரது ஆட்சிக் காலத்தை நிறைவு செய்து சென்றுவிடுவார். அப்போது அரசியல் தீர்வு தொடர்பில் சாதகமான விடயங்கள் எவையும் நடந்திருக்காது என்ற உண்மையை விளங்கி கூட்டமைப்பு மகிந்த அமைத்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரித்தது. மகிந்தவால் பல அழைப்புகள் விடுக்கப்பட்டும் கூட்டமைப்பு அதில் அங்கம் வகிக்கவில்லை.

இதுமகிந்தஅரசுக்குமேலும்சாதகமாகிப் போனது.

கூட்டமைப்பின்மீது குற்றச்சாட்டைச் சுமத்திவிட்டு தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிப்பதற்கு மகிந்தவுக்கு மேலும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வாறே நடந்தது. கூட்ட மைப்பு தெரிவுக் குழுவைப் புறக்கணிப்ப தால் எம்மால் அரசியல் தீர்வைத்தயாரிக்கமுடியாமல்போயுள்ளது என்று கூறிக்கொண்டே எதிரி பார்த்ததுபோல் மகிந்த காலத்தை இழுத்தடித்தார்.

இதனால் கூட்டமைப்பு மாற்று வழியை நாடியது. அதுதான் பன்னாடுகள் தரப்பின் உதவி. கூட்ட மைப்பு பன்னாடுகளது ஒத்துழைப்புடன் தீர்வைப்பெற்றுக்கொள்ளும்முயற்சியில் இறங்கியிருக்க, மறுபுறம் தீர்வு தாமதமாவதற்கான காரணத்தை கூட்டமைப்புமீது போட்டுவிட்டு மகிந்த அவர் பாட்டில் இருக்க ஆட்சிமாற்றமும் வந்து சேர்ந்தது.

**புதிய ஆட்சியின் தில்லுமுல்லு**

மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றிய புதிய ஆட்சியாளர்கள், வேறு வழிகளில் தீர்வு முயற்சியைத் தொடங்கினர். தற்போதைய அரசமைப்புமுற்றாக நீக்கப்பட்டு புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும் என்றும், அதனூடாக அனைத்து இன மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்றும், அதற்காக அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்றும், நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப்படும் என்றும் இந்த ஆட்சியாளர்கள் தேர்தலுக்கு முன் மக்களுக்கு வாக்குறுதியளித்தனர்.

அந்த வாக்குறுதிகளின் அடிப்படையில்

> வாக்குறுதிகளின் அடிப்படையில் தான் இந்த அரசுக்கு மக்கள் ஆணையும் கிடைத்தது. ஆனால் ஆட்சியின் இரு பெரும் பங்காளிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும், அந்த ஆணையை இரு வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

தான் இந்த அரசுக்கு மக்கள் ஆணையும் கிடைத்தது. ஆனால் ஆட்சியின் இரு பெரும் பங்காளிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும், அந்த ஆணையை இரு வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்குதல் மற்றும் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை நீக்குதல் என்ற இரண்டு முக்கிய விடயங்களுக்கு மக்கள் ஆணை வழங்கினர். ஐக்கிய தேசிய கட்சியோ இந்த இரண்டும் நிறைவேற்றப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

ஆனால் சுதந்திரக் கட்சி இந்த இரண்டு ஆணைகளையும் மீறிச் செயற்படுவதைக் காணலாம். புதிய அரசமைப்பு தேவை இல்லை. இருக்கின்ற அரசமைப்பு தேவைக்கு ஏற்ப திருத்தப் பட்டால்போதும்என்றும், நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப்படக்கூடாது என்றும் சுதந்திரக் கட்சி கூறுகின்றது.

இது மக்கள் ஆணையை நேரடியாகபச்சையாக மீறும் செயலாகும். இதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறி சுதந்திரக் கட்சி சமாளித்தாலும் அவற்றையெல்லாம் ஏற்க முடியாது. இந்த நிலைப்பாடுமக்கள்ஆணைக்குஎதிரானதாகும்.

**பௌத்த பீடங்களின் நிலைப்பாடும் சு.கயின் பின்னணியும்**

தாம் எடுத்திருக்கின்ற நிலைப்பாடு மக்கள் ஆணைக்கு எதிரானது என எல்லோரும் விளங்கி வைத்திருப்பதால் அந்த நிலைப்பாட்டைச் சரி காண்பதற்கும் அதற்காக மக்கள் ஆணையைப் பின்தள்ளி அதைவிடப் பெரிய ஆணையைக் கொண்டு வருவதற்குமான தேவை சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. அந்தத்தேவையைநிறைவேற்றுவதற்காக எழுந்ததுதான் புதிய அரசமைப்புக்கான பௌத்த பீடங்களின் எதிர்ப்பு. பௌத்த மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்ற இந்த பீடங்களால் எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு மதிப்பளிக்கும் தன்மை பௌத்த மக்களிடம் உண்டு. அதைத் துருப்புச் சீட்டாகக் கொண்டே சுதந்திரக் கட்சி இப்போது காய் நகர்த்தியுள்ளது.

தாம் எதிர்க்கின்ற ஒரு விடயத்தை இன்னோர் அமைப்பும் எதிர்க்குமாக இருந்தால் நிச்சயமாக தாம் அந்த அமைப்புடன் நேரடியாகவோ மறைமுகமாவோ கைகோத்தே ஆகுவோம். அதுதமதுநிலைப்பாட்டுக்குபோராட்டத்துக்கு மேலும் வலுச் சேர்க்கவே செய்யும்.

அவ்வாறுதான் புதிய அரசமைப்பு தொடர்பிலான பௌத்த பீடங்களின் நிலைப்பாட்டைப் பார்க்க வேண்டும். இது அரசின் இராஜதந்திரம் என்பது சாதாரண மக்களுக்கு ஒருபோதும் புலப்படாது. இந்த பௌத்த பீடங்களின் நிலைப்பாட்டை ஆதரிக்கும்வகையில் இனி ஏனைய பிக்கு களும் களத்தில் குதிப்பர்.


**பௌத்த மதத்துக்கான முதன்மை ஸ்தானம் நீக்கப்படல்**

பௌத்த பீடங்களின் நிலைப்பாட்டுக்கு தேரர்கள் அனைவரினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்படப் போகும் துருப்புச் சீட்டுத்தான், பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை ஸ்தானம் நீக்கப்படப் போகின்றது என்ற பொய்ப் பிரசாரம். இது தேரர்களின் ஆதரவை பௌத்த பீடங்களின் நிலைப்பாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கும்.

இறுதியில் பௌத்த தேரர்களின் எதிர்ப்பை மீறித் தன்னால் எதையும் செய்ய முடியவில்லை. இருக்கின்ற யாப்பில் திருத்தத்தை மாத்திரமே செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டை அரசு வெளி யிடலாம். அப்படி இல்லாது போனால், புதிய அரசமைப்பில் உறுதியாக இருப்பதுபோல் காட்டிக்கொண்டு காலத்தை இழுத்தடிக்கலாம், மகிந்தவைப்போல்.

மொத்தத்தில் இவ்வாறான குழப்பம் ஏற்படுகின்றபோது அந்தக் குழப்பத்தைத் தீர்த்தல் என்ற பெயரில் காலத்தை இழுத்தடிப்பது தவிர்க்க முடியாதது. மகிந்தவைப்போல் இந்த அரசும் இருக்கும் வரை காலத்தைக் கடத்திவிட்டு எதுவுமே செய்யாமல் ஆட்சியை விட்டுச் சென்றாலும் அதிசயப்படுவதற்கில்லை. அதுதான் நடக்கப்போகின்றது.

தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும், அதற்காக அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் சிங்களத் தலைவர்கள் என்னதான் வாய் கிழியக் கூறினாலும் அந்த விடயத்தில் அவர்கள் இதய சுத்தியுடன் இல்லை என்பதுதான் உண்மை.



ஆசிரியருக்கான கடிதம்

## பொருத்து வீட்டுத் திட்டமும் தமிழ் மக்களும்

2016 மார்கழி மாதம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பொருத்து வீட்டுத் திட்டப் படிவங்கள் வழங்கப் பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. பொருத்துவீடு சூழலுக்கு நல்லதோ கெட்டதோ, அது ஒரு புறம் இருக்க, வீடுகளற்ற அப்பாவி ஏழை மக்கள் விழுந்தடித்து விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொண்டனர். குறித்த பொருத்து வீட்டுத் திட்டத்துக்கென ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டதை உதயன் செய்தியும் உறுதிப்படுத்தியது. இதில் உள்ளத்தை சோகப்படுத்துவது என்னவெனில், வீடுகளற்று, ஒரு நேர உணவிற்கே போராடும் எமது அப்பாவிப் பொது மக்கள் விண்ணப்பப்படிவம் பெறுவதற்கே அலைந்தமைதான். ஒரு விண்ணப்ப படிவம் பெறுவதற்கு முதலில் பிரதேச செயலகம் சென்று படிவத்தைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து, கிராம அலுவலரின் பரிந்துரை பெற்று, மீண்டும் பிரதேச செயலகத்திடம் வழங்கி, பிரதேச செயலரின் அனுமதி கிடைத்ததும், மீண்டும் பிரதேச செயலகம் சென்று குறித்த விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, சம்பந்தப்பட்ட பயனாளி தபால் மூலம் மீள்குடியேற்ற அமைச்சுக்கு அனுப்ப நேர்ந்ததைக் கண்டு அழுவதா? சிரிப்பதா? எண்ணத் தோன்றியது. விண்ணப்பித்து இன்று ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும், நொந்து நூலாகி ஓலைக்குடிசைகளிலும் உற்றார் உறவினர் வீடுகளிலும், அவலப்படும் எம் உறவுகளுக்கு இது தொடர்பாகக் கிடைத்த பலன்தான் என்ன? வெறும் அலைச்சலும் பணச்செலவும் மட்டுமே? இன்றைய நிலையில், அரசியல் வாதிகளில் ஒருவர், பொருத்து வீடு வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி நிற்கிறார். மற்றொருவர் அது (பொருத்துவீடு) வேண்டாம் என்கிறார். இறைவா இதை முற்கூட்டியே தீர்மானித்து விட்டல்லவா பொது மக்களை விண்ணப்பிக்கக் கோரியிருக்க வேண்டும். அதைவிடுத்து, ஏன் அப்பாவி மக்களை இப்படி அலைக்கழிக்கிறீர்கள்? அன்பான அரசியல்வாதிகளே, அரச உயர் அதிகாரிகளே, தயவு செய்து இனிவரும் காலங்களிலாவது பொது மக்கள் தொடர்பான விடயங்களில் உறுதியானதொரு முடிவை எடுத்துக் கொண்டு பொது மக்களிடம் வாருங்கள். அதுவே சிறப்பாகவும், வரவேற்பாகவும் இருக்கும். அதைவிடுத்து, கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு ஏழைகளின் ஓலைக்குடிசைகளுக்குக் கல்லெறியாமல் இருந்தாலே போதும்.

அன்பு, வரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபான்ஸ் குழுமத்தில்
# தொழில் வாய்ப்புகள்



நாளுக்கு நாள் பாரிய திட்டங்களின் மூலம் வெற்றியின் உச்சத்தை தொடும் அபான்ஸ் வணிக குழுமத்தின் விற்பனை பிரிவுக்கு திறமையான மற்றும் ஆற்றல்மிக்க புதிய காட்சியறை முகாமையாளர்கள் நாடளாவிய ரீதியில் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். பின்வரும் தகைமைகள் உங்களிடம் இருந்தால் நீங்களும் விண்ணப்பிக்கலாம்.

## முச்சக்கர வண்டி காட்சியறை முகாமையாளர்கள்

**தகைமைகள்:**
- க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்த்தரத்தில் சித்தி
- மிகச்சிறப்பான தொடர்பாடல் திறமை இருக்க வேண்டும்
- சிறந்த தன்னம்பிக்கை மற்றும் களத்தில் பணியாற்றும் வல்லமை
- வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்து அவர்களுடன் மிகச்சிறந்த நட்புறவை பேணுதல்
- இதற்கு முன்னர் மோட்டார் சைக்கிள் / முச்சக்கர வண்டி முகாமையாளராக பணியாற்றியிருத்தல் மேலதிக தகைமையாகும்.
- மீள் செலுத்தப்படும் ரூ. 350,000/- பாதுகாப்பு வைப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.
- 25 - 45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆண் மற்றும் பெண் இருபாலரும் விண்ணப்பங்கள் அனுப்பலாம்.

**நாடளாவிய சகல பிரதேசங்களில் இருந்தும் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.**
**(வடகிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)**

இந்தப் பதவி தொடர்பாக உங்களுக்கு ஆர்வம் இருந்தால் சகல விபரங்களும் உள்ளடக்கிய விண்ணப்பமொன்றை பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்பவும். தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலில் சப்ஜெக்ட் என்னும் இடத்தில் முச்சக்கர வண்டி காட்சியறை முகாமையாளர் என குறிப்பிடவும்.


துணை பொது முகாமையாளர் - மனிதவளம்
அபான்ஸ் PLC
498, காலி வீதி, கொழும்பு 03.
மின்னஞ்சல்: careers@abansgroup.com

Abans

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் பருத்தித்துறை (சாவகச்சேரி தபால் நிலையத்துக்கருகில்) வீதியில் 4பரப்புக் காணியில் ஆறு அறைகள் கொண்ட சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

சதா - 00447956288671, மூர்த்தி - 077 467 2408,
உமாசங்கர் - 077 770 9249
Email: lathas77@aim.com



## BE A MAKEUP PRO

விசேட மணப்பெண் அலங்காரம்...
புகைப்பட தொழில் நுட்பம் ...
விசேட வைபவத்திற்கான நவ நாகரீக ஒப்பனை...
அழகியலில் முன் அனுபவம் இல்லையா?
இத்துறையில் நீங்களும் நிபுணராக வாய்ப்பு...
9am to 5pm வரை மூன்று நாட்கள்
30 மணித்தியாலம் சிறந்த செய்முறை விளக்கங்களுடன்

**Dr.அனுஷா**

அவர்களினால் கற்பிக்கப்படவுள்ளது.

12th 13th 14th JULY.
கட்டணம்:
55,000 /- 75,000 /- 100,000 /- 150,000 /-
முதல் 10 மாணவர்களுக்கு 10% கட்டண கழிவு உண்டு.

ANUSHA HERBAL BEAUTY CARE (PVT) LTD
CALL SHRIE SHARA : 0765857111
No:30, Dhammarama, Rd Wellawatte, colombo 6.
facebook.com/AnushaHerbalBeautyCare

## அருந்ததி
இணைய திருமண சேவை

ஞாயிறு 3 மணி வரை யாழ் அலுவலகம் திறந்திருக்கும்.

Arunthathee
Online Matrimony
www.arunthathee.com

### மணமகன் விபரம்

**7299 | வே | 1986**
காரைநகர் | 167 cm | கி.பா: 60
Civil Engineer | இலண்டன் (Citizen)
புனர்பூசம் (மிதுனம்) | இந்து

**6605 | வே | 1985**
இணுவில் | அவுஸ்திரேலியா (Citizen)
Design Engineer | 170cm | செ:01
உத்தராடம் (மகரம்) | கி.பா: 60

**6547 | வே | 1982**
அல்வாய் | 182 cm | இந்து
Accountant | கனடா (Citizen)
அத்தம் (கன்னி) | கி.பா : 26

**6744 | வே | 1967**
கரவெட்டி | அவுஸ்திரேலியா (Citizen)
Civil Engineer | 165 cm | இந்து
சித்திரை (துலாம்) | கி.பா : 18

**5201 | வே | 1969**
சங்கானை | 172 cm | இந்து
Accountant | கனடா (PR)
சித்திரை (கன்னி) | கி.பா : 29

**7834 | வே | 1975**
புலொலி | 168cm | கி.பா:24
Engineer | ஜேர்மனி (Citizen)
அஸ்வினி (மேடம்) | செ: 08 | இந்து

**7798 | வே | 1981**
யாழ்ப்பாணம் | கனடா (Citizen) | இந்து
Purchasing Administrator | 165 cm
சித்திரை (துலாம்) | கி.பா:34 | சூசெ:4

**7394 | ப | 1985**
அல்வாய் | 176 cm | இந்து
Accountant | இலண்டன் (Citizen)
திருவோணம் (மகரம்) | செ:08

**7558 | வே | 1984**
ஏளாலை | 175 cm | இந்து
Supervisor | அவுஸ்திரேலியா (Citizen)
உத்திரட்டாதி (மீனம்) | கி.பா: 12

**4075 | வே | 1983**
வட்டுக்கோட்டை | கி.பா: 57 | இந்து
Production Manager | இலண்டன் (PR)
கேட்டை (விருச்சிகம்) | செ:08

**6924 | கோ | 1986**
மானிப்பாய் | 179 cm | இந்து
Engineer | இலண்டன் (Citizen)
திருவாதிரை (மிதுனம்) | கி.பா: 12

**7035 | கோ | 1975**
கிளிநொச்சி | 168 cm | இந்து
Engineer(CAD) | இலண்டன் (Citizen)
அஸ்வினி (மேடம்) | கி.பா:68 | செ:08

**7780 | வே + கோ | 1984**
சாவகச்சேரி | அவுஸ்திரேலியா (Citizen)
IT- Technician | 182cm | இந்து
பரணி (மேடம்) | செ: 04 | கி.பா:38

**5391 | வே | 1984**
காரைநகர் | அவுஸ்திரேலியா (PR)
Network Engineer | 178cm | இந்து
கார்த்திகை (ரிஷபம்) | கி.பா:41 | செ:04

### மணமகள் விபரம்

**6822 | வே | 1989**
காரைநகர் | 173cm | கி.பா : 25
Teacher | கனடா (Citizen) | இந்து
திருவாதிரை (மிதுனம்) | செ:01

**6364 | வே | 1989**
வண்ணார்ப்பண்ணை | 170cm | செ:8
Doctor | நெதர்லாந்து (Citizen) | இந்து
புனர்பூசம் (மிதுனம்) | கி.பா: 52

**7083 | வே | 1981**
காரைநகர் | இலண்டன் (Citizen)
Software Engineer | 165 cm | இந்து
திருவோணம் (மகரம்) | கி.பா: 50

**7506 | வே + கோ | 1994**
இளவாலை | 161 cm
BSC Student | கனடா (Citizen)
கேட்டை (விருச்சிகம்) | இந்து

**6445 | கோ | 1987**
இளவாலை | இந்து
Lab Technician | கனடா (Citizen)
திருவாதிரை (மிதுனம்) | கி.பா: 10

**3485 | வே | 1983**
யாழ்ப்பாணம் | அவுஸ்திரேலியா(PR)
Analytical Chemist | 157cm
சதயம் (கும்பம்) | இந்து

**5114 | வே | 1984**
வயாவிளான் | கிறிஸ்தவம்
Financial Analyst | 157cm
அவுஸ்திரேலியா (Citizen)

**7278 | கோ | 1988**
சுன்னாகம் | இலண்டன் (Citizen)
Marketing Executive | 165cm
சுவாதி (துலாம்) | கி.பா:42 | இந்து

**5346 | வே + கு | 1979**
நவாலி | 164 cm | இந்து | செ: 02
PHD Student | நோர்வே (Std.Visa)
அத்தம் (கன்னி) | கிறிஸ்தவம்

**7582 | வே | 1977**
காரைநகர் | அவுஸ்திரேலியா(Citizen)
Technical Officer | 158 cm
ஆய்யிலியம் (கடகம்) | இந்து

**7265 | ந | 1976**
சண்டிலிப்பாய் | 154 cm
BSC Qualified | கிறிஸ்தவம்
ஜேர்மனி (Refugee)

**8232 | ந | 1988**
கோப்பாய் | 170 cm
Business Management Qualified
கிறிஸ்தவம் | ஜேர்மனி (Citizen)

**5906 | வே | 1986**
அளவெட்டி | நெதர்லாந்து (Citizen)
Senior Auditor | 165 cm | இந்து
புனர்பூசம் (மிதுனம்) | கி.பா:41

**7930 | வே | 1982**
மண்டத்தீவு | 158 cm
BSC,MSC,MBA Qualified | கி.பா:14
அனுஷம் (விருச்சிகம்) | இந்து
இலண்டன் (Temporary Visa)

**கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு முற்றிலும் இலவச சேவை**

Save Rs. 200,000 on your wedding

அருந்ததியில் பதிவுசெய்து Wedding Discount voucher ஐ பெற்றுக்கொள்ளுங்கள்

Get up to 30% Discounts from our partners

0777 16 45 24 (viber, whatsapp)
480/2C, காலி வீதி, வெள்ளவத்தை
011 40 63 282
20, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 49 27 527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் கூட்டமைப்பின் இறுதிக்கட்டப் பேச்சு இன்று

கொழும்பு, ஜூலை 9

கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி ஆரம்பிக்கப்படவுள்ள முஸ்லிம் கூட்டமைப்பின் இறுதிக்கட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்துக்குப் பயணம் செய்கின்றார்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அம்பாறையில் வைத்து முஸ்லிம் கூட்டமைப்புத் தொடர்பான இறுதிக் கட்டப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் அதற்குரிய ஏற்பாடுகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி தரப்பு மேற்கொண்டுள்ளது என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கடந்த வாரம் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லாவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பசீர் சேகுதாவூத் இருவரும் அக்கரைப்பற்றில் வைத்து சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பு சுமார் 4 மணித்தியாலயங்களுக்கு மேல் இடம்பெற்றிருந்தது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றதோ அவ்வாறு முஸ்லிம் மக்களின் உரிமைப் போராட்டத்திலும் முஸ்லிம் கூட்டமைப்புத் தாக்கம் செலுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டேதான் முஸ்லிம் கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி ஊடகங்களுக்குத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் கூட்டமைப்பை ஆரம்பிப்பதற்கான பேச்சுக்களும், சந்திப்புக்களும் மிக வேகமாக இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்தக்கூட்டமைப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என முஸ்லிம் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனைக்கான தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விடயம், கல்முனை நகர அபிவிருத்தி விடயம், இனவாதிகளால் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு எதிராக காத்திரமான நடவடிக்கைகளை எடுக்காமை, புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தில் முஸ்லிம்களுக்கான தீர்வுகள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்காமை தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் முஸ்லிம் கூட்டமைப்பின் உருவாக்கம் இடம்பெறவுள்ளது. (கு)

## 19 கோடி ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 9

அமைச்சர்கள் சிலருக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கும், மேலும் சில அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கும் 19 கோடியே 70 இலட்சத்து 9 ஆயிரத்து 300 ரூபாவிலான மேலதிக தொகையொன்றைக் கோரி குறைநிரப்புப் பிரேரணையொன்று சபைக்குச்சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சர்கள் இருவருக்கும், பிரதி அமைச்சர் ஒருவருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும், அரச தலைவர் அலுவலகத்துக்கும் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும் புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 12 கோடியே 10 இலட்சத்து 98 ஆயிரத்து 600 ரூபா இதன் கீழ் கோரப்பட்டுள்ளது.

இதன்படி மகாவலி அபிவிருத்தி, தபால் மற்றும் தபால்சேவை அமைச்சருக்கு வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 4 கோடியே 30 இலட்சம் ரூபாவும், பிரதி அமைச்சருக்கு வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 4 கோடியே 30 இலட்சம் ரூபாவும், வெளிவிவகார அமைச்சருக்கு பாதுகாப்புத் தொடரணி வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 90 இலட்சம் ரூபாவும், வடக்கு மாகாண ஆளுநருக்குக் கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்றின் நிலுவைத் தொகையின் நிமிர்த்தம் 8 இலட்சத்து 48 ஆயிரத்து 400 ரூபாவும் இந்தக் குறைநிரப்புப் பிரேரணையின் மூலம் கோரப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தைப் புதுப்பிப்பதற்காக ஒரு கோடியே 48 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தைத் திருத்தியமைப்பதற்கு ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாவும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தைப் புதுப்பிப்பதற்காக 2 கோடியே 18 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் கோரப்பட்டுள்ளது. (த)

## திருமலைக்கு ஐந்து ஆண்டுகள் அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு

கொழும்பு, ஜூலை 9

திருகோணமலை மாவட்டத்துக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நரட்டில் நடைமுறையிலுள்ள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் தயாரிக்கப் படவுள்ளது.

இதற்காகத் துறை சார்ந்தோரின் ஒத்துழைப்புகள் பெறப்பட்டுள்ளன. தற்போது துறை ரீதியான நோக்கம், இலக்குகள் தயாரிக்கும் பணிகள் அந்தந்தத் துறை சார்ந்தோரின் பங்கெடுப்புடன் நடைபெற்று வருகின்றன. அத்தோடு அந்தத் துறையில் காணப்படும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு அதனை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளை அடையாளம் காணும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மாவட்டச்செயலர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் வழிகாட்டலில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி குகவதனி பரமேஸ்வரன் இதன் ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகிறார். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது. (கு)

## கொழும்பில் கால் பதிக்கும் சீன வங்கி

கொழும்பு, ஜூலை 9

சீனாவின் மிகப் பெரிய நிதி நிறுவனங்களில் ஒன்றான சீன வங்கி கொழும்பில் கிளை ஒன்றை இந்த ஆண்டில் ஆரம்பிக்கவுள்ளது.

இது தெற்காசியாவில் சீன வங்கியின் முதலாவது கிளையாக இருக்கும் என்று அந்த வங்கியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் சீன வங்கியின் கிளையைத் திறப்பது தொடர்பான செயல்முறைகள் குறித்து வங்கி அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

90 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கொழும்பில் சீன வங்கிக் கிளை ஆரம்பிக்கப்படும் என்று சீனத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். சீனாவுடனான இலங்கையின் நிதிப் பரிமாற்றங்களுக்கு இந்த வங்கி உதவியாக அமையும். சீன வங்கி, அமெரிக்கா, கனடா, தென்னாபிரிக்கா, கென்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நீரிழிவும் சிறுநீரக நோயும்

மருத்துவர் எம்.கஜந்தினி



நீரிழிவு என்பது குருதியில் குளுக்கோசின் அளவை உடலானது சரியாகப் பயன்படுத்த முடியாது போகும் போது குருதியில் குளுக்கோஸ் சாதாரண அளவைவிடவும் அதிகரித்த நிலையில் காணப்படும் தன்மைகளைக் குறித்து நிற்கின்றது.

உலக சுகாதார நிறுவனமானது நீரிழிவுக்கான வரையறையாக உணவு உட்கொள்ளாத நிலையில் குருதியில் வெல்லத்தின அளவு (Fasting Blood Sugar), 7 mmo1/1 (126 mg /Dl), உணவு உட்கொண்டதன் பின்பான 2 மணித்தியால கால வெளியில் குருதியில் வெல்லத்தின அளவு (Post Pralndlial Bllolod Sulglar (PPBS)) 11.1 mmo 1/1 (200 mg/ldl) என இரண்டு நிலைகளை குறித்துச் சொல்லியுள்ளது.

நீரிழிவைக் குணப்படுத்த முடியாது. ஆனாலும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். கட்டுப்பாடற்ற நீரிழிவால் உடலுறுப்புக்கள் பல்வேறு பாதிப்புக்களுக்குள்ளாகின்றன.

**நீரிழிவு நோயும் சிறுநீரகப் பாதிப்பும்**

எமது உடலில் இரண்டு சிறுநீரகங்கள் உண்டு. அவை பல்வேறு தொழிற்பாடுகளைச் செய்கின்றன.

01. குருதியில் உள்ள கழிவுகளை வெளியகற்றுகின்றன.
02. உடலில் நீரின் சமநிலையைப் பேணுகின்றன.
03. அமில, கார நடுநிலையைப் பேணுகின்றன.
04. குருதி அழுத்தத்தைச் சீராக்குகின்றன.
05. உடல் தொழிற்பாட்டுக்குத் தேவையான ஓமோன்களைச் சுரக்கின்றன.

ஒவ்வொரு சிறுநீரகமும் பல மில்லியன் கணக்கான வடிபாகங்களைக் (Nephron) கொண்டுள்ளன. இந்த அமைப்பானது குருதியை வடிகட்டுவதன் மூலம் கழிவுகளையும், மேலதிக நீரையும் அகற்றுகின்றது.

நீரிழிவு நோயாளர்களில் அதிகரித்த வெல்லமட்டம் காரணமாக இந்த வடிபாக அமைப்புக்கள் மெது மெதுவாகப் பாதிப்படைவதுடன்,குருதியை வடிகட்டுவதிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. குருதியில் உள்ள புரதமும் (allblumin) சிறுநீருடன் சேர்ந்து வெளியேறுகின்றது. அதேவேளை சிறுநீரகக் கலங்கள் இறந்த கலங்களால் (Sclalrled tislslue) மாற்றீடு செய்யப்படுகின்றன.

எல்லா நீரிழிவு நோயாளர்களும் சிறுநீரகப் பாதிப்பினை கண்டுகொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உண்டெனச் சொல்லப்படுகிறது.

இந்தச் சிறுநீரகப் பாதிப்பானது மெதுவானதும் நீண்டகாலத்துக்குரியதுமாக விளங்குகிறது. நீரிழிவு நோயின் வகை, நீரிழிவு ஆரம்பித்த வயது, குருதியில் வெல்லக் கட்டுப்பாடு, உடலின் குருதி அழுத்தக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணிகளில் சிறுநீரகப் பாதிப்புத் தங்கியுள்ளது.

**சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்கான காரணிகள்**

01. குருதியில் வெல்லமட்டம் கட்டுப்பாடற்ற நிலையில் அதிகரித்துக் காணப்படுதல்.
02. உயர் குருதி அழுத்தம்.
03. அதிகரித்த உடல் நிறை

ஆரம்ப சிறுநீரகப் பாதிப்பில் அறிகுறிகள் வெளித்தெரிவதில்லை. ஆனாலும் சிறுநீரகத்தில் நீண்டகாலமாக தொடர்ச்சியான பாதிப்புகள் ஏற்பட்டு இறுதியில் சிறுநீரகம் படிப்படியாக செயலிழந்து போகிறது. இதன்போது பின்வரும் அறிகுறிகள் தென்படும்.

01. களைப்பு
02. உடற்சோர்வு
03. குமட்டல்
04. வாந்தி
05. பசியின்மை
06. கால்வீக்கம்
07. உடற்கடி
08. தூக்கமின்மை
09. சுவாசிப்பதில் சிரமம்
10 குறைவான சிறுநீர் வெளியேற்றம்

“நீரிழிவு நோயாளர்களில் அதிகரித்த வெல்லமட்டம் காரணமாக இந்த வடிபாக அமைப்புக்கள் மெது மெதுவாகப் பாதிப்படைவதுடன்,குருதியை வடிகட்டுவதிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. குருதியில் உள்ள புரதமும் சிறுநீருடன் சேர்ந்து வெளியேறுகின்றது. அதேவேளை சிறுநீரகக் கலங்கள் இறந்த கலங்களால் மாற்றீடு செய்யப்படுகின்றன.”

நீரிழிவு நோயாளர்கள் குருதியில் வெல்ல மட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் சிறுநீரகப் பாதிப்பின் வேகத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். இதற்கு பின்வரும் விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும்.

01. ஆரோக்கிய உணவு வகைகளை உட்கொள்ளுதல்.
02. சீரான உடற் பயிற்சி செய்தல்.
03 மருத்துவரின் அறிவுரைக்கு ஏற்ப மருந்துகளை உள்ளெடுத்தல்.
04. குருதி வெல்ல மட்டத்தை சீரான இடைவெளியில் அளவிட்டுக் குறித்துக் கொள்ளல்.
05. உடல் நிறை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தல்.
06. புகைப்பிடித்தலை நிறுத்துதல்.

**நீரிழிவு, சிறுநீரகப் பாதிப்பினை இனங்காணுதல்**

•Urine microalbumin அளவு

சிறுநீரகத்தில் ஏற்படுகின்ற பாதிப்பு காரணமாக அதிகரித்த அளவில் புரதம்(Albumin) சிறுநீருடன் வெளியேறும் தன்மைகள் நீரிழிவினால் சிறுநீரகம் பாதிப்படைந்துள்ளமைக்கான முதல் அறிகுறியாகச் சொல்லப்படுகிறது. இது ஆரம்பத்தில் யூறைன் மைக்றோ அல்புமின் (Urine micro albumin) என்கின்ற பரிசோதனை மூலம் அறியப்படும்.

**சிறுநீரகம் ஒரு நிமிடத்தில் வடிகட்டும் குருதியின் அளவு** - (eGIFR)

Serum Creatinine சிறுநீரகத்தால் வெளியேற்றப்படுகின்றது. சிறுநீரகம் செயலிழக்கத் தொடங்குகையில் இதன் பெறுமானம் குருதியில் அதிகரிக்கின்றது. சிறுநீரகம் ஒரு நிமிடத்தில் வடிகட்டும் குருதியின் அளவு என்பது Serum Creatinine, வயது, பால் என்பவற்றுக்கு ஏற்பவே கணிப்பிடப்படுகிறது.

இந்தப் பெறுமான அடிப்படையில் சிறுநீரகப் பாதிப்பு நிலை ஒன்றிலிருந்து நிலை 5 (Stage 1 to Stage 5) வரை வகைப்படுத்தப்படுகின்றது. நிலை ஒன்று என்பது சிறுநீரகப் பாதிப்பின் ஆரம்பக் கட்டமாகவும், நிலை 5 என்பது சிறுநீரகத் தொழிற்பாடு முற்றாக செயலிழந்து போன தன்மைகளையும் குறித்து நிற்கின்றது.

**சிறுநீரகம் ஒரு நிமிடத்தில் வடிகட்டும் குருதியின் அளவு**

eGIFR (m1/min/1.73m2)


| | | |
|---|---|---|
| நிலை 1 | - | >90 |
| நிலை 2 | - | 60 89 |
| நிலை 3 | - | 30 50 |
| நிலை 4 | - | 15 29 |
| நிலை 5 | - | <15 |

சிறுநீரகத்திலிருந்து புரதம் குறைவான அளவில் வெளியேறுகையில் சிறுநீரகப் பாதிப்பு இனங்காணப்படுமாயின் இதுவே சிறுநீரக நோயின் ஆரம்ப நிலையாகும். இதனை மருத்துவச் சிகிச்சை மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

அதிகளவு புரதம் வெளியேறுகின்ற நிலையாயின் காலப்போக்கில் படிப்படியாக சிறுநீரகம் செயலிழப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது.

சிறுநீரகத் தொழிற்பாடு குறிப்பிட்ட மட்டத்தை அடைகையில் குருதி சுத்திகரிப்புச் சிறுநீரக மாற்றீடு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலமாக சிறுநீரகப் பாதிப்பைத் தடுக்கவோ அல்லது பிற்போடவோ முடியும். அதேவேளை நீரிழிவினால் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் சிறுநீரகப் பாதிப்பின் வேகத்தைக் குறைப்பதோடு,சிறுநீரகம் முற்றாக செயலிழக்கின்ற தன்மைகளை பிற்போட முடியும்.







சிறுநீரகப் பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
09.07.2015



**ஊழல்** குற்றச்சாட்டு என்பது
பேரம் பேசும் அரசியல் வியாபாரம் அல்ல


பக். 32

**'டஸ்ரர்'**



பக். 31

**'பிளாஸ்ரிக் அரிசி'**



பக். 23

**'அப்செற்' ஆனார் மகிந்த**

பக். 30



# கருவறுக்க காத்திருக்கும் கத்திகள்!

தவபாரதி

அது தங்க முட்டை போடும் வாத்து!
தினமும் ஒன்றாக...
அதில் ஆச்சரியத்துக்குப் பேராசைப் பட்ட அந்த வாத்து மேய்ப்பன், அதன் வயிற்றுக் குள்ளிருக்கும் பல்லாயிரக்கணக்கான முட்டை களையும் ஒருமித்து எடுக்க எண்ணி வாத்தின் வயிற்றை இரண்டாய் அறுத்தான்.

அந்தோ பரிதாபம்...!
எல்லாம் சூனியமாயிற்று...!
வாத்துமில்லை, அன்றாடம் அது தரும் தங்கமும் இல்லை.

இது தமிழர் தேசத்துப் பொன்விளை பூமி!
தரையிலிருந்து முளைத்தெழுந்தன தாலவிருட்சங்கள்!

நாளும் பொழுதுமாய் நன்மைகள் நிறைத்தன. உணவுடன் உறையுள்ளை உதவியாய் வழங்கின. கற்பகத் தருவான பனையின் பயனைப் புரிந்துகொள்ளாமல் அதன் மூலத்தையே அழிக்க கத்தி கொண்டு ஏறினர் கருணையற்ற மக்கள். கருவறுக்கத் தொடங்கினர். குலை குலையாய் வீழ்ந்தன முளைகொள்ளக் காத்திருந்த நுங்குகளும் குரும்பைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்கண்ட சாட்சி நான்

அன்றைக்கு யாழ்ப்பாணம் - பண்ணை மீன்சந்தைக்கு மீன் வாங்கச் சென்றிருந்தபோது நான் கண்ட காட்சி மனதை வாட்டியது. சந்தையின் ஒரு ஓரத்தில் நுங்குக் குவியல். அருகில் ஒருவர் கத்தியுடன் நின்றுகொண்டிருக்கின்றார். குவியலுக்குள் குரும்பைகளும் ஏராளம். குடிக்கத்தக்க பதத்துடைய நுங்குகளும் ஏராளம். அதைச் சூழ தென்னிலங்கை வாசிகளும் ஏராளம். வியாபாரம் களை கட்டிச் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது.




நம்மவர்களும் விதிவிலக்காகி விடாமல் ஒன்றிரண்டு பேராக அதை வாங்கி அருந்திக் கொண்டனர்.

நுங்கு குடிப்பது உடலுக்குப் பல நன்மை தருவதே. அது இயற்கை அமிர்தமும்கூட. ஆனால், அது பனைகள் எனும் மூலம் இருந்தாலே சாத்தியம்.

அள்ளை கொள்ளையாக, வியாபார நோக்கில் இப்படி ஏராளம் பனம் வித்துக்களை வெட்டிச் சரித்து இன்றைக்குத் தாகம் தீர்த்துக் கொண்டால் நாளை பனை என்பது ஒரு அருங்காட்சிப் பொருளாகிவிடாதா...? அவற்றின் சந்ததிகள் எப்படித்தான் முளைவிட முடியும்...?

இவ்வாறு நிகழ்வது பண்ணையில் மாத்திரமல்ல. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இதுவே நிலை.



யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையூடாக அவ்வளவு வாகன நெரிசல்களுக்கிடையேயும் வயது முதிர்ந்த நான், என்னைப்போன்ற வேகத்தில் இயங்கும் எனது பழைய மோட்டார் சைக்கிளில் பயணிப்பது உசிதமானதல்ல. இந்தத் தீர்மானத்துடன் நல்லூர் வழியாகச் சென்று முத்திரைச் சந்தியால் செம்மணி வெளி நோக்கிப் பயணித்து அரியாலையை அடைந்துவிடலாம் என்று புறப்பட்டேன்.

செம்மணியை அண்மித்ததும் வீதியின் இரு புறத்திலும் ஆங்காங்கே மக்கள் கூட்டம். என்ன புதினமாகவிருக்கும் என்று எட்டிப்பார்த்தேன் அவர்கள் நடுவில் நுங்குக் குலைகள். அதன் அதிபதியாகக் கத்தியுடன் ஒருவர். அதன் பின்னரும் இத்தகைய சம்பவங்களை தீவுப்பகுதிகளுக்குப் போகும் பாதை ஓரங்களில் நான் கண்டிருக்கிறேன்.

இங்கு யாராவது பனைப் பயிர்ச் செய்கை செய்கிறார்கள் என்று நீங்கள் கேள்விப்பட்டதுண்டா...? அல்லது பனையை நாட்டித் தண்ணீ ஊற்றி வளர்க்கிறார்கள் என்றாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா...? அப்படியேல்லாம் இல்லாவிடில் இங்கு நிரம்பியுள்ள, இன்றைக்கு உச்சங்கண்டுள்ள இந்தப் பனைவளம் மட்டுப்படுத்தப்பட்டது என்றாவது உங்களுக்குப் புரிகின்றதா?

### தண்ணீரூற்றி வளர்த்தவர் யாருமுண்டோ...?

இப்போதுள்ள பனைகள் இற்றைக்கு ஐம்பது, அறுபது வருடங்களுக்கும் முற்பட்ட காலங்களிலே வேர் விட்டிருந்தவையே. அதற்கும் முந்தையதே அவற்றின் தோற்றம். நீண்டகால வயதையுடையவை அவை. அந்தக் காலத்தில் சாத்தியமாக முடிந்த அவற்றின் உச்ச வளர்ச்சியாலயே இன்றைக்கு நாம் அவற்றிலிருந்து, அவை தரும் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. ஒடியல் மாவு, புளுக்கோடியல், பனம்களி உணவுகள், கிழங்கு, கைத்தொழில் மூலப் பொருள்களாகப் பல பெண்களது வாழ்வாதாரம் என அவற்றின் பயன்கள் ஏராளம்.

அந்தப் பயன்களை நாம் இயற்கைச் செயன்முறைகளுடாகப் பெற்றுக் கொள்வதை விடுத்து பெரிய அளவில், அதுவும் இப்படியான பொறுப்பற்ற தன்மையில் வெட்டிச் சரிப்பது எந்த வகையில் நியாயம்...? அது ஒருவரின் வயிற்றுப் பிழைப் பேன்று காரணம் கூறப்பட்டாலும் பிற்காலத்தில் அவரால் எத்தனையோ பேரது வயிற்றுப் பிழைப்பு கேள்விக் குறியாக்கப்படுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதா?

எப்போதுதான் இந்தக் கத்திகளுக்குப் புத்தி பிறக்குமோ? பனை நலன்களைக் கவனிக்க வேண்டிய பனை அபிவிருத்தி சபை இது தொடர்பாக அக்கறை எடுக்குமா?

இங்கு யாராவது பனைப் பயிர்ச் செய்கை செய்கிறார்கள் என்று நீங்கள் கேள்விப்பட்டதுண்டா...? அல்லது பனையை நாட்டித் தண்ணீ ஊற்றி வளர்க்கிறார்கள் என்றாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா...? அப்படியேல்லாம் இல்லாவிடில் இங்கு நிரம்பியுள்ள, இன்றைக்கு உச்சங்கண்டுள்ள இந்தப் பனைவளம் மட்டுப்படுத்தப்பட்டது என்றாவது உங்களுக்குப் புரிகின்றதா?

இனிவரும் காலங்களில்கூட அதனை நட்டு வளர்க்கும் எண்ணம் யாருக்கும் ஏற்படாது. மாறாக அதிகரித்து வரும் சனநெருக்கடி எஞ்சியவற்றையும் அழிக்க முற்படுமே தவிர, இருப்பவற்றைப் பாதுகாக்க வழி செய்யவே செய்யாது.

### குறைவற்ற அழிவுகள்

வடபகுதிப் பனைவளங்களை முப்பது ஆண்டுகாலமாக நீடித்திருந்த போரே பெருமளவாகத் தின்று தீர்த்தது. அதன்நிமித்தம் இராணுவக் காவலரண்கள், காப்பரண்கள் அனைத்துக்குமே கேட்க நாதியற்று ஏராளமான பனைகள் தறிக்கப்பட்டன. போரின் பின்னர் அதில் ஓரளவு திருப்தி.

'அனுமதி பெற்று மாத்திரமே மக்கள் மரங்கள் தறிக்கலாம்' என்றானபின் பனைகளுக்கும் ஓரளவு உயிர் வந்தது. அதன் நிமித்தம் ஓரளவுக்கு மனித அழிவுகளும் குறைந்தன.

அதேபோல் அவை புதிதாக முளைவிடும் தன்மைகளும் குறைந்தே இருந்தன. வடலிகள்போக நீண்டு வளர்ந்தவை எல்லாம் பலத்த காற்றுக்குள்ளும் காலநிலை(நிசாப்புயல், பலத்த மழையும் காற்றும்) மாற்றத்துக்குள்ளும் சிக்கி மாண்டு போயின. புதிதாக முளைக்காமல் இவ்வாறாக வளர்ந்தவை சரிந்துகொண்டிருக்கும் நிலையிலேயே இப்போது அவற்றின் விதைகளைக் கருவறுக்கும் கத்திகள் பலவும் பனை வட்டுக்களைப் பதம் பார்க்கத் தொடங்கியுள்ளன. நுங்குகள் பலவும் தரையில் சிதறுண்டு கண்ணீர் சிந்திக் கொள்கின்றன. எப்போதுதான் இந்தக் கத்திகளுக்குப் புத்தி பிறக்குமோ? பனை நலன்களைக் கவனிக்க வேண்டிய பனை அபிவிருத்தி சபை இது தொடர்பாக அக்கறை எடுக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊழல் குற்றச்சாட்டு என்பது பேரம் பேசும் அரசியல் வியாபாரம் அல்ல

வைத்திய கலாநிதி
முரளி வல்லிபுரநாதன்

வடமாகாணசபை அமைச்சர்களின் ஊழல் மீதான நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுத்ததைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் முதலமைச்சர் மீதும் அவருடைய திணைக்களம் மற்றும் அவருடன் நெருக்கமாயிருக்கும் நிமலன் கார்த்திகேயன் ஆகியோர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தினர். இந்த நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் பல கேள்விகள் எழுந்திருந்தன. ஒருசாரர் இந்தக் குற்றச்சாட்டுகள் முதலமைச்சரைப் பழிவாங்குவதற்காகப் புனைந்து கூறப்படுபவை என்று கருதுகிறார்கள். இன்னொரு சாரர் இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மைகள் இருப்பதாகக் கருதுகின்றனர்.

**எங்களைக் காட்டிக்கொடுத்தால், உங்களைக் காட்டிக்கொடுப்போம்**

அதிகளவானோர் மத்தியிலே ஏன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் இவ்வளவு தாமதமாக, முதலமைச்சர் ஊழல் விசாரணையை ஆரம்பித்தபின் வெளிவருகின்றன? என்ற கேள்வியையே எழுப்பியிருந்தது. இன்னொரு விதமாகக் கூறுவது என்றால், எங்களுடைய ஊழலை நீங்கள் வெளிப்படுத்தினால் உங்களுடைய ஊழலை நாங்கள் வெளிப்படுத்துவோம் என்பதுபோல இருக்கிறது அதன் தொனிப்பு. இதற்கு வலுச் சேர்க்கும் விதமாக "தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு முதலமைச்சர் தீர்வு காணாவிட்டால் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டை இலஞ்ச ஆணைக் குழு ஊடாக மேற்கொள்வேன்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மிரட்டி இருப்பதாக ஊடகங்களில் செய்தி வந்து இருக்கிறது.

இதன்படி (மாகாண சபை அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல்) பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிட்டால் முதலமைச்சரின் ஊழலைப் நாடாளுமன்ற உறுப்பினர் கண்டு கொள்ளமாட்டார் என்றே கருத வேண்டியுள்ளது.

மேலும் குற்றம் நிருபிக்கப்பட்டு பதவி விலகிய அமைச்சர்கள் மீதான மேலதிக நடவடிக்கை பற்றி இதுவரை கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சி தலைவர்களும் முதலமைச்சரும் எதுவும் பேசாது வாய் மூடி மௌனிகளாக இருப்பது முன்னாள் அமைச்சர்களின் ஊழலில் இன்னும் பலரும் சம்பந்தப்பட்டு இருப்பார்களோ...! என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மக்களின் வெறுப்பும், எதிர்பார்ப்பும்**

முப்பது வருட காலப் போராட்டத்தின் பின்னர் பெரும்பாலான தமிழ் மக்கள் ஊழலில் ஈடுபடும் அரசியல்வாதிகளைக் கடுமையாக வெறுப்பதுடன் பொதுமக்களின் அபிவிருத்திக்கான நிதியைக் கையாடுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும், அரசியலில் இருந்து முற்றாக ஒதுக்கப்படவேண்டும் என்றும் கருதுகிறார்கள். இந்த உணர்ச்சியே ஊழலுக்கு எதிரான விசாரணைகளைத் தடுக்கும் வகையில் நம்பிக்கை இல்லாத தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றவர்களுக்கு எதிராக மக்களை எழுச்சி கொள்ள வைத்தது.

ஊழலுக்கு எதிரான மக்களின் இந்த எழுச்சியை தமிழ்த் தேசியத்துக்கான எழுச்சி என்று சிலர் காட்ட முயன்ற போதிலும் உண்மையில் ஊழலால் வெறுப்புற்று இருக்கும் சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் கூட வடமாகாண முதலமைச்சர், ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுத்தவர் என்று அவர் மீதான ஆதரவு அதிகரித்தே இருக்கிறது.

ஆனால் குற்றம் நிருபிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மீது எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கையையும் கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சியும் இதுவரை எடுக்காதது மக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி இருப்பதுடன் தமிழ்க் கட்சிகளின் மீது அவநம்பிக்கை கொள்ள வைத்தும் இருக்கிறது. குறைந்த பட்சம் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் கூட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டு மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்படுவார்கள் என்பது மக்கள் பலரும் எதிர்பார்த்ததே.

தன்னால் நியமிக்கப்படும் விசாரணைக் குழுவை ஏற்றுக் கொள்ள முடியாவிடின் ஏனைய அமைச்சர்கள் மீதிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுக்களை நிதி மோசடிப் புலனாய்வு பிரிவிடம் ஒப்படைப்பேன் என்று தெரிவிக்கும் முதலமைச்சர் குற்றம் நிருபிக்கப்பட்ட அமைச்சர்கள் மீது எடுக்கப்போகும் நீதி வழங்கும் நடவடிக்கையானது வெளிப்படையாகவும் விரைவாகவும் இருக்கவேண்டும் என்றே [illegible] அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

**கண்துடைப்பு வித்தைகளுக்கு முற்றுப்புள்ளி தேவை**

ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான ஏனைய இரண்டு அமைச்சர்களும் முதலமைச்சரின் மேலதிக விசாரணைகளை எதிர்கொள்ள மறுப்புத் தெரிவிப்பதுடன் தமது ஆதரவாளர்களைக் கொண்ட தெரிவுக்குழு ஒன்றை அமைத்துக் கண்துடைப்பு விசாரணை ஒன்றை நடத்தக் கோரிஇருப்பது மக்களை வெறுப்பேற்றியுள்ளது. போதாக்குறைக்கு அமைச்சர் சத்தியலிங்கம் மக்களை ஏமாற்றி முழு முட்டாள்கள் ஆக்கும் வகையில் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் தானாகவே சென்று முன்னிலையாகி தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பித்து விசாரணைக்கு உட்படுத்தித் தன்னை சுற்றவாளியாக நிரூபிப்பேன் என்று கேலியாகக் கருத்து தெரிவித்து வருகிறார்.

இன்று வரை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் இந்த ஏமாற்றுப் பரப்புரைகளைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஊழல், விருட்சமாக வளர்ந்து எங்கும் கிளை பரப்பி நிற்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ஏனைய மூத்த தமிழ்த் தலைவர்கள் மௌனத்தைக் கலைத்து கட்சி பேதமின்றி ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கட்சியின் எதிர்காலத்தைத் தியாகம் செய்வதா? அல்லது ஊழலில் ஈடுபட்ட தலைவர்களைத் தியாகம் செய்வதா? என்ற சத்தியசோதனைக்கு உட்பட்டு இருக்கிறார்கள்.

**இழிவான அரசியல் வேண்டாமே...!**

முதலமைச்சர் அல்லது அவரது திணைக்களத்தில் ஊழல் இடம்பெற்று இருந்தால், முதலமைச்சரின் அதிகாரத்துக்கு உட்பட்ட மாகாண சபையினால் அதை நீதியாக விசாரிக்க முடியாது. அத்தகைய சூழ்நிலையில் முதலமைச்சருக்குக் கட்டுப்படாத ஒரு சுயாதீன விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும். தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சர் மீது சுமத்தும் ஊழல் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருந்தால், அவருடைய அதிகாரத்துக்குக் கட்டுப்படாத ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அல்லது நிதி மோசடி புலனாய்வுப் பிரிவு அல்லது நாடாளுமன்றத்தால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு அல்லது அரசதலைவர் விசாரணைக்குழு போன்ற ஒரு அமைப்பில் நேர்மையாக முறைப்பாட்டைச் செய்து முதலமைச்சருக்கு எதிரான விசாரணையை ஏற்படுத்த வேண்டும். நீதிபதியான முதலமைச்சர் அத்தகைய குற்றச்சாட்டுகளை சூழ்ச்சி செய்யாமல் எதிர்கொள்வார் என்று நம்புகிறேன். அதை விடுத்து முதலமைச்சர் ஒரு ஊழல் குற்றச்சாட்டை வைத்தால் நாங்களும் பதிலுக்கு ஒரு குற்றச்சாட்டை வைப்போம் என்றும் முதலமைச்சர், அமைச்சர்கள்


> "ஊழல் என்னும் நோய் சமூகத்தில் இருந்து அகற்றப்பட்டாலே உண்மையான சமூக அபிவிருத்தி எட்டப்படும்."

மீதான குற்றச்சாட்டுக்களை நிறுத்தினால் முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டுகளை நாமும் நிறுத்துவோம் என்றும் பேரம் பேசுவது ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்தையும் கேள்விக்குறி ஆக்கிவிடும் ஒரு இழிவான போக்காகும். தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிட்டினால் கூட ஊழல் என்னும் நோய் சமூகத்தில் இருந்து அகற்றப்பட்டாலே உண்மையான சமூக அபிவிருத்தி எட்டப்படும். அதை விடுத்துத் தமிழ்நாட்டைப் போல் ஆட்சியாளர்கள் தங்களுக்கும் தங்களுடைய வாரிசுக்களுக்கும் சொத்துச் சேர்த்துத் தம்மை மாத்திரம் விருத்தி செய்யும் நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்களே! என்பதே இன்று தமிழ் மக்களின் முதன்மைக் கவலையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கணினிக் கவிஞர்



அவசரமாக ஒரு கவிதை எழுத வேண்டும்.
'அப்படியெல்லாம் எழுதுவது கவிதையன்று'
கொள்கை கோட்பாடுகள் கோதாரிகள்
விளக்கங்களை எல்லாம் விட்டு இப்போதே
ஒரு கவிதை வேண்டும்.

இது என்ன பழங்காலமா...?
எழுதுவதற்குப் பேனாவையோ
பென்சிலையோ, கூட ஒரு பேப்பரையே
தேடத் தேவையில்லை
அதற்கும் முன்பிருந்தவை
ஓலையும் ஆணியும் என்றுகூட
நான் அறியவில்லை.

அதற்கு நான் கவிஞனுமில்லை.
சரி சரி கண்ட கதைகளை எல்லாம் விட்டு
இனிக் கவிதை எழுதுவதில் இறங்கலாம்

கணனியில்தானே கண்டதையும் எழுதலாம்
விருப்பம்போல திட்டலாம்
எங்கே என் கணினி...?
எனது றூமுக்குள் அதோ...
அருகே சென்று அவசரமாக இயக்கியாயிற்று
இனி அவசரமாக ஒரு கவிதை செய்யலாம்
அதே அவசரத்தில் அணைந்தது அது.
என்னாயிற்று...?
கரண்ட் கட்.



பொன். நகுலன்

# இந்தவார முகநூலில்...

வடமாகாணசபை விவகாரங்களே சமூகவலைத் தளத்தைச் சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கின்றன. ஒரு விடயம் முடிய அடுத்தது. அது முடிய இன்னொரு விடயம் என்று, மாகாண சபைக்குள்ளயே 'பேஸ்புக் போராளிகள்' மூழ்கிப் போயிருக்கிறாங்கள். மாகாணசபையின் அமர்வு இந்த வாரம் நடைபெற்றது. அமர்வு ஒன்றரை மணி நேரத்தினுள் முடிந்ததையும் அதற்கு 5இலட்சம் செலவாகியதையும் கவனத்தில் எடுத்துக் கொண்ட 'பேஸ்புக் போராளிகள்', மக்கள் பணம் விரவயமாவதாகப் பொரிஞ்சு கொண்டாங்கள். மக்கள் பணம் விரயமாவது இப்பதான் இவங்களுக்குத் தெரியும்போல எண்டு எதிர்ப் பதிவுகளும் இருக்கத்தான் செய்தன.

Like Comment Share



பேஸ்புக்கில தென்னிந்திய 'பிக்பொஸ்' நிகழ்ச்சியைப் பற்றி எல்லாருமே வறுத்தெடுக்கிறாங்கள். அந்தப் பிள்ளை ஜூலியை வைச்சு ஒரு குறூப் கலாய்க்குது. இன்னொரு குறூப் அந்தப் பிள்ளை அங்கை ஏன் போனது? எண்டு கேள்வி கேட்குது. இந்த நிகழ்ச்சியை நாறடிக்கிறம் எண்ட பெயரில அதை 'றீச்' பண்ணிற வேலையைத்தான் எல்லாரும் பாங்கிறாங்கள். ரீ.விக்காரர் ரி.ஆர்.பி ரேட் ஏத்தத் திட்டமிட்டுச் செய்யுறதைச் சொல்லிக் காட்டிக் கொண்டே, அந்த ரி.ஆர்.பியைக் கூட்டுற வேலையை இந்தப் பேஸ்புக் போராளிகள்தான் பார்த்துக் கொண்டிருக்கிறாங்கள்.

Like Comment Share

'பிக்பொஸ்' நிகழ்சியைவிட அதைக் கலாச்சு வாற வீடியோதான் அதிகமாக் கிடக்குது. வடிவேலு பாணியில் சொன்னா" இதுக்கெல்லாம் ரூம் போட்டு யோசிப்பாங்களோ...!" என்றளவுக்கு, அந்த நிகழ்சியைக் கலாய்ச்சுத் துவைச்சு எடுக்கிறாங்கள்.





உசிலமணி

இப்ப தேர்தல் வருவதற்கான அறிகுறி எதுவும் இல்லை. ஆனால் வடக்கு மாகாணசபை விவகாரத்தை வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் செல்வாக்குச் சரிந்து விட்டதாகவும் 'பேஸ்புக் போராளிகள்' கூறிக் கொள்ளுறாங்கள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பதுபோல, க.குமாரின் அணியும் ஊர் ஊராகப் போய் மக்கள் சந்திப்பு நடத்தி வருகுதாம். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் க.குமார் அணி மக்களைப் போய்ச் சந்திக்கின்றது ஆனால் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் கூட்டமைப்பு மக்களைச் சந்திக்க அச்சப்படுகின்றது என்று பேஸ்புக் போராளிகள் இதற்கு இப்படியொரு வியாக்கியானத்தையும் கொடுத்திருக்கிறாங்கள்.




Like Comment Share



மலிங்க, மந்திரியைப் பார்த்துக் குரங்கு என்று சொன்னதும், அவருக்கு விசாரணை நடந்ததையும் ஒருத்தரும் பெரிசாக் கண்டுக்கேல்ல. ஆனா சிம்பாப்வே காரனைக் கூப்பிட்டு அவனிட்டச் செருப்படி வாங்கினாங்கள். அதுக்குப் பிறகுதான் அந்த மந்திரி தயாசிறியை 'மந்தி' எண்டு சொன்ன மலிங்கதான் பாவம் எண்டது விளங்கிச்சுது. இவங்களுக்கு உடல்கட்டுவாகே இல்லை எண்டதும், களத்தடுப்பில அதால கோட்டை விடுறாங்கள் எண்டதும், சிம்பாப்வே 'மச்' ஐப் பார்த்தால் எல்லாருக்கும் விளங்கியிருக்கும். இதைச்சாட்டா வைச்சு இந்தியன் பான்ஸ் சிறிலங்காக் காரரை வதைச்சு எடுத்தாங்கள். மினிவேள்ட் கப்பில வாங்கின அடிக்குப் பிறகு இப்ப இதிலதான் வதைச்சு எடுத்து அவங்கள் பழி தீர்க்கிறாங்கள் போல.

தமிழ் அரசுக் கட்சி முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தத பின்னர் ஒதுங்கி விட்டதாக சமூகவலைத் தளத்தில் வறுத்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். தமிழ் அரசுக் கட்சிக்காரர் அவசர அவசரமாக இளைஞர் அணிச் சந்திப்பை நடத்தினர். சந்திப்பில் கட்சிப் பொருளாளர் வாய் தவறி உளறியதை, 'பேஸ்புக் போராளிகள்' கச்சிதமாகக் கவ்விக் கொண்டாங்கள். "தேர்தலில் மேடையில் பேசும் பேச்சு வேறு. அது வெல்வதற்கானது. நடைமுறை நிர்வாகம் வேறுமாதிரியானது" என்று அவர் சொன்னதை வைத்துத் தமிழ் அரசுக் கட்சியைப் பிழிஞ்சு எடுக்கிறாங்கள். இப்பத்தான் அரசியலில ஒருத்தனாவது உண்மையைச் சொல்லியிருக்கிறான் எண்டும் ஒரு பகுதி சொல்லிக் கொள்ளுது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குற்றமும் தண்டனையும்

குணசேகரன் சக்தீனா

## “நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக இருக்கவேண்டும்”

ஒவ்வொரு வழக்கும் பல புதிய விடயங்களை எமக்கு உணர்த்தி நிற்பது தான் உண்மை. அதேபோன்றுதான் இந்த வழக்கும். மன்றின் தீர்ப்புகள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளியிட்டாலும் அந்தப்பிரச்சினைகள் முற்கூட்டிய பல விழிப்புணர்வுகளையும் சொல்லிச் சொல்கின்றன என்பது அனைவருக்குமே முக்கியமான விடயமாக இருக்கின்றது. தனியாக இருந்த ஒரு மூதாட்டியைக் கொலை செய்து முற்றத்தில் குழிதோண்டிப் புதைத்து அந்த புதைகுழிக்கு மேலாகச் சீமெந்தினால் பூச்செழுப்பிய வன்மமான செயல் யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியில் அரங்கேறியிருக்கின்றது.

— — — —

சம்பவம் 2009ஆம் ஆண்டின் இறுதியில் நடந்தேறியது. வீட்டின் உரிமையாளரான லில்லி மேரியை மூன்று நாட்களாகக் காணாவில்லை என்று லில்லிமேரியின் வீட்டில்குடியிருந்த ஜெரோம், உறவினர்களுக்குக் கூறியுள்ளார்.

இதுபற்றி உறவினர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது. காணாமற் போன வீட்டின் உரிமையாளரை மூன்று மாதங்களாகியும் காணவில்லை.

இந்த நிலையில் ஜெரோமுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் குடும்பத்தகராறு ஏற்படவே மனைவி அவரை விட்டுப் பிரிந்து காணாமல் போயிருந்த உரிமையாளரின், உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அருகில் போய்க் குடியமர்ந்துள்ளார்.

மூன்று மாதங்கள் கழித்துக் காணாமற்போன வீட்டின் உரிமையாளரைத் தனது கணவன் ஜெரோமே கொலை செய்ததாகவும், அவரது சடலம் குறித்த வீட்டின் முற்றத்திலேயே புதைக்கப்பட்டு இருப்பதாகவும் உரிமையாளரின் உறவினர்களுக்கு ஜெரோமின் மனைவி தெரிவித்திருக்கின்றார்.

— — — —

தகவல் அறிந்த உறவினர்கள் இது பற்றி உடனடியாக யாழ்ப்பாணப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பொலிசார் சம்பவ இடத்துக்கு சென்றதுடன் யாழ்ப்பாண நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி போன்றவர்களும் அவ்விடத்துக்குச் சென்றிருந்தனர். ஜெரோமின் மனைவி சடலம் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டியதை அடுத்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது. இதனையடுத்து ஜெரோம் கைதுசெய்யப்பட்டு மன்றில் முன்னிலை யாக்கப்பட்டார்.

குறித்த நபருக்குக் கடந்த வருடம் யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் பிணை வழங்கிய நிலையில் வழக்கு விசாரணை கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண மேல் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஜெரோமின் மனைவி சாவடைந்துள்ள நிலையில் ஏனைய சாட்சிகளின் வாக்குமூலங்கள் மன்றினால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பிட்டு குற்றவாளியான ஜெரோமுக்குத் தூக்குத் தண்டனை வழங்கியதுடன் இவ்வழக்கு நிறைவு பெற்றிருக்கின்றது. குற்றத்தைக் குற்றவாளி ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் குற்றம் நிரூபிக்கப்பட்டி ருக்கின்றது. தண்டனையும் வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வழக்கு உணர்த்தும் பாடங்களோ பல.

— — — —

வீட்டில் தனியாக எமது தாய் தந்தையரை விட்டுவிட்டுத் தூரம் போகிறோம். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பலவற்றைச் செய்கிறோம் எமது பெற்றோரை அந்நேரம் மறந்து விடுகின்றோம். விளைவு ஏதோ ஒரு அசாதாரண நிலையில் முடிவடைகின்றது.

இறைவன் எம் அனைவருக்கும் தீர்ப்பெழுதியிருப்பான் என்றெல்லாம் கூறலாம் ஆனால், அதற்குக் காரணமாக நாமே இருக்கக் கூடாது. வீட்டில் ஒரு வயோதிபப் பெண்ணைத் தனியாக இருக்க விட்டு அவரது பிள்ளைகள் எங்கு சென்றார்கள்? என்பதும், வீட்டை வாடகைக்கு எடுத்து விட்டு இப்படியும் செய்வதா? என்பதும் இந்தச் சம்பவம் மனித மனங்களுக்குத் தெளிவுபடுத்திச் சென்ற ஒரு விடயம். மனித மனங்கள் தெளிவடைந்தால் மாத்திரமே இத்தகைய பிரச்சினைகள் எழாமல் பார்த்துக் கொள்ளலாம்.



**சம்பவம் 2009ஆம் ஆண்டின் இறுதியில் நடந்தேறியது. வீட்டின் உரிமையாளரான லில்லி மேரியை மூன்று நாள்களாகக் காணவில்லை என்று லில்லி மேரியின் வீட்டில்குடியிருந்த ஜெரோம் உறவினர்களுக்குக் கூறியுள்ளார்.**

# மகோற்சவம்

களை கட்டி
விலத்திக்கொள்ள முடியாமல்
காதைப்பிழக்கும் ஒலி
காற்றை உலுப்புகிறது.

மின்னொளி
கபாலங்குடைந்து
கண்களைச்
சப்புகிறது.
சாமி சங்கடப்படுகிறது.

டொலரும் பவுண்சும்
போட்டி போடச் சரியான
இடந்தானே நடக்கட்டும்.
நடப்பதற்கு சங்கடத்தை
கால்களைச் சறுக்கி
சுட்டிப் பையன்களின் குரலில்
மாபிள் தரை
தலைவழிய வழிய
எண்ணெய் அப்பிச்
சிரிக்கிறது.

கண்களில் கண்ணீரணிந்து
சட்டிகளைக் குளிரூட்டிப் பிடித்து
கற்புரமில்லாத சட்டிக்குப்
பெயர் சூட்டியபடி
பக்தர்கள் நடக்கச்
சட்டிக்குள் தீ புகாமல்
காவலிருக்கும் தொண்டர்கள்.

அங்கப் பிரதட்சணை
அடியவர்
நாய் விட்டையை விலத்தி
உருண்டு செல்லப் போதிய
இடமிருப்பது ஆறுதல்தானே.
அதிகாலையின் அருந்தூக்கத்தை
ஒலிபெருக்கிகள்
உலுப்பித் தொலைத்ததாக
யாரிடமும் சொல்லாத
சாமி கண்களில்
நித்திரை வழிகிறது பொங்கி.

இவையிவை
இப்படியிருக்கத்
தொண்டர்களின்
வண்ணச் சால்வைகள்
கூலியாட்களின்
வேலையை
உரப்புகின்றன.

வேலைகள் எல்லாம்
தொலைந்துபோயின.
தேடியலைந்து ஓயும்
தொண்டர்கள்.
விலையில்
அக்கறைப்படாத
இளைஞிகள்
வெளிப்படும்
அங்கங்களிலும்
அக்கறைப்படவில்லை.
அப்பனும் ஆத்தாளும்
கூட...

சாமி மட்டும் முழுதும் மூடி
வீதியுலா வருவது
ஆறுதல்தானே.
காற்றில் எற்றுண்டு
போகிறது
தன்போக்கில் கச்சான்
சரைக்கடதாசி.

வெயில், பனி, மழை
எல்லாம் கண்டு
அடுத்த திருவிழா
வரைக்கும்
ஒலிபெருக்கி
மணியும்
மின்சார
இடமானமும்
துணைசெய்ய
வீதியில் அல்லாட
வேண்டியதுதான்.



வானவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடிக்கொண்டே இருக்கின்றேன்...

தெல்லிப்பழையூர்
தி. சிதம்பர பாரதி

ஐயா பூசைக்கான ஆயத்தங்களை முடித்திருக்கவேண்டும்! அதுதான் அக்கா கத்துகிறாள்!

"ஓம் அக்கா வாறன்"

போடுவதற்கான உடுப்பைக்கூட எடுத்துவைக்கவில்லை. அலுமாரியைத் திறக்கச் சாறிகள் பட படவெனச் சரிந்தன. எல்லாம் அம்மாவின் சாறிகள். ஒவ்வொன்றும் அத்தனை அழகு. அப்பா, அம்மாவுக்காகப் பார்த்துப் பார்த்து வாங்கியவை...

ஒரு புடவையைக் கண்டு அம்மாவுக்கு அழகாய் இருக்கும் என்று தோன்றினாலே உடனேயே வாங்கி விடுவார். காசு இருந்தால் என்ன இல்லையென்றால் என்ன. அம்மா பொதுவாக எந்தச் சாறியைப் பார்த்தும் ஆசைப்பட மாட்டார். அதுவேணும் இதுவேணும் என்று சொன்னதில்லை. அந்த நீலச்சாறி ஒன்றைத்தவிர..

ஒருதடவை அம்மாவும் அப்பாவும் புடவைக்கடைக்குப் போனபோது அந்தச் சாறியை அம்மாவே ஆசைப்பட்டு வாங்கினவாவாம்...! அப்பா அதிசயமாகச் சொல்லுவார். அது எனக்குத் தெரியாமல் பள்ளிக்கூட நவராத்திரி விழாவுக்கு அந்தச்சாறிதான் வேணும் என்று அடம்பிடித்தேன். இதுவரை. எனக்கு எதையுமே இல்லை என்று சொல்லாத அப்பா. "வேணாம் அதைவிட்டிட்டு வேறையை எடு" என்று சொன்னபோதுகூட எனக்கு விளங்கவில்லை. அம்மாவோ அப்பாவை மறித்து "அவள் கட்டட்டும் விடுங்கோ" என்றார். பிறகு அது எனக்கே சொந்தமாகிப்போனது.

"பானு... என்ன செய்யிறாய்...?" அக்கா கத்தினாள்.

"ஓம் அக்கா வாறன்"

பூசையில் நின்றபோது தலை வலிக்கத் தொடங்கியது. வயிறும் பிரட்டியது. யாரும் என்னைக் கவனிக்கவில்லை. எல்லோரும் பூசையில் முனைப்பாய்...

போன வருசம் துர்க்கை அம்மன் திருவிழா. கொடித்தம்பப் பூசை பார்க்கவென காலை ஆறு மணிக்கே அழைத்துப்போய்விட்டார். சன நெரிசல். அன்றும் இதேபோல்தான் தலையிடி. என் முகத்தை வைத்துக் கண்டுகொண்டார் போலும். வெளியில் கூட்டிவந்து எதிர்க்கடையில் ரீயும் வாங்கித்தந்து, நிழலில் இருத்திவிட்டுப் பூசைக்குப் போய்விட்டார்.

மற்றொரு நாள் இரவு பன்னிரெண்டு மணியிருக்கும். மூச்செடுக்க முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் உளன்று கொண்டிருந்தேன். அம்மாவை எழுப்பலாம்... பாவம் படுத்ததே பதினொன்டரைக்கு... சமாளித்து விடலாம் என்று நினைத்தபடி திரும்பிப் படுத்தேன். தலையை ஆதரவாய்த் தடவியபடி அம்மா...!

"என்ன பிள்ளை செய்யுது?"

என்னவொரு அம்மா!.!

கூப்பிடவே இல்லை. கூப்பிடலாம் என்று நினைப்பதற்குள் வந்து விட்டார். கண்ணீர் பனித்தது.

"இல்லையம்மா... கொஞ்சம் ஏலாமக் கிடக்கு" மடியில் படுக்க வைத்தார். நெஞ்சைத் தடவியபடி... காலையில் விழித்தபோதுகூட அம்மாவின் மடிதான்... இரவிரவாய் இங்கேயே இருந்திருப்பார் போலும்!

அன்றும் அப்படித்தான் அம்மாவுக்குக் காய்ச்சல். மருந்து குடித்தும் குறையவில்லை. கட்டிலில் முனகியபடி படுத்திருந்தா... சாப்பிடவும் இல்லை.

திடீரென்று நான் மூச்செடுக்க முடியாமல் திணறினேன். என்னை அணைத்தபடி அம்மா. அவளின் காய்ச்சல் சூடு என்னையும் வியாபித்திருந்தது.

"ஒண்டும் இல்லையம்மா நீங்க படுங்கோ"

"நீ ஒண்டும் சொல்லத் தேவையில்லைப் பேசாமல் படு"

மறு நிமிடம் கையில் சுடச் சுடக் கோப்பி...!

அம்மா அப்படித்தான் தனக்கு வருத்தம் என்றால் கண்டு கொள்ள மாட்டார். எனக்கோ அப்பாவுக்கோ வருத்தம் என்றால் துடி துடித்துப் போவார். ஒருமுறை அப்பா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அம்மா கொண்டிருந்த துடிப்பு இப்ப வரைக்கும் கண்ணில் நிற்கிறது.

"என்ன பானு குண்டாய் வந்திட்டாய் போல?" பூசையினிடையே மலரக்கா கேட்டாள். குண்டாவதும் மெலிவதும் இயற்கைதானே! ஏன் எல்லோரும் அதைப் பெரிதுபடுத்துகிறார்கள்? இதே கேள்வியை அம்மாவிடம் இவர் கேட்டிருந்தால், பெரிய விளக்கம் கிடைத்திருக்கும்.

சுதாக்கா திருமண வீட்டில் மச்சாள் சொன்னாள் "என்ன பானு இவ்வளவு குண்டாயிட்டாள்? மாமி இனி நீங்கள் சீதனம் சேர்க்கவேணும்போல...?"

அம்மா முறுவலித்தபடி, "ஏன் நிசா, பானுக்குச் சீதனம் சேர்க்கவேணும்...? அவளுக்கு என்ன குறைச்சல்? குண்டு என்றது அசிங்கம் இல்லையே? பொம்பிளைப் பிள்ளையள் மெல்லிசாய் இருந்தால் வடிவில்லை. கொஞ்சம் உடம்பாய் இருந்தால்தான் வடிவு... பார்க்கிறதுக்குச் செந்தழிப்பாயும் இருக்கும்"

"அடி பானு! உன்னட்டை ஆரோ பெடியள் வந்து நிற்கிறாங்கள்" பெரியம்மா வந்து சொன்னார்

அம்மாவுக்கும் பெரியம்மாவுக்கும் பெரிய வயது வித்தியாசம் இல்லை. பொதுவாகவே அம்மா எதையும் கண்டுகொள்ளமாட்டார். என்னோடு தானும் வந்திருந்து அரட்டையடிப்பார்.

> அம்மாவுக்கும் பெரியம்மாவுக்கும் பெரிய வயது வித்தியாசம் இல்லை. பொதுவாகவே அம்மா எதையும் கண்டுகொள்ள மாட்டார். என்னோடு தானும் வந்திருந்து அரட்டையடிப்பார்.



என் நண்பர்களும் அம்மாவுக்கெனத் தனி மரியாதை வைத்திருந்தனர். அம்மா என் நண்பர்கள் எல்லோருக்கும் பிடித்த 'அன்ரி'. கௌரி சொல்லுவாள். "உங்கட அம்மாவின்ர செந்தழிப்பு யாருக்கும் வராதடி..." உண்மைதான்... நல்ல கொட்டின் சாறியும் கட்டி, கொண்டையும் போட்டுக்கொண்டு, பெரிய குங்குமத்தோடை அம்மா வெளிக்கிட்டா எண்டா அப்படி ஒரு வசீகரம். அதிலும் அவவின் சிரிப்பு அத்தனை அழகு! எந்தச் சூழ்நிலையிலும் அவள் முகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்தச் சிரிப்பு. சிலவேளைகளில் நான் ஆச்சரியப்பட்டதுகூட உண்டு. பொறுமையின் ஒத்தசொல்லும் அவளே. அவ்வளவு பொறுமைசாலி. ஒருபோதுமே அவர் பொறுமையை இழந்தது இல்லை. என்னுடைய ஒவ்வொரு நாட்பொழுதையும் முழுதாய் ஒப்புவிப்பேன் எனது வாய் ஓயும்வரைக்கும். சலித்துவிடாமல் முழுதாய்க் கேட்பார். நான் விடும் பிழைகளையும் மனம் நோகாமல் எடுத்துக்கூறி, எளிதில் திருத்தியும் விடுவார்...

காலை நான்கு மணிக்குத் தொடங்கும் அவர் பணி. சுழன்று கொண்டே இருப்பார் இரவு வரை. பல தடைவைகள் நான் யோசிப்பதுண்டு. அவளும் மனிசிதானே, களைப்பதில்லையா? சலிப்பதில்லையா? அக்கா அடிக்கடி கூறிக்கொள்வாள். "நிச்சயமாக அம்மாபோல் இருக்க முடியாது" வீடு முழுதும் ஆள்கள் நிறைந்திருந்தார்கள். அத்தனை பேரின் வருகையும் அம்மாவுக்கானது... அம்மா, யார் என்ன கேட்டாலும் "இல்லை" என்று சொன்னதில்லை. அத்தனை மென்மை அவள். ஊரில் அம்மாவைத் தெரியாதோர் இல்லை எனலாம். உதவி என்று கேட்க முன்னர் செய்து விடுவார்...

"பிள்ளையள் அம்மாவுக்குப் பிடிச்ச சாப்பாடுகளைக் கொண்டுவந்து படையுங்கோ" பூசையை முடித்த ஐயா குரல் கொடுத்தார். "அம்மாவுக்கு என்ன பிடிக்கும்...???" தேடிக் கொண்டேயிருக்கிறேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'பிளாஸ்ரிக் அரிசி' என்ற மாயை!

ஆசி. கந்தராஜா

'பிளாஸ்ரிக் அரிசி' என்கிற விடயம் அண்மைக் காலமாக ஊடகங்களிலும் வலைத்தளங்களிலும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. பிளாஸ்ரிக்கில் அரிசி செய்வது சாத்தியமா? பிளாஸ்ரிக் அரிசி, உண்மையான அரிசிபோல கொதி தண்ணீரில் வேகுமா? என்ற பல கேள்விகள் எமக்குள் எழுந்தாலும் அரிசி பிளாஸ்ரிக்கில் என்றவுடன் மனதுக்குள் ஒருவித பயம் ஏற்படவே செய்கிறது.

### வியட்நாம் தொடக்கிவைத்த பொய்க் கதை

பிளாஸ்ரிக் அரிசி சந்தைக்கு வந்திருப்பதாகச் சொல்வது முற்றிலும் புரளிக் கதை. 2011ஆம் ஆண்டு வியட்நாமிய இணையப்பத்திரிகை ஒன்றுதான் முதன்முதலில் பிளாஸ்ரிக் அரிசி சந்தைக்கு வந்திருப்பதாகவும், அது சீனாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் செய்தி வெளியிட்டது. அதன்பின்னர், பிளாஸ்ரிக் அரிசி குறித்து வெளிவந்த செய்திகள் அனைத்துமே வியட்நாமிய இணையப் பத்திரிகை வெளியிட்ட செய்தியைச் சார்ந்தே இருந்தன.



சீனாவில் 'வுச்சாங்' எனும் இடத்தில் விளையும் அரசி பிரபல்யமானது. இது நல்ல சுவையும் மணமும் கொண்டது. இந்த அரிசி அவியும்போது வெளிவரும் வாசனை பசியைத் தூண்டும் என்றும் சொல்லப்படுகிறது. 'வுச்சாங்' அரிசி விலையாதலால் வியாபாரிகள் கலப்படம் செய்வதாகவும், இதனுடன் பிளாஸ்ரிக்கால் செய்யப்பட்ட போலி அரிசியைக் கலப்பதாகவும் வியட்நாமிய இணையப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இந்தக் கலப்பட அரிசியானது உருளைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு போன்ற மாச்சத்துள்ள கிழங்குகளை அரைத்து அரிசி போன்ற வடிவில் செய்யப்படுவதாகவும் அதற்கு இரசாயனங்களைப் பூசி விற்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது. சீனாவின் புகழ்பெற்ற 'வுச்சாங்' அரிசியைப் போன்றே தோற்றமளிப்பதற்காக இந்தக் கலப்பட அரிசிகளில் வாசனைத் திரவங்கள் சில தெளிக்கப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஆனால் எந்தவொரு செய்தியிலும் நேரடியாகப் பிளாஸ்ரிக் கலக்கப்பட்டதான தகவல்கள் இருக்கவில்லை.

### அரிசியைவிட பிளாஸ்ரிக் அதிக விலை

பிளாஸ்ரிக்கை அரைத்து அரிசிகள் வடிவ அச்சுகளாக மாற்றுவதன் மூலம் எந்தவொரு வணிகலாபமும் பெற்றுவிட முடியாது. கலப்படம் செய்யப்படுவது இலாப நோக்கத்துக்காக மட்டும்தான். ஒருகிலோ அரிசியைவிட ஒரு கிலோ பிளாஸ்ரிக்கின் விலை அதிகம் என்பதால் வியாபாரி இதில் எந்தவித இலாபத்தையும் பெறமுடியாது.- அதுமட்டுமல்ல அரிசியில் பிளாஸ்ரிக்கைக் கலந்தால் உலை கொதிக்கும்போது அல்லது அரிசி அவியும்போது பிளாஸ்ரிக் உருகிவிடும்.

நாம் உண்ணும் பலவிதமான உணவுகளில் கலப்படம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. சில துரித உணவுகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், குறித்த வடிவம் பெறுவதற்கும், கெட்டுப் போகாமல் இருப்பதற்கும் நெகிழ்வுத் தன்மையுள்ள சில வேதிப்பொருள்கள் கலக்கப்படுகின்றன என்பது உண்மையே.

ஆனால், முழுமையாகவே பிளாஸ்ரிக் கைக்கொண்டுவாளி, கோப்பை கதிரை, மேசை செய்வது போல, அரிசி தயாரிப்பது என்பது சாத்தியமற்றது.

### உடனடி அரிசி தோற்றுவித்த குழப்பம்

உடனடி நூடுள்ஸ் போன்று(பைவ் மினிற்ஸ், திறி மினிற்ஸ்) ஐரோப்பிய நாடுகளில் உடனடி அரிசிப் பைகள் விற்கப்படுகின்றன. அந்த அரிசியைக் கொதி தண்ணீருக்குள் போட்டால் சில நிமிடங்களுக்குள் அது அவிந்து சோறாகி விடும்.

இதுவும் பிளாஸ்ரிக் அரிசி பற்றிய வதந்திக்கு மேலும் வலுச் சேர்த்தது. இவ்வாறு பைகளுக்குள் விற்கப்படும் அரிசி 'நூடுள்ஸ் அரிசி'. இது சவ்வரிசி போன்றது. நெல்லை அரிசியாக்கும்போது பெருமளவு குருணை வரும். அதை விற்க முடியாது. இதை அரைத்து பசையுள்ள சில மா வகைகளைச் சேர்த்து உடனடி நூடுள்ஸ் போன்று அரிசி தயாரிக்கிறார்கள்.

இதிலும் பிளாஸ்ரிக் சேர்ப்பதில்லை. இந்த அரிசியின் விலை இயற்கை அரிசியிலும் பலமடங்கு அதிகம். இது அவசர உலகத்தில் வாழும் சிலருக்கு அவ்வப்போது உதவலாம். ஆனால் அன்றாடம் அரிசிச் சோற்றை உணவாகக் கொள்பவர்களுக்கு தோதுப்படாது. இந்த அரிசி பற்றிய புரிதலற்ற தன்மைகள் சிலவே பிளாஸ்ரிக் அரிசி எனும் விடயத்துக்கு உத்வேகமளித்தன.

### ஏமாற்று வித்தை காட்டும் காணொலிகள்

சமூகவலைத்தளங்கள், இணையங்களிலெல்லாம் பிளாஸ்ரிக் அரிசியில் சமைக்கப்பட்ட சோறு எனக்கூறி அதனை உருண்டையாக்கி, நிலத்தில் அடிக்கும் காட்சிகளைக் காண்பிக்கிறார்கள். அரிசியிலுள்ள பசைத்தன்மையே சோற்று உருண்டை உடையாமல் இருப்பதற்கான காரணம். அரிசியில் இயற்கையாகவே அமைலோஸ் (இனிப்புத்தன்மை), அமைலோஸ் பெக்ரின் (பசைத்தன்மை) என்ற இரண்டு வேதிப் பொருள்கள் உள்ளன. இவற்றின் அளவுக்கேற்பவே அரிசியின் தன்மை மாறுபடும். இந்தியர்களுக்கு ஒன்றுடன் ஒன்று ஒட்டாத அரிசிச்சோறு வேண்டும். குச்சிகளால் சாப்பிடும் சீனர்களுக்கு பசைத் தன்மையுள்ள அரிசிச்சோறு வேண்டும். இதனால் ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் 'ஸ்டிக்கி ரைஸ்' எனப்படும் இயல்பிலேயே ஒட்டும் தன்மையுடைய அரிசி வகைகள் பயிரிடப்படுகின்றன.

இந்தவகை அரிசியில் அமைலோஸ்பெக்ரின் கூடுதலாக இருப்பதால், அதன் கஞ்சியில் நெகிழ்வுத் தன்மையும் சோற்றில் பசைத்தன்மையும் அதிகம் இருக்கும். இதனால் அதைப் போஸ்ரர் (சுவரொட்டிகள்) ஒட்டப் பாவிப்பர். இந்த வகை 'ஸ்டிக்கி ரைஸ்' ஐச் சூடாக இருக்கும் போதே இறுக்கமாக, அமத்தி உருண்டையாகப் பிடித்தால் அவை உடையாத, திடமான, உருண்டையாக மாறும். பசைத் தன்மை அதிகமான அதை நிலத்தில் எறிந்தால், அது உடையாது. அவையே வலைத்தளங்களில் காணொலிகளாகக் காட்டப்படுகின்றன.

### வதந்திகளை நம்பாதீர்

இந்த மாதிரியான செய்திகளை வலைத்தளங்களில் பதிவேற்றுகையில், ஆதாரமும், உண்மைத் தன்மையும் தெரிந்தால் மட்டுமே பகிரவேண்டும். இது குறித்த காணொலிகள் பெரும்பாலும் புரியாத மொழிகளிலேயே முதலில் வெளிவந்தன. இன்றுவரையும் நிரூபிக்கப்படாத இந்தச் செய்திகள் அனைவரையும் அச்சுறுத்தும் வதந்திகளாகவே பல மொழிகளிலும் பரவிவருகின்றன. அறிவு பூர்வமாக நிரூபிக்கப்படாத வரையில் இதுபோன்ற செய்திகளை மக்கள் நம்பாமல் இருக்கவேண்டும்.

கட்டுரையாளர்
விவசாயப்பேராசிரியர்,
ஆஸ்திரேலியா.




## உறவுகள்!

சுமை தாங்காமல்
இறக்கிப் போட்டேன்
துன்பங்களை.

சுமந்துகொண்டு
அலைகின்றன
சுற்றத்து உதடுகள்!

தமிழினி சந்திரபோஸ்



## முடிய...?

தீபங்களை
விழுந்து விழுந்து
வணங்கிக்
கொண்டிருந்தார்கள்
அதை
ஏந்திவைத்த தீக்குச்சி
கருகிக் கிடந்தது
ஒருவன் காலடியில்.

• • •

## பொங்கல்

பொங்குகின்றோம்
சர்க்கரை இன்றி
அரிசி இன்றி
பாலும் இன்றி
நெருப்பு மட்டும் எரிகிறது
நெஞ்சில்

பொங்குகின்றோம்
வயலில்லை
வரம்பும் இல்லை
நெல்லில்லை
உழவனும் இல்லை
இதயம் இன்னும் இருக்கிறது
பொங்குகின்றோம்

ம.சி.சந்திரபோஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசித்தவன் விசுவாசத்தை நம்பாதே!

ஒரு கிணற்றில் வயோதிபத் தவளை ஒன்று வசித்து வந்தது. இந்தத் தவளையை அங்கிருந்த ஏனைய தவளைகள் அடிக்கடி தொல்லைப் படுத்திக்கொண்டிருந்தன. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத அந்தத் தவளை இராட்டினத் தோண்டி வழியே வெளியே வந்து, ஏனைய தவளைகளை என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த போது கிணற்றுக்கு அருகிலிருந்த பாம்புப் புற்று அதன் கண்ணில் பட்டது. "நம்மைத் துன்புறுத்திக்கொண்டிருக்கும் தவளைகளை இந்தப் புற்றிலிருக்கும் பாம்பின் உதவியோடு கொன்றுவிட்டால் என்ன?" என்று எண்ணியது. மெதுவாகப் பாம்புப் புற்றின் அருகில் சென்றது. பாம்பை நட்புறவு கொள்ள அழைத்தது. "உங்களுடைய பரம எதிரியான என்னுடன் நட்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன்?" என்று கேட்டது பாம்பு.

"என்னுடன் இருக்கும் சில தவளைகள் என்னைத் தினந்தோறும் துன்புறுத்தி வருகின்றன. என்னால் பொறுக்க முடியவில்லை. அவற்றை அழிக்கத்தான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்" என்றது தவளை. "நான் எப்படி உன் இடத்துக்கு வரமுடியும்?" என்றது பாம்பு. "நான் வரும் இராட்டினத்தின் வழியாகவே உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன்" என்றது தவளை.





பாம்பும் யோசித்தது. நாமோ தினமும் உணவுக்காகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது இப்படி வலிய வந்து உணவுக்கு வழி செய்யும் தவளையின் கோரிக்கையை நாம் ஏன் மறுக்க வேண்டும்? என்று நினைத்தபடி தவளையுடன் அந்த கிணற்றுக்குள் சென்றது பாம்பு.

கிணற்றுக்குள் வயோதிபத் தவளைக்குத் தொல்லை கொடுத்து வந்த தவளைகளை அனைத்தையுமே தின்று அழித்தது பாம்பு. வயோதிபத் தவளை மகிழ்ச்சியுற்றது. ஆனாலும், அந்த மகிழ்ச்சி என்பது நெடுநாள்கள் நீடிக்கவில்லை. பாம்பு அந்தத் தவளையைப் பார்த்து, "உன்னுடைய எதிரிகள் எல்லாம் அழிந்துவிட்டபடியால், என் பசிக்கு வேறு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும்" என்றது. அந்தத் தவளையோ, "நண்பரே! நீர் வந்த வேலை முடிந்துவிட்டது . உமது உதவிக்கு நன்றி. எனக்கு உமது உதவி இனிமேலும் தேவையற்றது" என்றது. ஆனால் பாம்போ கோபத்துடன், "உன்னை நம்பித்தான் நான் இங்கு வந்தேன். இப்போது என்னுடைய இடத்தில் வேறு ஏதாவது உயிரினங்கள் வந்து குடியேறி யிருக்கும். ஆக, தினந்தோறும் எனக்கு நீயே ஒரு தவளையை உணவாகக் கொடுக்க வேண்டும். இல்லையேல் உன் கூட்டத்தில் இருப்பவர்களை நான் என் விருப்பப்படி பிடித்துத் தின்பேன் என் பசியைப் போக்கிக் கொள்வேன்" என்று அச்சுறுத்தியது. அந்த வயதான தவளையும் பயம் கொண்டது. தினந்தோறும் ஒரு தவளையை பாம்புக்குக் கொடுத்து வந்தது. கடைசியில் பாம்பு, அந்தத் தவளையின் மகனையும் தின்று உயிர்ப் பலி கொண்டது. இறுதியில் வயோதிபத் தவளையும் அதன் மனைவியும் மட்டுமே எஞ்சியிருந்தனர். தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவை தந்திரமாகத் தப்பியோடின. பாம்பு ஏமாற்றமடைந்தது.

**நீதி: நட்புக் கூட நல்லவர்களோடே அமைய வேண்டும் .இல்லையேல், இழப்பு எமக்குத் தான்.**



றெ.றக்ஷனா,
தரம் - 3D,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



சரவணபவன்,
தரம் - 10B,
யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை
மகா வித்தியாலயம்.



## சிந்தனைக்கு

மாற்றானைத் துணை என்று நம்ப வேண்டாம். வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.

– உலகநாதர்

## விடுகதை

1. அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?
2. அடித்து நொறுக்கி அனலில் போட்டால்,ஆவியாகத்தோன்றி அழகாய் மணக்கும். அது என்ன?
3. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
4. அறிவின் மறுபெயர், இரவில் வருவது. அது என்ன?
5. பிறந்தது முதல் வயிற்றாலே போகிறது. அது என்ன?
6. ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபங் கட்டி, ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம். அது என்ன?
7. எட்டாத ராணியாம் இரவில் வருவாள், பகலில் மறைவாள். அவள் யார்?
8. ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல; சூடு கொடுக்கும், தீ அல்ல; பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன?
9. அள்ளவும் முடியாது, கிள்ளவும் முடியாது. அது என்ன?
10. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?

### விடைகள்

1. மிருதங்கம்
2. சாம்பிராணி
3. வளையல்
4. மதி
5. பாம்பு
6. தேன்கூடு
7. நிலா
8. சூரியன்
9. காற்று
10. மரம்

## பழங்களின் நிறங்களும் குணங்களும்

### பச்சை நிறப் பழங்கள்



இந்தப்பழங்களுள் பச்சைத் திராட்சை, பச்சை அப்பிள், சீத்தாப்பழம், கொய்யா, பலாப்பழம், பேரிக்காய் போன்றவை அடங்கும். இவை காய்கறிகளை ஒத்திருப்பதால் அவற்றிலுள்ள சத்துக்கள் போலவே இவ்வகைப் பழங்களிலும் உள்ளன. உடலின் வளர்சிதை மாற்றங்களில் பச்சை நிறப் பழங்கள் மிகுந்த பங்களிக்கின்றன. மலேரியா, தைரொயிட் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பச்சை நிறப் பழங்களை அதிகம் உட்கொண்டால் இளைத்த உடல் எளிதில் தேறும்.

(தொடரும்)

## சிரி...சிரி...



ஆசிரியர்: டேய்! ஏன்டா காற்றாடியை நிறுத்திவிட்டாய்?
மாணவன்: நீங்கதானே சேர் சொன்னீங்க, வியர்வை சிந்திச் சாப்பிடணும் என்று
ஆசிரியர்: ஆ....!

## வட்ட வட்ட தோசை...

தோசை அம்மா தோசை
வட்ட வட்ட தோசை
அரிசி மாவும் உளுத்தம்மாவும்
கலந்து சுட்ட தோசை...!

அப்பாவுக்கு நான்கு
அண்ணனுக்கு மூன்று
அக்காவுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று...!

எல்லாமாக பத்து
அம்மா தந்த தோசை
சீனி நெய்யும் சேர்த்து
கூடிச் சேர்ந்து உண்போம்...!



## நட்பு

### இயைபுறும் பொன்மொழிகள்

- நட்பு என்பது ஆரோக்கியம் போன்றது. அதை இழந்த பின்பு தான் அதன் அருமையை உணர்கிறோம்.
- புத்தகங்கள் எம்முடன் பேசும் மௌன நண்பர்கள்.
- எந்த ஒரு காயத்துக்கும் நண்பன் மருந்தாவான். ஆனால், நண்பன் ஏற்படுத்தும் காயத்துக்கு மருந்தே இல்லை.
- உன் நண்பனுக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக்கொடு. ஆனால், ஒருபோதும் நண்பனை மட்டும் விட்டுக்கொடுத்துவிடாதே.
- வாழ வைப்பவன் இறைவன், வாழத் தெரிந்தவன் மனிதன், விழ வைப்பவன் துரோகி, தூக்கி விடுபவன் நண்பன்.
- உரிமை கொண்டாடும் உறவை விட, உறவைக் கொண்டாடும் நட்பே சிறந்தது.
- உன் நண்பர்களைக் காட்டு. உன்னைப் பற்றிச் சொல்கிறேன்.
- பெருமைக்காரன் கடவுளை இழப்பான், கோபக்காரன் தன்னையே இழப்பான், பொறாமைக்காரன் நண்பனை இழப்பான்
- ஒருசில சமயம் உன் நண்பர்களை நீ தேர்ந்தெடுக்கிறாய். சில சமயங்களில் அவர்கள் உன்னைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். பழைய நண்பர்களையும் தொடர்பில் வையுங்கள். புதியவர்கள் வெள்ளி என்றால், பழையவர்கள் தங்கம்.
- நட்பு என்றும் தோல்வி அடைவதில்லை, தவறு செய்வதும் இல்லை.
- பிரச்சினைகளே இல்லாமல் கூட இருந்து விடலாம். ஆனால், உலகத்தில் நண்பர்கள் இல்லாமல் இருக்க முடியாது.
- புத்தகங்களும், நண்பர்களும் குறைவாக இருந்தாலும், சிறந்ததாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்சிகா சிவராமலிங்கம்



# “பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க”

# அந்தப் பதினாறும் என்னென்ன...?

தமது பிள்ளைகளுக்கு, காலம் கனிந்துவர, அவர்கள் தாம் சொந்தக் காலில் நிற்கும் நிலையை அடைய, தனிவாழ்வு வகுத்துத் தாரைவார்த்துக் கொடுப்பதும் தமிழர் பண்பாடு. மங்கல வாத்தியங்கள் முழங்க, மறையவர் மந்திரம் ஓத, மணமகன் மாங்கல்யத்தை மணமகளாக, மறுகணம் மனையாளாக மாறப்போகும் மங்கையின் கழுத்தில் சூடுகின்றான். புது வாழ்வு மலர்கின்றது. குரவர்களின் ஆசி தொடர்கின்றது. அறுகரிசி மலர் மழையாக, மங்கல வாழ்த்தாக மணமக்களை அலங்கரிக்கின்றது. மாலைகள் ஒன்றன் மேல் ஒன்றாகக் குவிகின்றன. இதற்கிடையில் பழமையில் ஊறிய முதியவர் ஒருவர்.

''நாமிருவர் நமக்கிருவர்'' எனும் கொள்கைக் காலம் இது. ஆனால், முதியவரோ,

“ஆல்போற் தழைத்து
அறுகுபோல் வேரூன்றிப்
பதினாறும் பெற்றுப்
பெருவாழ்வு வாழ்க”

என்று தள்ளாடிய குரலில் பணிவாகக் கூறி நிற்கின்றார். அங்கு வந்திருந்த அனைவரையும் அது சிரிக்க வைக்கின்றது. சிரிப்பின் பின்னணியில் உள்ள சிந்தனை தான் என்ன? அது பதினாறு பிள்ளைகள் பெறும்படியான கூற்று இல்லாவிடில் அதன் அர்த்தம் என்ன? சிந்தியுங்கள். அந்தப் பதினாறும் என்னென்ன...?

### 1.கலையாத கல்வி

காலத்தால் அழிவுறாத செல்வம் கல்விச் செல்வமே. நீங்கள் கற்கவேண்டும். கற்றவற்றை மறக்காதிருக்க வேண்டும். அத்துடன் கற்றவழி ஒழுகவேண்டும். இதன் மூலம் அறுபத்து நான்கு கலைகளுக்கும் உறைவிடமாக முடியும். அவை கற்றல், கேட்டல் வாயிலாக அமைபவை. இதுவே பதினாறு செல்வங்கள் என்று உரைப்பவற்றில் முதன்மையானது.

### 2 .குறையாத வாழ்வு

இன்று இல்லறத்தில் வலது கால் எடுத்து வைக்கும் நீங்கள் செல்லும் பாதை நீண்டே செல்லவேண்டும். நீண்ட ஆயுள் கொண்டு தலைமுறைகள் பல கண்டு வாழவேண்டும். நூறாண்டு வாழவேண்டும்.

“நூறு வருசம் இந்த மாப்பிள்ளையும் பெண்ணும்தான் ஆயுள் முழுக்க இங்கு வாழனும்...” என்ற சினிமாப்படால் கூறும் பொருளும் இதுவே. இதனால் நிறைவான வாழ்வு என்பதும் பதினாறு செல்வங்களில் இரண்டாவதாயிற்று.

### 3. கபடு பாராத நட்பு

“உடுக்கை இழந்தவன் கைபோல
ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” இதுவும் சென்னாப் புலவர் செப்பிய சொல்லோவியம். கருத்தோவியம். பிறருக்கு நல்ல நண்பர்களாக வாழுங்கள். இது உங்களுக்கு இடுக்கண். இன்னல் இல்லை என்ற நிலை. இன்பத்திலும் துன்பத்திலும் இனிதே உதவும். இது பதினாறில் இடம்பிடித்த மூன்றாவதாகும்.

### 4 .குன்றாத வளமை

“குறைகளைக் குறைக்க வேண்டும்
நிறைகளை நிறைக்க வேண்டும்” இந்த மனநிலைதான் குறை, நிறை என்ற எண்ணம் தோன்றக் காரணம். நீங்கள் பெறும் வளங்கள் நிலமாக இருக்கலாம், எவையாகவும் இருக்கலாம். அவை எல்லாம் குற்றப்படாத, குறுக்கு வழியில் சம்பாதிக்காதவையாக, கறைபடியாதவையாக அமைவதுடன் தேவைக்கேற்பச் சிறப்புற அமையட்டும் என்பதே நான்காவதாகும்.

### 5.குன்றாத இளமை

குறையாத வாழ்வு என்று முன்னர் கூறியதை அவதானியுங்கள். நீங்கள் நூறாண்டுகள் வாழ வேண்டும். அதை ‘இன்றும் பதினாறு’ என்று என்றைக்கும் எல்லோரும் கூறும்படியாக இளமையுடன் வாழுங்கள். உங்கள் மணிவிழாக் கூடப் பார்ப்போர் மனதில் இது மணவிழாவா? என்ற கேள்வியைத் தோற்றுவிக்கும் வகையாகக் குன்றாத இளமையுடன் சிறக்க வேண்டும் என்பதால் இது ஐந்தாவதாயிற்று.

### 6. அழுபிணி இல்லாத உடல்

அழுபிணி என்றால் நோய். நோயால் அழுந்துவது, நொந்து அழுவது என்றும் பொருள் கொள்ளலாம். புத்தர் சித்தாந்த அறிவு பெற்றது பிணி மூப்புத் தோற்றத்தைக் கண்டே. இந்த விடயத்துக்கு ஒரு சினிமாப் பாடலையும் உதாரணமாக்கலாம்.

“நுறுவயது வாழப் போகும் தங்கச்சி நீ
நோயில்லாமல் நொடியில்லாமல் வாழவேண்டும் தங்கச்சி”

இது ஒரு அண்ணன் தன்னுடைய தங்கையை வாழ்த்துவதாக அமைந்த பாடல். மனித அங்கங்கள் பல நூற்றுக் கணக்கானவை. அவை எந்தக் காலத்திலும் நோய் நொடி இல்லாமல் இருக்க வேண்டும்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்று குறிப்பதுவும் நோயில்லாமை பெரும் செல்வம் என்பதனாலேயே. இதானால் இது பதினாறில் ஆறாவதாக அமைந்தது.

### 7 . சலிக்காத மனம்

வாழ்க்கையில் பிறப்பு, இறப்பு, செல்வம், வறுமை போன்றன சந்திரனைப் போன்று தோற்றமளிப்பவை. வளர்பிறையாகவும் வளரலாம், தேய்பிறையாகவும் தேயலாம்.

ஆனால் தேய்வைக் கண்டு, வறுமையைக் கண்டு, நோயைக் கண்டு இன்னும் மனித வாழ்வில் எங்கெங்கெல்லாம் சலிப்புத் தோன்றுமோ, அவை எல்லாவற்றையும் கண்டு சலிப்படையாது,“முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்” என்பதை மனங்கொண்டு சலிப்படையாத திடமான மனஉறுதி என்பதும் இந்தப் பதினாறுக்குள் ஒன்றாகின்றது.

### 8 .அன்பகலா மனைவி

“காதல், ஒருவனைக்
கைப்பிடிப்பது மட்டுமல்ல அவன்
காரியம் முழுவதிலும்
கைகொடுப்பது கடமை”

என்று பாரதியார் உரைக்கின்றார். நீ துணைவனாகப் பெற்றவன் உனக்குத் துணைவன் மட்டுமல்ல, நீயும் அவனுக்குத் துணைவி. அதாவது “மனைவி அமைவதெல்லாம் கடவுள் கொடுத்த வரம்” எனும் பாடல் உரைக்கும் மனையாளின் முக்கியத்துவம் இது. அவள் அன்பும், அடக்கமும், ஆளுமையும் ஒன்றுசேரக் கிடைப்பது சிறப்பிலும் சிறப்பே.

### 9. தவறாத சந்தானம்

சந்தானம் என்பது இங்கு சந்ததி எனப் பொருள்படும். சந்ததி இல்லாவிடின் அது பெருங்குறை.

நற்பிள்ளைகளைத் தலைமுறைகள் தழைத்தோங்க, தமது பெயர் தமக்குப் பின்னாலும் நிலைத்துவாழவும் வாழையடி வாழையாக நிலைத்து வளரவேண்டும் என்றும் வாழ்த்தினர்.

சந்ததி பிள்ளைச் செல்வம் என்பதை இந்தப் பதினாறு செல்வங்களில் ஒன்றாகக் கூறினர்.

### 10. தாழாத கீர்த்தி

கீர்த்தி என்பது புகழைக் குறிக்கும். அது செல்வத்தால் , கல்வியால், ஞானத்தால் வரலாம். அது தனி ஒருவரைச் சார்ந்தது மட்டுமன்றி தலைமுறைகளூடும் தொடரலாம். உதாரணமாக, சேய்க்கு வரும் நோய்க்குத் தான் மருந்துண்ட காந்தியடிகளைக் குறிப்பிடலாம். பதினாறுகளில் பத்தாவதாக அமையும் இது வீட்டிலும், நாட்டிலும், உலகிலும் உயர்ந்தவர் என்று வான்புகழ மற்றவர்கள் வாழ்த்தி வாழ்வதைக் குறிப்பதாகும்.

### 11. மாறாத வார்த்தை

“வாய்மை எனப்படுவது யாதேனில் யாதொன்றும் தீமை இலாத சொல்” என்றார் வள்ளுவர். இதையே முதியவர்களும் அன்றைய முதுகுரவர்களும் பதினாறு செல்வங்களுக்குள் பதினொன்றாவதாக அடக்கினர். அரிச்சந்திரன் இன்றுவரைப் பேசப்படக் காரணமென்ன...? நகரை இழந்தான். நாட்டை இழந்தான். அரசை இழந்தான். அன்பு மனைவியை இழந்தான். அரும் புதல்வனை இழந்தான். சுடலையில் காவல்காரன் ஆனான். இத்தனைக்கும் அவன் வார்த்தையில் மாறவில்லை. சத்தியம் தவறவில்லை. நெறி பிறழாத வார்த்தை என்பதும் இதன்படி ஒரு பெரும் செல்வமே.

### 12. தடைகளற்ற கொடை

இல்லை என்ற சொல் என்னிடமில்லை என்பது வார்த்தையளவில் இருக்காது செயலிலும் வேண்டும். அதற்கு முதலில் கருணை வேண்டும். கருணை இருந்தால் மட்டும் போதாது கையில் பொருள் வேண்டும். கையில் பொருள் இருந்தால் மட்டும் போதாது அதை வாரி வழங்கும் தாராள மனம் வேண்டும். தான் வாழ்ந்தால் மட்டும் போதாது. கொடுப்பவர்க்கும், பெறுபவர்க்கும் தடைகள் வராமல் இருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

### 13. தொலையாத நிதி

செல்வத்தின் தெய்வம் இலக்குமி. இலக்குமி உங்கள் வாழ்வில் உங்களுடனேயே வாழட்டும். அட்ட ஐஸ்வர்யங்களும் ஓங்கட்டும். நவநிதிகளும் உங்கள் களஞ்சியங்களை நிரப்பட்டும். செல்வச் செருக்கற்ற செல்வமே பயனுள்ள செல்வம் என்ற பொருள் தொனித்து நிற்பதையும் கவனிக்க வேண்டும்.

### 14. கோணாத கோல்

இது அரசர்களுக்கு மட்டுமல்ல இல்லறத்தாருக்கும் பொருந்தும். சமன் தூக்கும் கோல்போல தனக்கொன்று, பிறருக்கொன்று என்று எண்ணாது நீதியே நியாயமாக வாழுங்கள் என்ற வாழ்த்தையும் பதினாறில் ஒன்றாகக் கூறுவர்.

### 15. துன்பமில்லாத வாழ்வு

துன்பம் எவற்றாலெல்லாம் வரும் என்பதைப் பெரிய புராணத்தில் தெளிவாகக் கூறியுள்ளார் சேக்கிழார். துன்பங்கள் தன்னால் வரலாம், தலைவனால் (அரசன்) வரலாம். பந்துகளால் அதாவது பரிசனங்களால் வரலாம், கல்வரால் வரலாம், விலங்குகளால் வரலாம். இவை எல்லாம் உங்களை அணுகாத வாழ்வு கிட்டட்டும். அதுவே பதினாறில் பதினைந்தாவது.

### 16.துய்ய நின் பாத அன்பு

பதினாறாவது பேறு கடவுள் பத்தியைக் குறிப்பது. தத்தம் சமயத்தவர் தம் மதத்தை இங்கு கொள்ளலாம். மணமக்கள் மட்டுமல்ல மற்றவர்க்கும் இந்த மனதை ஒருநிலைப்படுத்தும் இறைஅன்பும் குறித்த பதினாறு செல்வங்களுக்குள் ஒன்றாக இருக்கின்றது.

பெரும்பாலும் திருமண நிகழ்வுகளிலே தான் ‘பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க’ எனும் வாழ்த்தைக் கவ னிக்கலாம். இதன் உள்ளார்ந்தத்தைப் பலரும் “பதினாறு பிள்ளை களைப் பெறச் சொல்கிறார்களோ...!” எனத் தவறாகக் கருதுகின்றனர். ஆனால் அதுவல்ல இதன் பொருள். அவர்களின் ஆசீர்வாதம் குறிக்கும் அந்தப் பதினாறும் மேற்குறித்தவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதி 22.7.1912ஆம் ஆண்டு முதலாம் பதிப்பாகவும் 6.8.1915 ஆண்டு இரண்டாம் பதிப்பாகவும் வெளியான யாழ்ப்பாணச் சரித்திரத்திலிருந்து...

# யாழ்ப்பாண சரித்திரம்

தி.இராஜநாயகி

யாழ்ப்பாணம். அது யாழில் வல்ல ஒரு பாணனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டமையின் யாழ்ப்பாணமெனப்படுவதாயிற்று. மணற்றி என்பது அதன் பூர்வநாமம். அது பின்னாளில் மணற்றிடல் எனவும் வழங்கிற்று. இம்மணற்றி என்னும் பெயர் இறையனார் அகப்பொருள் உதாரணச்செய்யுட்களில் வருகின்றது.

அதன் வடக்கும் கிழக்கும் வங்காளக்குடாக் கடலும், தெற்குப் பூநகரிக் கடல், பண்ணைக்கடல்களும், மேற்குக் கோடிக்குடாக் கடலும் எல்லையாம். அஃது இலங்கையின் வடபாகத்தேயுள்ள ஒரு தூவிகற்பம். அதன் அயலிலே காரைதீவு, வேலணைத்தீவு, புன்குடித்தீவு, அனலைதீவு, நெடுந்தீவு முதலிய தீவுளுமுண்டு. இவைகளெல்லாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தனவேயாம்.

### நிலவியல்பு

பூர்வத்தில் இந்நாடு ஒரு சிறந்த நாடாயிருந்து பின்னர் கடல்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் அது திடராகி மணல்கொண்டு காலவடைவில் மீண்டும் நாடாயிற்று. முன்னொருகாற் கடல்கொண்டழிந்ததென்பது இந்நிலத்தின் கீழேயுள்ள கற்பாறைகளிலே சிப்பிகளும் நத்தைகளும் பதிந்து கல்லாய்க்கிடந்தாலும், கடலினுள் நெடுந்தூரம் கற்பாறைகள் காணப்படுதலாலும் துணியப்படும். இதற்கு ஆதாரப் பார் கருங்கற்பாறை.(boake's mannar)



### கீரிமலை

வங்காளக்குடாக் கடல் இடைவிடாது யாழ்ப்பாணத்தின் வடகரையைத் தாக்கிக் கொண்டிருத்தலால் அக்கரை உயர்ந்து எதிர்த்தாக்கிக்கொண்டிருக்கின்றது. முன்னொரு காலத்திலே யாழ்ப்பாணத்தின் வடகரை முழுதும் மலைத்தொடராயிருந்து பின் கடலாற்றாக்குண்டு அழிந்துபோக, எஞ்சியுள்ள அதன் அடிவாரமே இப்போது கீரிமலையெனப்படுவதென்று கூறுவர். அம்மேட்டு நிலத்திற் சுவறிய மழைநீர், நன்னீரருவியாகிப், பள்ளமாகிய கடற்கரையிற் பலவிடங்களிலே சுரந்தோடுகின்றது. இவ்வருவியில் ஸ்நானஞ்செய்த ஒரு முனிவர் தமது கீரிமுகநோய் நீங்கப்பொற்றமையால் இவ்விடம் கீரிமலையெனப்பட்டது. இந்த அருவிகளிலே ஸ்நானஞ்செய்வோர் அநேக நோய்கள் தீரப்பெற்றுத் திடகாத்திரம் பெறுகின்றார்கள். கீரிமலையிலிருந்த பூர்வ சிவாலயமும் அம்மலையோடு கடல் வயப்பட்டது.

சிலபாகம் மணற்பாங்காகவும், சிலபாகம் களிப்பாங்காகவும், சிலபாகம் செம்மண் பாங்காகவும், சிலபாகம் சொரிகற்பாறையாகவும் உள்ளது. இங்கே ஐந்து முதல் இருபது முழம்வரையும் ஆழமாகத் தோண்டப்பட்ட கிணறுகளிலே நன்னீருண்டு. மழை ஆவணிமுதல் மார்கழிவரையும் காலமழையாகவும், பங்குனி சித்திரையிலே அகாலமழையாகவும் பெய்யும். காலமழைக்காலத்திலே நெல் வரகுகளும், மற்றக் காலங்களிலே தினை குரக்கன் முதலிய தானியங்களும் விளைவிக்கப்படும். வாழை, கமுகு, கிழங்கு, காய்கனி, புகையிலை முதலியவைகள் தோட்டங்களிலே கிணற்று நீரால் வளர்க்கப்படும். மணற்பாங்கிலே தென்னந்தோப்புக்களும், மற்றவிடங்களிலே பனந்தோப்புக்களும் வளர்க்கப்படும். கடலிலே சங்கும் மற்றெத்தேயத்திலும் அரிதாகிய வலம்புரிச்சறங்கும், தெளிந்துருண்டு பிரகாசந்தரும் முத்தும் குளிக்கப்படும்.



### ஈழமண்டலம் நாகர்கள், தமிழ்க்குடிகள்

இலங்கை ஈழமேயாயினும் வடபாகமும் கீழ்பாகத்திலொரு பகுதியும் ஈழமண்டலமெனப்படும். யாழ்ப்பாணம் ஈழமண்டலத்திலொருபகுதியாம். சேர சோழ பாண்டி மண்டலங்களோடு ஈழமண்டலமுமென்றாகும். சேர சோழ பாண்டி மண்டலங்களினின்றுமே சனங்கள் ஈழமண்டலத்திற் குடியேறுவராயினர். இவர்கள் குடியேறுமுன் இவ்வீழ மண்டலத்தைக் கைக்கொண்டிருந்தவர்கள் நாகர்கள். சங்கப்புலவருளொருவராயிருந்த முடிநாகராயரும் இந் நாகர்குலத்தவரே என்பர். அவர்கள் ஒரு ஜாதி மனுஷர். அவர்களைவென்று ஈழநாட்டைக் கைக்கொண்டவர்கள், சேர சோழ பாண்டி மண்டலங்களென்னுந் தமிழ்நாட்டிலிருந்து வந்த தமிழர். அவர்கள் தமக்கு இராசதானியாய்க் கொண்டிருந்த நகரம் மாதோட்டம். அவர்கள் குடிகொண்ட மற்றொரு நகரம் திரிகோணமலை. மாதோட்டத்திலேயுள்ள திருக்கேதீச்சரம் என்னும் சிவாலயமும், திரிகோணமலையிலுள்ள சிவாலயமும் பண்டுதொட்டு இவர்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இச்சிவாலயங்களும் சங்கும் முத்துமே தமிழரை அவ்விடத்துக் குடிகொள்ளுமாறு கவர்ந்த காரணங்களாம்.



### தமிழரசு

மாதோட்டம் முன்னொரு காலத்திலே மிகச்சிறந்த செல்வநகரமாயிருந்தது. ரோமர் கிரேக்கர் எனப்படும் யவனர், தம்மரக்கலங்களோடு இங்கே வந்து, தந்தம் முத்து இலவங்க முதலியன பண்டமாற்றிச் செல்வராயினர் என்றால் மாதோட்டத்தின் பெருமை கூறுவதென்னை. அது சிற்பத்தில் வல்லதபதிகளுக்கும் உறைவிடமாயிருந்தது. இங்கே காந்தக்கோட்டையும் ஒன்றிருந்ததாகக் கூறுவர். பின்னாளில் ஏலேலனுமிங்கே ஒரு கோட்டை கட்டினான். மாதோட்டத்திற்குத் தெற்கேயுள்ள குதிரைமலையும் மணிபுரமும் தமிழ்ச் சிற்றரசரால் ஆளப்பட்டு வந்தன. மாதோட்டத்திலிருந்த சிற்றரசர்கள், ஒருகாற் பண்டியருக்கும் ஒருகாற் சோழருக்கும் மாறிமாறித்திறையரசர்களாயிருந்தார்கள். சிலகாலங்களிலே பாண்டியரும் சோழரும் அதனை நேரேகைக்கொண்டும் அரசுசெய்து வந்தார்கள். விஜயன் இலங்கைக்கு அரசனாதற்குமுன் பன்னெடுங்காலமாக ஈழநாட்டைத் தமிழரே ஆண்டுவந்தார்கள். கிலமாயிருந்த திருக்கேதீச்சரத்தை விஜயன் புதுக்குவித்தவனன்றிப் புதிதாக அமைத்தவனல்லன். ஈழநாட்டுக்குத் தெற்கேயுள்ள சிங்களதேசத்தை அக்காலத்தில் முற்றும் ஆண்டு வந்தவர்கள் யக்ஷரும் நாகரும். யக்ஷரும் நாகரும், ஆதியிலரசுசெய்த இராவணனுக்குப் பரிவாரமாக இருந்து சுருங்கிய யக்ஷர் நாகருடைய சந்ததியர். அது நிற்க, ஈழமண்டலத்துத் தமிழருக்கும் பாண்டிநாட்டாருக்கும் இடையிடையே பகைமூண்ட காலங்களிலே அவர்களுக்குப் போர்க்களமாகவிருந்தவிடம் மணற்றியாம்.(யாழ்ப்பாணம்) மணற்றியில் அந்தப்பகுதி இன்னும் களபூமி என்னும் பெயரால் வழங்குகின்றது. ஆதலால் மணற்றி நெடுங்காலம் குடியில்லாத நாடாகவிருந்தது.

### குதிரைமலை

அக்காலத்திலே சேழராசன் புத்திரியாகிய மாருதப்பிரவாகவல்லி, தனக்குற்ற குதிரை முகமென்னும் நோயினாலே வருந்துங்காலத்தில், கீரிமலையிலேயுள்ள சிற்றாற்றில் ஸ்நானஞ்செய்யின் அந்நோய் நீங்குமென்று ஒரு முனிவர் சொல்ல, அவ்வாறே தன்பரிவாரங்களோடு சென்று அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அந்நோய் நீங்கப்பெற்றாள். அவ்விடம் அது காரணமாகக் குதிரைமலை என வழங்கிற்று. அம்மலை பின்னாள் வீழ்ந்ததுபோலும். அவளும் அவள் பரிவாரங்களும் அவ்விடத்திலே சிறிதுகாலம் வசித்தார்கள். அப்போது கதிர்காமம் என வழங்குங்கார்த்திகேய கிராமத்தில் அரசு செய்திருந்த உக்கிரசிங்க ராஜனும் அச் சிற்றாற்றிலே ஸ்நானஞ்செய்தற்கு அவ்விடம் வந்தான். அவன் அவளைக் கண்டு அவள்மீது தணியாப் பெருங்காதலுடையனாகி அவளைப் பெரும் பிரயாசத்தோடிசைவித்து மணமுடித்துக்கொண்டு சிறிதுகாலம் அவ்விடந்தங்கிப் பின் அவளோடுதன் இராசதானிக்குச் சென்றான்.

### கந்தரோடை, மாவிட்டபுரம்

அவள் அமைப்பித்த சுப்பிரமணியாலயபூசைக்கும் அருச்சகர்களுக்கும் கந்தரோடையென வழங்கும் இடத்தைச் சமர்ப்பித்துத்திருத்தி நெல்விளைநிலமாக்கி அவர்களுக்குப் பிரமதாயமாகக் கொடுத்தான். அவளோடு வந்த தளபதியாகிய மகாவிட்டன் என்பவனை, அக்கோவிலை நடாத்தும் சர்வதிகாரியாக்கி மாகாவிட்டபுரமென இப்போது வழங்கும் இடத்திலிருத்தினாள். சோழியர் வசித்தவிடம் சோழியபுரமெனப்பட்டது. அது சுழிபுரமெனப் பின்னர் மருவி வழங்குவதாயிற்று. மாளிகை கட்டப்பட்டவிடம், பின்னர்நாழில் பழையநகரமெனப் பொருள்படும் தொல்புரமெனப்பட்டது. மாகவிட்டன் வசித்தவிடம் மாவிட்டபுரம் எனப்பட்டது. கந்தசுவாமியின் பொருட்டு விடப்பட்ட இடம் கந்தரோடையெனப் பட்டது. ஓடை – குளவெளி. மாளிகையிருந்தவிடம் இன்றும் மாளிகைத்திடரெனப்படுகின்றது.

கீரிமலையிருந்த உன்னதமலையும் அதனருகேயிருந்த சிவாலயமும் கடல்வாய்ப்பட்டதன் பின்னர் இதுவே தமிழர் குடியேறிய முதன்முறையாம். இங்ஙனங்குடியேறிய தமிழரும் நெடுங்காலம் நிலைகொள்ளவில்லை. மாருதப்பிரவாகவல்லிக்குப்பின் இவ்விடம் நெடுங்காலம் குடியில்லாத நாடாயிருந்தாதல் வேண்டும். கடல் கொள்ளுமுன்னே நளமகாராசா வந்து கீரிமலையிலே தங்கிப் போனான் எனத் தக்ஷிணகைலாச மான்மியங் கூறுகின்றது. எனவே அச்சம்பவம் நிகழ்ந்து பல யுகங் கழிந்தனவாதல் வேண்டும். அதுநிற்க,

### விஜயன்

இற்றைக்கு 2454 வருஷத்துக்குமுன்னே(543 B.C.) மகததேசாதிபதி, தனத மகன் விஜயன் என்பவனை, அவன் துர்க்குணங்காரணமாகத் தனது நாட்டைவிட்டோட்டினான். அவனும் அவன் தோழர் எழுநூறு காளையரும் மரக்கலமேறி இலங்கைக் கரையை வந்தடைந்தனர். அங்ஙனம் அடைந்த துறை இலங்கைக் கீழ்க்கரையிலுள்ள துறையென்றும் மேல்கரையிலுள்ள துறையென்றும் துணியவியலவில்லை. இப்போது புத்தளமெனப்படும் இடத்துக்கு அணித்தான தம்பபண்ணை என்னுந்துறையில் வந்திறங்கினார்களென்பது மகாவமிசமென்னும் சிங்கள சரித்திரம். விஜயன் வந்திறங்கிய சில தினத்திலே, அந்நாள் இலங்கையில் அந்தப்பாகத்தை அரசு செய்திருந்த யக்ஷசத்தலைவன் புத்திரியாகிய குவேனியைக்கூடி, அவள் மூலமாக அப்பகுதியரசையுங்கவர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பொறியியல் படிப்பை இடைநடுவே நிறுத்திய இரண்டு இளைஞர்கள், அந்தக் கல்வி சார்ந்து நடக்கும் ஊழலைத் தந்திரமாகக் கண்டுபிடிப்பது தான், 'இவன் தந்திரன்'.




### கதை

கௌதம் கார்த்திக், ஆர்.ஜே.பாலாஜி இருவரும் சென்னையின் ரிச்சி வீதியில் மின்னணுச் சாதனங்கள் விற்பனை மற்றும் பழுது பார்க்கும் கடை வைத்திருக்கிறார்கள். இருவரும் தமது பொறியியல் கல்வியைப் பாதியில் கைவிட்டவர்கள். கௌதம் கார்த்திக்கிடம் பொறியியல் கல்லூரி மாணவி ஷ்ரத்தா ஸ்ரீநாத் ஒரு மடிகணினி வாங்குகிறார். சில நாட்களிலே அது பழுதாகிவிட திரும்பவும் அவரிடம் வந்து புது மடிக்கணினி வேண்டுமென்று சண்டை பிடிக்கிறார். அந்த.மோதல் பின்னர் காதலாக மாறுகிறது.

இதற்கிடையே, கல்வி அமைச்சர் சுப்பர் சுப்பராயன் வீட்டில் கௌதம் கார்த்திக், ஆர். ஜே.பாலாஜி இருவரும் சி.சி.டி.வி. கரமா பொருத்திவிட்டுத் தாங்கள் செய்த வேலைக்கான பணத்தைக் கேட்கும்போது பணம் கொடுக்கப்படாமல் அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஒருமுறை பணத்துக்காக அவர்கள் அங்கே செல்லும்போது, சுப்பராயன் பொறியியல் கல்லூரிகளின் அங்கீகாரம் தொடர்பாக இலஞ்சம் வாங்குவதையும், அரசியலில் இருந்துகொண்டு பெரிய அளவில் முறைகேடுகளில் ஈடுபடுவதையும் தெரிந்து கொள்கிறார்கள். அதனால் அவர்கள் எதிர்கொள்ளும் சம்பவங்கள் என்ன? கௌதம் கார்த்திக்- ஷ்ரத்தா ஸ்ரீநாத் காதல் என்ன ஆனது என்பதே மீதிக்கதை.

### காட்சியமைப்புக்கள்

அரசியல்வாதிகளிடம் விலைபோகும் கல்லூரி நிர்வாகம், அதன் உயர்த்தப்பட்ட கல்லூரிக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் தவிக்கும்-பொறியியல் கல்லூரி மாணவர்களின் நிலை, கல்வி சார்ந்து நடக்கும் கையூட்டுக்கள் ஆகியவற்றை ஆராய்ந்து தெளிவாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார், இயக்குநர் ஆர்.கண்ணன். பணத்தாள்களுக்குள் 'சிப்'பை (இடமுணர்த்தும் கருவி) வைத்து பணத்தைப் பின்தொடர்வது, வீதியில் 'ஸ்கானர்' வைத்து வாகனத்தைப் பின்தொடர்வது எனத் தொழில்நுட்பங்களைக் கையாண்ட உத்திகள் சுவாரஸ்யம்.

நாயகன், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியைக் கையாள்வதில் கில்லாடி என்பதைப் புரிய வைப்பதற்காகப் புகுத்தப்பட்ட ஆரம்பக் காட்சிகள், அதைதொடர்ந்து வரும் பாடல், அலைபேசிக் கண்டுபிடிப்புப் போன்றவை கதைக்குத் தடங்கலாக நிற்கின்றன.

### பாத்திரங்கள்

கௌதம் கார்த்திக்கின் நடிப்பில் முன்னேற்றம் தெரிகிறது. துரு துரு பாத்திரத்தைச் சரியாகச் செய்திருக்கிறார். என்றாலும் பண வசதியில்லாமல் தவிக்கும் ஒரு பொறியியல் கல்லூரி மாணவியாக நெகிழ்ச்சியடைய வைக்கிறார்.பொறியியல் கல்லூரிகளை கலாய்ப்பது, தகவல் தொழில்நுட்பத்தை ஆதரிப்பது என்பதாக நீளும் ஆர். ஜே.பாலாஜி அடிக்கும் நகைச்சுவைகள் சிரிக்க வைக்கின்றன. வழக்கமான காட்சிகளால் மெதுவாக நகரும் படத்துக்குப் பெரும் பலம் வில்லன் சுப்பர் சுப்பராயன். அவரின் தோற்றமும், மிரட்டும் பார்வையும் இரண்டாம் பாதியைத் தூக்கி நிறுத்து

### இசை, ஒளிப்பதிவு

எஸ்.எஸ்.தமன் இசையில் 2பாடல்கள் கதைக்குத் தேவைப்படாத நிலையில், ஆனாலும் பின்னணி இசை அந்தக் குறையைப் போக்குகிறது. பிரசன்ன குமாரின் ஒளிப்பதிவு இரவையும், கதையில் வெளிப்படும் தொழில்நுட்ப அம்சங்களையும் அளவாகப் பதிவு செய்திருக்கிறது.

மிக முக்கிய பிரச்சினையைக் கையிலெடுத்திருக்கும் இயக்குநர் ஆர்.கண்ணன், திரைக்கதையில் இன்னும் விறு விறுப்புத் தந்திரத்தைக் கையாண்டிருந்தால், தந்திரன் மனதில் தங்கியிருப்பான்.

வீண் பொழுதுக்குப் பரவாயில்லை



ஒரு வம்பு தும்புக்கும் செல்லாமல் காதலியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கும் கல்லூரி மாணவர், சூழ்நிலை காரணமாகத் தீயவனாவதே

### கதை

பல கொலைகளைச் செய்துவிட்டுச் சர்வ சாதாரணமாக நடமாடும் சைக்கோ ரவுடி, ராஜு சுந்தரம். கல்லூரி மாணவரான அஸ்வின் ஜேரோமும், சக மாணவியான வர்ஷாவும் காதலர்கள். கடற்கரைக்குச் செல்லும் இவர்களை, ராஜு சுந்தரத்தின் ஆட்கள் கிண்டல் செய்ய, அவர்களை அஸ்வின் ஜெரோம் நையப்புடைக்கிறார். பொடிப் பையன் தன் ஆள்களை அடித்ததால் கோபமடையும் ராஜு சுந்தரம், காதலர்களைப் பழிவாங்கத் துடிக்கிறான். எதிர்பாராத தருணத்தில் ராஜு சுந்தரத்திடம் காதலர்கள் சிக்கிக் கொள்ள, அவர்களைக் கொடுமைப்படுத்திக் கொல்ல முடிவெடுக்கிறான். இத்தனைக்கும் இடையில் ராஜு சுந்தரத்தைச் சுட்டுக் கொல்லுவதற்குப் பொலிசார் உசார் நிலையில். முடிவு என்ன? இதுவே கதை.

### கதை ஓட்டம்

2ஆவது பாதி கதைக்கேற்றவாறு விறுவிறுப்பாக இருந்தாலும், முதல் பாதி சொதப்பி விடுகிறது. காதலர்களின் குடும்பம், அவர்களது கல்லூரி வாழ்க்கை, காதல், ரவுடியின் உளவியல் சிக்கல், பொலிஸ் அதிகாரியின் நிலைமை ஆகியவற்றை நிறுவுகிறோம் என்ற பெயரில் உப்புச் சப்பில்லாத காட்சிகள் கொண்டு சித்திரிக்கப்படுகின்றது. முதல் பாதியில் நிமிர்ந்து உட்கார வைக்கும் ஒரே இடம், ரவுடிகளுக்கு நாயகன் திருப்பி அடிக்கும் சண்டைக் காட்சி."குறும்படம் மாதிரிப் போகுது.." என்று படம் தொடங்கியதுமே ரசிகர்கள் மத்தியில் இருந்து குரல்கள் எழுகின்றன. முழுப்படத்தையும் பார்த்த பிறகு, ச்...சே... என்றாகிவிடுகின்றது.

### சலிப்புத் தரும் சினிமாத்தனங்கள்

காதல் காட்சிகளும், பழைய, வழமையான படம் பார்ப்பதைப் போல் சலிப்பைத் தருகின்றன. காதலித்துத் திருமணம் செய்து கொண்டால், பெண்ணைப் பெற்றவர்கள் அத்தோடு அவளைத் தலைமுழுகி விடுவார்கள், ஆண் தரப்பில் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டார்கள் இந்தப் போக்கை இன்னுமா இந்த உலகம் நம்புகிறது, மிஸ்ரர் இயக்குநர்? சௌமியாவின் அப்பா, "அப்பா, அம்மான்னு சொல்லிக்கிட்டு வீட்டுப் பக்கம் வந்தே செருப்புப் பிஞ்சிடும்" என்று சொல்வது. மைக்கலின் தாய் மகனுக்கு நேர்சிந்தனையுடன் அறிவுரை போதித்துப் போவது, இந்தக் காட்சிகளுக்குப் பிறகு இரு தரப்புமே பிள்ளைகளை அப்படியே மறந்து போவது அத்தனையும் பழைய சினிமாத்தனங்கள்.




### பாத்திரங்கள், இசை, காட்சித்தொகுப்பு

நாயகி வர்ஷா, நஸ்ரியா சாயலில் பளிச்சிடுகிறார். நன்றாக நடிக்கவும் செய்துள்ளார். நாயகன் அஸ்வின் சண்டைக் காட்சிகளில் ஈர்க்கிறார். பாடல் வரிகள் இரசிக்கும்படி இருந்தாலும் இசை கைகோர்க்கவில்லை. சண்டைக் காட்சிகள் மட்டுமே ஆறுதல் தருகின்றன. பொலிஸ் ஆய்வாளராகப் பொன்வண்ணன் நிறைவான நடிப்பை தந்துள்ளார். முதல் பாதியின் தேக்கத்தைக் களைந்திருந்தால் முழுமையான விறு விறுப்புடன் இன்னும் ஈர்த்திருப்பான் யானும் தீயவன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ப்ரியமதா பயஸ்

# செல்லும் வழியின் தூரம்... 9



இப்போது பொக்கணைப் பகுதி மக்கள் வெள்ளத்தில் தத்தளித்தது. புலிகளின் வங்கி, கிளைகள் எல்லாம் பொக்கனைக்கு மாற்றப்பட்டிருந்தன.
அங்கே கூடாரங்களில் வங்கிகளும் இயங்கின. மக்கள் தமது வைப்புக்களைப் பெற்றுக்கொள்ள இலகுவான வழிகளாகப் புலிகள் இதனைக் கையாண்டனர்.
அத்தனை இன்னலிலும் மக்கள் தமது பணத்தை எடுக்க அவர்கள் பெரும் உதவி புரிந்தனர்.

### அரிசிக்கு அலைந்த அவலம்

எங்கள் வங்கிக் கிளையையும் அங்கே இயக்க முடிவாகியிருந்தது. ஆனால், பணியாளர்கள் எல்லோரும் திக்குக்கு ஒருவராக ஓடி இருந்தமையால் யாருக்கும் எதுவும் தெரியாது. எதேச்சையாக எமது வங்கிக்கிளை அலுவலகம் இயங்குவதைக் கண்டேன். ஓடிச் சென்று அந்த மாதத்துக்குரிய கொடுப்பனவை எடுத்துக்கொண்டேன். கொடுப்பனவை எடுத்ததும் மூவாயிரம் ரூபாவுக்கு ஒரு அங்கர் மாப்பெட்டியை வாங்கிக்கொண்டேன். மீதம் இருந்த பணத்துக்கு அரிசி வாங்கலாம் எனப் பொக்கணைக் கடற் கரையையும் மக்கள் வெள்ளத்தையும் பலமுறை சுற்றி வந்தேன் அரிசி கிடைக்க வில்லை.



### பயசுக்குக் கிடைத்தது பருப்பு!

எங்கோ ஒரிடத்தில் ஒரு சுண்டு கோதுப்பருப்பு பயசுக்குக்கிடைத்துவிட்டது. ஓட்டமும் நடையுமாக அதைக் கொண்டு வந்தார். கோதை நீக்காமல் அவிக்குமாறு எனக்கு உத்தரவு போடப்பட்டது. காரணம், கோதை நீக்கினால் அதில் பாதி குறைந்து விடும். அதைக் கோதோடு அவிப்பது நன்மையானது என்பது அப்போதைய நிலை. கூடவே இன்னொரு உத்தரவும் போடப்பட்டது. நிறையத் தண்ணீர் விட்டு அவிக்கும்படி. ஒரு பெரிய பானையில் ஒரு சுண்டு கோதுப்பருப்பைப் போட்டு அவிக்கின்றேன். நீரை வடித்து இன்னொரு பானையில் வைத்துக்கொண்டேன். காட்டுப்பசி பசிக்கிறது. அவிந்த பருப்பை பார்த்தால், ஒருவரின் வயிற்றைக் கூட நிரப்பத் தகுதியற்றுக் கிடக்கின்றது. அப்போதுதான் ஏன் இப்படிப் பசிக்கிறது என்று எண்ணத்தோன்றியது. எப்போதோ ஒருநாள் வெரித்தாஸ் வானொலி தமிழ் பணியில் ஜெகத் கஸ்பார் அவர்கள் சொல்லியது நினைவுக்கு வந்தது. "கடற்கரையில் குடியிருப்பவர்கள் கடுமையான பசியை எதிர்கொள்வார்கள். அதற்குக் காரணம் கடற்கரையில் வீசும் உப்புக் காற்றும் வெயிலும், உடல் நிலையில் ஏற்படுத்தும் மாற்றங்கள்" என்பதையும் நினைவுபடுத்திப் பார்த்தேன்.

### தண்ணீருக்கு அலைந்த அவலம்

தாங்க முடியாத பசியும், தாகமும் ஓடி ஓடிக் களைத்திருந்த உடலைச் சோர்வடையச் செய்தன. செய்வதறியாது திக்குத் திசை தெரியாது ஓடிக்கொண்டிருக்கின்ற மக்கள் வெள்ளத்தில் அகப்பட்ட மீன் குஞ்சுளாக நாம் தத்தளித்துக்கொண்டிருந்தோம். குடிப்பதற்குத் தண்ணீர் என்பது அருமருந்தாக இருந்தது. கடற்கரையில் எப்போதும் ஊறிக்கொண்டிருக்கும் ஒரு கிணறு இருப்பதாகத் தகவல் கிடைத்தது. இரண்டு கான்களை எடுத்துக்கொண்டு அந்தக் கிணறு இருக்கும் திசை நோக்கி நடக்கத்தொடங்கினேன். என்னோடு துணைக்கு அக்கம்பக்கத்துத் தறப்பாள்காரரும் சேர்ந்துகொண்டனர்.

> தாங்க முடியாத பசியும், தாகமும் ஓடி ஓடிக் களைத்திருந்த உடலைச் சோர்வடையச் செய்தன, செய்வதறியாது திக்குத் திசை தெரியாது ஓடிக்கொண்டிருக்கின்ற மக்கள் வெள்ளத்தில் அகப்பட்ட மீன் குஞ்சுளாக நாம் தத்தளித்துக்கொண்டிருந்தோம். குடிப்பதற்குத் தண்ணீர் என்பது அருமருந்தாக இருந்தது. கடற்கரையில் எப்போதும் ஊறிக் கொண்டிருக்கும் ஒரு கிணறு இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

அரைமணி நேர நடைக்குப் பின்னர் கிணறு இருக்கும் இடத்தைக் கண்டடைந்தோம். ஆனாலும் கிணற்றுக்கு அருகில் செல்லமுடியாத நிலை. 500மீற்றர் தூரம் வரைக்கும் கிணற்றைச் சுற்றி நிரை நிரையாக மக்கள் கூட்டம். நாமும் அவர்களுடன் இணைந்து கொண்டோம். ஆனால் தண்ணீர் எடுத்துக்கொண்டுதான் போகவேண்டும் என்ற நிர்ப்பந்தமான சூழல். இவ்வளவு பேரது தாகத்தையும் தீர்க்கக் கூடியளவு தண்ணீர் இந்தக் கிணற்றுக்குள் இருக்குமா? என்பது எனக்குள் பெரும் கேள்வியாக இருந்தது. அதை அறிவதற்காகக் கிணற்றை அண்மித்து எட்டிப்பார்க்கலாம் என்றாலும் ஒருவரும் ஒரு அடி முன் நகர விடுகிறார்கள் இல்லை. "பிள்ளை இங்கால வா..., இடைக்குள்ள பூராத...., நாங்கள் எவ்வளவு நேரமாய் நிக்கிறம்...., அங்கால செல் விழுகுது..." என்கின்ற குரல்கள். நானோ விடுவதாய் இல்லை "ஐயோ! நான் லைனைக் குழப்பேல்ல கிணத்துக்க தண்ணி நிக்குதோ எண்டு பாத்திட்டு வாறன்" என்றேன். என்னுடைய ஆவல் அவர்களையும் தொற்றி விட்டதுபோல. நான் வைத்திருந்த கலன்களை வரிசையில் அடிக்கிவிட்டுப் போவதற்கு அனுமதி கிடைத்தது. மெல்ல மெல்ல நகர்ந்து கிணற்றடியை அண்மிக்கிறேன். "எங்க புள்ள போறாய்...?"
"இங்காலவா..." என்கின்ற குரல்களே அதிகமாகக் கேட்டன. அவர்களின் ஆதங்கங்களைப் புரிந்தவளான நான் "கிணத்தைப் பார்க்க... கிணத்தை ஒருக்காப் பார்த்துட்டு வாறன்..." என்று சொல்லிக் கொண்டே கிட்டச் சென்று விட்டேன் கிணற்றை எட்டிப் பார்த்தேன். அட கடவுளே!!!

### மூச்சிழுத்துக் கொண்டிருக்கின்றது கிணறு

கிணற்றுக்குள் ஒரு அடி வரையான அளவு மட்டுமே நீர் இருக்கின்றது. அதை நாற்பது, ஐம்பது வாளிகளால் தொடர்ச்சியாக அள்ளிக்கொண்டே இருக்கின்றனர். அந்த ஒரு அடியளவான நீர் குறையவும் இல்லை, கூடவும் இல்லை. மனது கனத்துக் கண்கள் என்னை அறியாமல் கண்ணீரைக் கொட்டின. அந்த இயற்கைத் தாய் தரும் தண்ணீரின் நிலையை மனதுருகி நினைந்துகொண்டு திடமோடு எனது வரிசைக்குப்போய் அமர்ந்துகொண்டேன். "என்ன பிள்ளை தண்ணி நிக்குதே...?எங்களுக்கும் [illegible]...?" [illegible] பதில் திட [illegible] எனக்குப் பின்னே காத்திருப்போருக்கு எத்தனை மணிக்குத் தண்ணீர் கிடைக்கும். என்று நான் கணக்குப் பண்ணிக்கொண்டு வரிசையில் இருக்கின்றேன். அவ்வப்போது வரிசையைக் குழப்பியவர்கள் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். பின்னர் சேர்ந்து கொள்கிறார்கள். கிணற்றை அண்மித்துவிட்டேன். வாளியும் கைகளுக்குக் கிடைத்தது. தண்ணீர் அள்ளிக் கொண்டிருக்கின்றேன்.
மனதுக்குள் ஒருவகை நிறைவு. நான் அள்ளிய முதல்வாளித் தண்ணியைக் குடிக்கலாம் என எண்ணிக் குனிந்தேன். எம்மை நோக்கி வீசப்பட்ட கொத்துக்குண்டுகள் கிணற்றை அண்மித்த பகுதியில் வீழ்ந்து சிதறின. அப்படியே எல்லோரும் படுத்துக் கொண்டனர். அதற்குள் அகப்பட்டவர்களுக்கு அருகிலிருந்தவர்கள் குருதிக் கறைகளுடன் எழுந்து ஓடினர். மனது கனத்தது. சாவுகள் அதிகமாக இருப்பதை உணரமுடிந்தது. அதற்கு வலுவாகவே அவலச்சத்தம் காதைப் பிளந்தது. தண்ணீர் அள்ளிக் கொண்ட நான் ஓட்டம் பிடித்து எங்கள் கூடாரத்தை வந்தடைந்தேன்.

(தொடரும்)



# தலைமைத்துவம்

ஆயிரம் பேரைஉன்முன்னமர்த்தல்
தலைமையன்று
நூறுபேரை உன் பின்னே வரவைப்பதே
தலைமையென்றுணர்.

கட்டளையிட்டுக் கட்டுப்படுத்தல்
தலைமையன்று
கட்டுக்களை அவிழ்க்க வைப்பதே
தலைமையென்றறி.

அதிகாரம் கொண்டடக்கல்
தலைமையன்று
அறிவுடன் அன்பால் ஆழ்வதே
தலைமையென்றியம்பு.

எதிரியையழித்து வெற்றியில்
களித்தல் தலைமையன்று
மன்னிக்கவும் மன்னிப்புக் கேட்கவும் துணிவது
தலைமையென்றெண்ணு.

பிறர் பாதுகாப்பில் முடிசூடி வாழ்தல்
தலைமையன்று
தன்னம்பிக்கையில் நிலைத்துநிற்பது
தலைமையென்றுகாண்.

வழிநடுவே சிலையமைத்தல்
தலைமையன்று
வழியமைத்து நல் வழிகாட்டல்
தலைமையென்றுகொள்.

தொண்டர்களைக் குண்டர்களாய் உருவாக்கல்
தலைமையன்று
புதியநற் தலைவர்களை உருவாக்கல்
தலைமையென்று விளம்பேல்.

கொள்கையின்றிக் கொடிபிடிப்பது
தலைமையன்று
கொள்கைக்காக் ஈடின்றி ஈய்வதே
தலைமையென்றிரு.

இருந்து வாழ்வது தலைமையின்
பெருமையன்று
இறந்தும் வாழ்வதே தலைமையின்
பொருளென்றறி.

கந்தர்மடம் அ.அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணா செல்லத்துரை

# 2,500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்துதலை நாக வழிபாடு



புராதன காலத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பில் வேடர்கள், இயக்கர்கள், நாகர்கள் வாழ்ந்ததாக வரலாறுகளில் குறிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான தொல்லியல் அடையாளங்கள் இதுவரை முழுமையாக அடையாளம் காணப்படாமல் இருப்பது துரதிஷ்டமானதாகும். இத்தேச வரலாற்றுக் காலத்தின் முக்கிய அடையாளமாக இருப்பவர் இராவண மகாராசாவாகும். இவர் கிறிஸ்துவுக்கு முன்னர் 3,084ஆண்டுகளில் வாழ்ந்தார் என்பதைக் காலக்கணிப்புகள் மூலம் அறியக் கிடக்கின்றது. அவருடைய காலத்தில் இருந்துதான் எமது காலக்கணிப்புகளை (பஞ்சாங்கம்) முன்னோர்கள் கணித்துள்ளார்கள் என்பதும் புலப்படுகிறது.

இராவண மகாராசாவுக்கும் அடங்காப்பற்றுப் பிரதேசத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் மாந்தை, திருக்கேதீச்சரம், பாலாவி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய மாதோட்டம் பகுதியில் இராவண மகாராசாவுடைய இலங்காபுரம் இராசதானி இருந்தது. இந்தப் பகுதியில் நாகர்கள் செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதை இராசநாயகம் முதலியார் Ancient Jaffna என்ற ஆங்கில வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். இராவண மகாராசா காலத்தில் இயக்கர்களும், நாகர்களும், வேடர்களும், இங்கு வாழ்ந்ததற்கான காவியக் குறிப்புகளும், தொல்லியல் அடையாளங்களும், வாய்வழித் தகவல்களும் நிறையவே காணப்படுகின்றன.

## நாகர்கள்

நாகர்கள் கிழக்காசிய நாடுகளில் பரவலாக வாழ்ந்துள்ளனர். இலங்கையில் மாதோட்டம் பகுதியில் வாழ்ந்த 'மயன்' என்ற நாகர்குலத் தலைவனின் மகளான மண்டோதரியை இராவண மகாராசா திருமணம் செய்திருந்தார் என்றொரு குறிப்புக் காணப்படுகின்றது. அதேநேரம் மெக்சிக்கோ நாட்டில் உருவாக்கப்பட்ட காலக்கணிப்பு 'மயன்' என்பவரால் தயாரிக்கப்பட்டது என்றும் அண்மைய ஆய்வறிக்கைகள் மூலம் அறியக் கிடைத்துள்ளது.



*மெக்சிக்கோ மயன் காலக்கணிப்பு*

தனது மருமகனுக்காக நாகர்களுடைய தலைவன் 'மயன்' இலங்காபுரம் இராசதானியை அமைத்துக் கொடுத்தார் என்பதாகக் காவியத்திலும் குறிப்புகளிலும் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஆனால் பேராசிரியர்களின் தொல்லியல் ஆய்வு முடிவுகளின்படி நாகர்கள் கிறிஸ்துவுக்கு முன்னர் 4ஆம் மற்றும் 5ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாகர்கள் குளங்கள் கட்டுதல், கடவுள் சிலைகளைக் கருங்கற்களில் பொளியும் சிற்ப வேலைகளைச் செய்தல், காலக்கணிப்புகள் ஆகியவற்றில் சிறந்தவர்கள் எனவும் வரலாற்றுக் குறிப்புக்களில் இருந்து தெளிந்துகொள்ள முடிகின்றது.

## நீர்த்தேக்கங்கள்

ஈழ நாட்டின் மத்தியில் அமைந்துள்ள மலைத்தொடர்கள் புராதனத்தில் வன்னிப் பிரதேசம்வரை பரந்திருந்தன என்பதற்கு இங்குள்ள மலைக்குன்றுகளும் மலைத்தொடர்களும் சான்று பகருகின்றன. மத்திய மலைப்பகுதியான மாத்தளையில் உற்பத்தியாகிய மல்வத்து ஓயா மன்னார் தீவகத்துக்கு அண்மையாகக் கடலில் கலந்துள்ளது என்று ஆய்வுக் குறிப்பில் காணப்படுகின்றது. பின்னர் இந்த ஆறு தனது படுக்கையைத் தென் திசைக்கு மாற்றியதாகவும், அதனை மறித்து நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டதாகவும் நீர்ப்பாசன ஆய்வாளர்கள் குறித்துள்ளனர்.

அடங்காப்பற்றுப் பிரதேசத்தின் மத்தியிலுள்ள மலைகளில் இருந்தும் காடுகளில் இருந்தும் ஆறுகள் உற்பத்தியாகி ஓடுகின்றன. இந்த ஆறுகளை மறித்து நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நீர்த்தேக்கங்களில் இருந்து நீர்ப்பாசனம் வழங்கப்பட்டுள்ளது. 'நீர்த்தேக்கங்கள்' என்ற பதம் ஆற்றை மறித்துக் கட்டிவைக்கும், மலைக் காடுகளில் இருந்து வடிந்து பாயும் மழை நீரைத் தேக்கிவைப்பது 'சிறு குளங்கள்' எனவும் சுயமாக நீர் தேங்கி நிற்கும் பள்ளங்களை 'மடு' எனவும் 'மோட்டை' எனவும் அழைக்கும் பாரம்பரியம் இருந்துள்ளது. பிற்காலத்தில் நீர்ப்பாசனம் வழங்கும் இடங்கள் அனைத்தும் குளங்கள் என அழைக்கப்பட்டுள்ளன. குளங்களின் கீழுள்ள வயல் வெளிகளும் அதனை அடுத்திருந்த குடியிருப்புகளும் காடுகளும் குளங்களின் பெயர்களாலேயே அழைக்கப்பட்டுள்ளன. பெருநிலப்பரப்பில் 1000க்கும் மேற்பட்ட குளங்கள் இருந்தாகவும் அதனாலேயே அநேகமான கிராமங்களுக்குக் குளங்களின் பெயர்கள் வைக்கப்பட்டன என்றும் ஆய்வாளர்கள் அறிந்துள்ளனர்.

> நாகர்கள் ஆறுகளை மறித்து குளங்களை உருவாக்கி நீர்ப்பாசனம் வழங்குவதிலும், கோவில்களில் பிரதிஷ்டை செய்வதற்கான சிலைகளைப் பொளிவதிலும், காலக் கணிப்பிலும் அபார திறமையுடையவர்கள். நீர்த்தேக்கங்களை உருவாக்கி நீர்ப்பாசனத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த காரணத்தால் மக்கள் மத்தியில் நாகர்கள் முக்கிய சமூகத்தினராகக் கணிக்கப்பட்டுள்ளார்கள்.

## ஆறுகள்

பெருநிலப்பரப்பின் மத்திய மலைப் பகுதிகளில் இருந்து உற்பத்தியாகும் ஆறுகளில் அருவி ஆறு, நொச்சிமோட்டை ஆறு (பறங்கி ஆறு), பாலி ஆறு, பேராறு, நாயாறு, கனகராயன் ஆறு போன்றவை நீண்ட தூரம் பாயும் ஆறுகளாக அமைந்துள்ளன. இவற்றைவிட பல சிற்றாறுகளும் பாய்கின்றன. பெரிய ஆறுகள் மேற்குக் கடலுடனும் கிழக்குக் கடலுடனும் கலக்கின்றன. அவற்றில் அருவி ஆறு, நொச்சி மோட்டை ஆறு (பறங்கி ஆறு), பாலிஆறுஆகியவை மேற்குக் கடலிலும், பேராறு, நாயாறு போன்றவை கிழக்குக் கடலிலும், கனகராயன் ஆறு வடக்கு நோக்கியும் பாயும் ஆறுகளாக அமைந்துள்ளன.

நீண்ட தூரம் பாயும் ஆறுகளை மறித்துப் பெரிய நீர்த்தேக்கங்கள் அதாவது பெரிய குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து அங்கிருந்து வடிந்து பாயும் நீரை இன்னொரு இடத்தில் மறித்து நீரைத் தேக்கி அதனை அண்மித்துள்ள நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் வழங்கும் சிறந்த முறை இங்கிருந்துள்ளது.

இந்த நீர்ப்பாசனமுறையை ஆய்வு செய்த நீர்ப்பாசனப் பொறியியலாளர் எச். பார்க்கர் என்பவர் 1888களில் எழுதிய பருவகாலக் குறிப்புகளிலும், 1909 ஆண்டு வெளியிட்ட Ancient Ceylon என்ற நூலிலும் விவரித்து எழுதியுள்ளார். எட்டுப் பெரியகுளங்களும், சுமார் 1000 வரையிலான சிறுகுளங்களும் இருப்பதாக ஆங்கில வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

## நாகர்களும் சமூக அமைப்பும்

நாகர்கள் ஆறுகளை மறித்து குளங்களை உருவாக்கி நீர்ப்பாசனம் வழங்குவதிலும், கோவில்களில் பிரதிஷ்டை செய்வதற்கான சிலைகளைப் பொளிவதிலும், காலக்கணிப்பிலும் அபார திறமையுடையவர்கள். நீர்த்தேக்கங்களை உருவாக்கி நீர்ப்பாசனத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த காரணத்தால் மக்கள் மத்தியில் நாகர்கள் முக்கிய சமூகத்தினராகக் கணிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இவர்களுக்கும் விவசாயம் செய்த பிரிவினருக்கும் இடையில் தனித் தனியான வழிபாட்டு முறைகள் இருந்துள்ளன. அதேநேரம் நாக குலத்தவர்கள் தங்களுக்குள் தாங்களே அதிகாரத்துக்காகப் போட்டி போட்டதனால் அநேகர் சமய மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதும் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

## ஐந்து தலை நாகவழிபாடு

நாகர்கள் ஐந்துதலை நாகத்தை வழிபட்டு வந்தவர்கள். அவர்கள் கட்டிய குளங்களின் கட்டுக்களில் அல்லது அதன் அருகில் காவல் தெய்வமாக ஐந்துதலை நாகசிலைகளைப் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வந்தமைக்கு இங்கிருக்கும் நாகசிலைகள் அடையாளங்களாகத் திகழ்கின்றன. குளக்கட்டுகள் முறிக்காமல் இருப்பதற்கான காவல் தெய்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டவை இந்த நாக சிலைகள் என்றும் ஒருசிலர் தெரிவிக்கிறார்கள்.

(தொடரும்)



*நாகசிலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!



எம்.ஐ.முபாறக்

சாராய வியாபாரிகளுக்கும் குடிகாரர்களுக்குமாக மாதத்தில் ஒரு தடவைதான் விடுமுறை வழங்குகிறது அரசு. அதுதான் போயா தினம். அந்தத் தினத்தைப் பெளத்த மதத்தின் புனித தினமாகப் பார்ப்பதால் அன்று இலங்கையில் உள்ள அனைத்து சாராயக் கடைகளுக்கும் விடுமுறை. ஆனால் குடிகாரர்களோ அன்று குடிக்காமல் இருப்பதில்லை. ஏன் சாராய வியாபாரிகளும் கூட சாராயம் விற்காமல் விடுவதில்லை.

அந்தத் தினத்தில் சாராயம் விற்பது குற்றமாகும். அதிசயம் என்னவென்றால், அந்தத் தினத்தில்தான் சாராய விற்பனை அதிகமாக நடக்கின்றது. போயா தினத்துக்கு முதல் நாள் கையிருப்பு முடியும் அளவுக்கு அமோக விற்பனை!

போயா தினத்தன்று சாராயக் கடைகள் அனைத்தும் மூடப்படும் என்பதால் அந்தத் தினத்துக்கு முதல்நாளில் தான் ஏனைய நாள்களை விடவும் சாராய விற்பனை அதிகமாக இருக்கின்றது. அதன் பின்னர் போயா தினத்தன்றும் சாராய வியாபாரிகள் சாராயத்தை எடுத்துக்கொண்டு போய் வீடுகளில் வைத்துத் திருட்டுத்தனமாக விற்கின்றார்களாம். அதுவும் அதிக விலைக்கு.



## சாராய வியாபாரிகளைத் தேடும் அமைச்சர்




இந்தத் தகவல்களை அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து பெளத்த மதத்தின் நலன் பேணுவோர், பெளத்த சாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு இந்த விவகாரம் பற்றி அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளனராம்.

போயா தினத்தில் பெளத்த மதத்தை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்ளும் சாராய வியாபாரிகளைப் பிடித்து, உரிய தண்டனை வழங்குமாறு அமைச்சரை நச்சரித்து வருகின்றனராம். இதனால் அமைச்சர் இனிவரும் ஒவ்வொரு போயா தினத்திலும் இந்த வியாபாரிகள் தேடிப் பிடிக்கும் வேலையைச் செய்யப் போகின்றாராம்.

**"சாராய உற்பத்தியை விற்பனையை அதிகரிக்கும் வகையில் சாராயத் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் சாராயக் கடைகள் திறப்பதற்கும் அனுமதி வழங்கி குடியை ஊக்குவித்துவிட்டு குடிக்க வேண்டாம், விற்க வேண்டாம் என்றால் இது எந்த வகையில் நியாயம் அமைச்சரே?"**

## அரசதலைவர் வேட்பாளர் யார்...?

அடுத்த அரச தலைவர் தேர்தலில் மகிந்தவால் போட்டியிட முடியாது. அப்படியென்றால் யார் போட்டியிடுவார் என்று அறிவதற்கு மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர். ஆனால் அதை இப்போது சொல்வதற்கு மகிந்த தரப்பு விரும்பவில்லை.

அவர்களுள் எவரிடம் இது பற்றிக் கேட்டாலும் அதற்கு இப்போது எந்த அவசரமும் இல்லை. அப்போது பார்த்து முடிவெடுப்போம் என்று கூறி நழுவி விடுகின்றனர்.

ஆனால் விமல் வீரவன்சவிடம் கேட்டால் A அல்லது B அல்லது C என்று பதிலளிக்கின்றார்.

அதாவது அதில் மூவருக்குள் போட்டியாம் பஸில்.

அடுத்தவர் கோத்தபாய. மூன்றாமவர் நாமல் என்பதுதான் அதன் பொருள் என்று உங்களுக்கும் விளங்குகிறதா...?

**"இதுதான் சங்கதி...! அந்த மூண்டு குடும்பங்களும் ஒண்டை ஒண்டு புடிச்சு விழுங்கத் தொடங்கியிருக்குப்போல...!"**



## அப்பத்தைக் கண்டு 'அப்செற்' ஆனார் மகிந்த

மகிந்தவுடன் இருந்தவர்கள் சிலர் அவருக்கு எதிராகச் செய்த சில செயல்களை மகிந்தவால் இன்னும் மறக்க முடியாமல்தான் உள்ளது. அவ்வாறானவற்றுள் முக்கியமானது மைத்திரி மகிந்தவுக்கு வைத்த ஆப்பு.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மகிந்த அந்த ஆப்பை நினைவுபடுத்திக் கொண்டுதான் இருக்கிறாராம். வடமத்திய மாகாண சபையைக் கைப்பற்றுவது தொடர்பில் அந்த மாகாண சபையின் மகிந்த அணி உறுப்பினர்களுக்கும் மகிந்தவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றபோது அங்கும் மைத்திரியின் பல்டியை நினைவுபடுத்தினாராம் மகிந்த.

இன்று என்னோடு வந்து பேசும் நீங்கள் நாளை அந்தப் பக்கம் பல்டியடித்து விடாதீர்கள். அப்படித்தான் ஒருவர் சத்தமில்லாமல் பல்டி அடித்து எனது ஆட்சிக்கு ஆப்பு வைத்து விட்டார் என்றாராம்.

சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் மைத்திரியின் துரோகத்தனத்தை நினைவுபடுத்திக்கொண்டே வரும் மகிந்த கடந்த வாரம்கூட ஒரு நிகழ்வில் அதை மீண்டும் நினைவுபடுத்தினாராம்.

மகிந்த அணி எம்.பி பந்துல குணவர்தனவின் மகனின் புதுமனைப் புகு விழா கடந்த வாரம் ஹோமாகமவில் இடம்பெற்றது. மகிந்த தான் பிரதம அதிதி. விழா நிறைவில் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. அவற்றுள் அப்பமும் ஒன்று.

அப்பத்தைக் கையில் எடுத்த மகிந்த அதைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே இருந்தாராம். "ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்" என்று அருகிருந்தவர் அவரிடம் கேட்டபோது இலேசாகச் சிரித்துவிட்டு "இதைக் காணும்போதெல்லாம் எனக்கு அந்தத் துரோகி செய்த செயல் தான் நினைவுக்கு வருது" என்றாராம். சுற்றி நின்றவர்களுக்கு விடயம் விளங்கிவிட்டதால், விழுந்து விழுந்து சிரித்தார்களாம்.

**"இப்படியே போனால் ஒரு கட்டத்துக்குமேல் அப்பம் உண்ணுவதையே மகிந்த நிறுத்திவிடுவார் போல"**

## விமலுக்கு மீண்டும் சிறையா...!



மகிந்த ஆட்சியில் அதிகமான வாகனங்கள் வாடகைக்குப் பெறப்பட்டன. அவற்றுள் அதிகமானவை அமைச்சர்களின் உறவினர்களின் பாவனைக்கே பயன்படுத்தப்பட்டன.

உதாரணத்துக்கு விமல் வீரவன்சவின் உறவினர்களைக் குறிப்பது சிறப்பானது.

அதேபோல் அரசதலைவர் செயலகத்தில் இருந்த வாகனங்களும் இவ்வாறு முறைகேடுகள் செய்யப்பட்டமைக்கான பல ஆதாரங்கள் உள்ளனவாம். அங்கிருந்த 700வாகனங்களுள் 150இக்கு என்ன நடந்தது என்றோ, யார் கொண்டு போனார்கள் என்றோ தெரியாதாம். இந்த அரசு இப்போது அந்த வாகனங்களைத் தேடும் வேட்டையை ஆரம்பித்துள்ளதாம்.

**"அப்போ... விமல் மீண்டும் சிறைக்குச் செல்ல வேண்டி வருமோ, என்ன?"**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# பார்வையாளனை ஏமாற்றாத படம்

சி.ப.வேந்தன்

ஈரானிய இயக்குநர் அப்பாஸ் கியாரஸ்தெமியின் 'வெயார் இஸ்மைபிரெண்ட்ஸ்ஹொம்' எனும் திரைப்படம் இரண்டு பாடசாலை நண்பர்களுக்கிடையில் நடக்கும் நட்பை மிக அழகாகப் பேசியிருந்தது. உலக அரங்கில் பல விருதுகளையும் வாங்கியிருந்தது. தன்னுடைய நண்பனின் பாடக்கொப்பியை கொடுப்பதற்காக ஒருநாள் முழுவதும் அலைந்து திரியும் நேமத் என்னும் சிறுவனின் உணர்வுகள் மூலம் சிறுவர்களது வெளிப்படையான, எதையும் எதிர்பார்க்காத அன்பை மிக யதார்த்தமாகப் படமாக்கியிருந்தார் இயக்குநர்.

வீட்டுப்பாடம் செய்யாது பாடசாலைக்குச் சென்றால் தன்னுடைய நண்பன் இனி மேல் பாடசாலைக்கு வரமுடியாது என்று சொன்ன வாத்தியாரின் சொல்லுக்குப் பயந்து நண்பனை இழக்க விரும்பாத நேமத் போலவே தன்னுடைய தவறுக்காகத் தண்டிக்கப்பட்ட நண்பனின் 'மாணவத் தலைவன்' பதவி பறிபோய்விடக்கூடாதெனும் தவிப்புடனே 'டஸ்டர்' குறுந் திரைப்படத்தில் வரும் முகமத்தும் இருக்கிறான்.

ஜெயரஞ்சனி ஞானதாஸின் இந்தத் திரைப்படம் பாடசாலை நண்பர்கள் இருவருக்கிடையில் படர்ந்திருக்கும் நட்பை மிக அழகாகப் பேசுகிறது.

> வீட்டுப்பாடம் செய்யாது பாடசாலைக்குச் சென்றால் தன்னுடைய நண்பன் இனிமேல் பாடசாலைக்கு வரமுடியாது என்று சொன்ன வாத்தியாரின் சொல்லுக்குப் பயந்து நண்பனை இழக்க விரும்பாத நேமத் போலவே தன்னுடைய தவறுக்காகத் தண்டிக்கப்பட்ட நண்பனின் 'மாணவத் தலைவன்' பதவி பறிபோய்விடக்கூடாதெனும் தவிப்புடனே 'டஸ்ரர்' குறுந் திரைப்படத்தில் வரும் முகமத்தும் இருக்கிறான்.

## 'டஸ்ரர்' பேசும் கதை

காலைநேரம். முகமத் பாடசாலைக்குப் பரபரப்புடன் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றான். அப்போது தயாருக்குத் தெரியாமல் அலுமாரிக்குமேலே ஏறி விளையாட்டுப் பொருளொன்றை எடுத்து மறைத்து வைக்கிறான். தாய் வந்து "நேரம் போய்விட்டது" எனப் பேசிவிட்டு அவனைப் பாடசாலைக்கு அனுப்புகிறாள். குடியிருப்பு நிறைந்த அந்தச் சந்தடிமிக்க தெருவில் முகமத் ஓடி வருகிறான். வழியில் தென்படும் பூமரம், கல் என்பவற்றுடன் சேஷ்டை செய்தவாறு வருகிறான். வழியில் தனது நண்பனான மில்றோயைச் காண்கிறான். அவன் பாடசாலைக்குக்கொண்டுசெல்வதற்காக கைவினைப்பொருட்களுடன் நிற்கிறான். அதைக்கண்ட முகமத் தான் அவற்றைச் செய்வதற்கு மறந்துவிட்டதாகச் சொல்கிறான். உடனே மில்றோய் "என்னிடம் 2இருக்கு நீ ஒன்றைக்கொண்டுவா..." எனக்கூறி ஒன்றைக் கொடுக்கிறான்.

இருவரும் போகும்போது வழியில் மற்றொரு நண்பனைக் காண்கிறார்கள். மூவரும் சேர்ந்து சந்தோசமாக ஆடி, ஓடி விளையாடிக்கொண்டு பாடசாலை போகிறார்கள்.

வகுப்பறையில் பாடம் நடக்கிறது. பாடத்தின்போது முகமத் தான்கொண்டுவந்த சாப்பாட்டை மெதுவாக ஒளித்துவைத்துச் சாப்பிடுகிறான் இதைக்கண்ட ஆசிரியர் இடைவேளையின்போது சாப்பிடுமாறு கண்டித்துவிட்டுப் பாடத்தைத்தொடர்கிறார். அப்போது ஆசிரியருக்கு அதிபரிடமிருந்து அழைப்புவர அவர் போகும்போது மாணவத் தலைவனாக(மொனிட்டர்) உள்ள மில்றோயை எழுப்பி "யாரும் சத்தம் போடக்கூடாது அப்படிச் சத்தம் போட்டுக் குழப்படி செய்தால் உனக்குத்தான் அடிப்பன்" என்றுவிட்டு அதிபரிடம் செல்கிறார். ஆசிரியர் போனவுடன் வகுப்பறை அல்லோலகல்லோலப்படுகிறது. முகமத் தலைமையில் ஒரு குழு கரும்பலகை துடைக்கும் 'டஸ்ரரை' எடுத்து ஒளித்துவைத்து



யாரிடம் இருக்கிறது எனக்கண்டுபிடிக்கும் விளையாட்டை விளையாடுகிறது. அப்போது மில்றோய் அவர்களைச் சத்தம்போடாமல் இருக்குமாறு கத்துகிறான். யாரும் கேட்பதாக இல்லை. விளையாட்டில் ஒரு கட்டத்தில் துணியினாலான டஸ்ரரை ஆளாளுக்கு இழுத்து விளையாடியதில் 'டஸ்ரர்' பிரிந்து [illegible] மற்றும் வெ[illegible]டுகின்றன. உடனே எல்லோரும் சேர்ந்து அவற்றைப் பொறுக்கி அப்புறப்படுத்திக் கொண்டிருக்கும்போது திரும்பி வந்த ஆசிரியர் அதனைக் கண்டுவிடுகிறார். யார் டஸ்டரைக்கிழித்தது எனக்கேட்டு மில்றோயைக் கண்டித்து, பொறுப்பாக அவன் நடக்கவில்லை எனக்காரணம் கூறி அவனிடமுள்ள மாணவர்தலைவன் பதவியைப் பறித்துவிடுகிறார்.

மில்றோய் செய்யாத குற்றத்துக்காகத் தண்டனைபெற்றதை நினைத்து வருத்தமடைகிறான். அப்போது கலைவிழாவுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை மண்டபத்துக்குவருமாறு அழைக்க மணவர்கள் செல்கிறார்கள். மில்றோய் மேசையில் படுத்திருக்கிறான். அவ்வேளை முகமத் அவனை எழுப்பி வருமாறு அழைக்க அவன் செல்லாது இருக்கிறான். மண்டபத்தில் கலைவிழாவுக்கான ஒத்திகைகள் நடந்துகொண்டிருக்கின்றன. நீண்டநேரம் கழித்து மில்றோய் அங்கு வருகிறான் தாமதமாக வந்ததற்காக ஆசிரியர் ஏசுகிறார். தன்னால்தான் மில்றோய்க்குப் பதவி பறிபோனதாகவும் மில்றோய் கவலையுடன் இருப்பதையும் நினைத்து முகமத் வருத்தமைடகிறான். இவர்களுக்கான ஒத்திகை தொடங்குகிறது. அதில் மனம் ஒன்றித்துச் செய்ய முகமதால் முடியவில்லை. இதைப்பார்த்த ஆசிரியர் முஹமத்தை ஏசுகிறார். அப்போது முகமத் 'ரீச்சர் டஸ்ரரை நான்தான் கிழிச்சன். மில்றோய் எந்தக் குற்றமும் செய்யவில்லை அவனே மொனிட்டராக இருக்கட்டும்" எனச்சொல்கிறான் அதைக் கேட்ட ஆசிரியர் முகமத்தை ஏசிவிட்டு நாளைக்குவரும்போது புது 'டஸ்ரர்' தைத்துக்கொண்டு வருமாறு சொல்லிவிட்டுச் செல்கிறார்.

நண்பர்கள் இருவரும் சேர்ந்து அன்று [illegible] வெட்டுத்துணிகளும் [illegible]றும் கத்தரிக்கோல் என்பவற்றுடன் வீட்டுக்கருகில் இருக்கும் கடற்கரைக்குச் சென்று அங்கிருந்து 'டஸ்ரர்' தைக்கத் தொடங்குகிறார்கள். தமக்குத் தெரிந்த வகையில் இருவருமாக சேரந்து பத்துப்பதினைந்து டஸ்ரர்களைத் தைத்து முடிக்கிறார்கள்.

அடுத்தநாள் வகுப்பறையில் ஆசிரியரிடம் தாங்கள் தைத்துக்கொண்டுவந்த டஸ்ரரைக்கொண்டுபோய்க்கொடுக்கிறார்கள். ஆச்சரியத்துடன் சந்தோசமடைந்த ஆசிரியர் இருவரையும் பாராட்டுகிறார். ஒரு முழுமையான திருப்தியும் மகிழ்ச்சியும் நண்பர்களது முகத்தில் தோன்றப் புன்னகைக்கிறார்கள். படம் முடிவடைகிறது.

## கவனிக்க வைத்தவையும் கவனிக்க வேண்டியவையும்

மிகையற்ற நடிப்பு, இயல்பான வட்டாரப் பேச்சுவழக்கு, கதையோடு ஒன்றிக்கும் காட்சியமைப்பு, அருமையான படத்தொகுப்பு என முழுவதும் படத்தை உயரத்துக்குக்கொண்டுசெல்கின்றன. கதைமாந்தர்கள் எல்லேரையுமே நல்ல மனிதர்களாகக்காட்டியிருப்பது இரசிக்கவைப்பதோடு குழந்தைகள், சினிமாவின் பொறுப்பை இயக்குநர் கையாண்டிருப்பதில் மெச்சவும் வைக்கிறது.

இசையின் வறுமை படத்தின் கனத்தைப் பாதியாக்கியிருப்பது வேதனை. இயக்குநரும் இசையமைப்பாளரும் கவனித்திருக்கவேண்டிய முக்கிய இடம் தவறவிடப்பட்டிருக்கிறது.

துடியாட்டமானதும் சட்டைசெய்யாத நடிப்பாலும் தன்னைக் கவனிக்க வைக்கிறது முகமத் கதாபாத்திரம் அதேபோன்று அமைதியான சுபாவத்தால் பாத்திரத்தை நிரப்பும் மில்றோயும் தன்னை அடையாளப்படுத்துகிறார்.

முகமதின் வீட்டுச்சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும் யேசுநாதரின் படம், இசை போன்ற சின்னச் சின்னக் குறைகளைக் கவனித்திருந்தால், 'டஸ்ரர்' இன்னும் தூய்மையாக இருந்திருக்கும். சிறுவர்களின் மனதின் அழுக்குகளைத் துடைத்து எப்போதுமே தூய்மையான அன்பைக் கொண்டாடும்கதையைப்பார்வையாளனுக்கு நெருக்கமாகக்கொண்டுசேர்த்ததில் இயக்குநர் தன்னை நிரூபிக்கிறார்.

"ஒரு நல்ல திரைப்படம் கதையை மட்டும் சொல்வதில்லை. அதில் வாழ்க்கை முறை இருக்கிறது. கலாசாரம் இருக்கிறது, மனிதநேயம் இருக்கிறது. ஆழமாகப் பார்ப்பவர்களுக்குப் பல நுட்பமான விடயங்கள் அதனுள் இருக்கின்றன.

எந்த நல்ல படமும் தன்னை நம்பிப் பார்க்கிற பார்வையாளனை ஏமாற்றுவதில்லை" இது ஒளிப்பதிவாளர் செழியனுக்குச் சொந்தமான வரிகள். 'டஸ்ரர்' படமும் பார்வையாளனை ஏமாற்றவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சாளப் பெருந்தகை



பேச்சாளர் பேசிக்கொண்டிருந்தார். தலைமை வகித்தவர் எழுந்து சென்று பேச்சாளரின் காதில் ஏதோ சொல்ல முற்பட்டார். பேச்சாளர் செவிகொடுத்துக் கேட்டபோதும் அதை அவர் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை.

எத்தனையோ மேடைகளேறிய ஒருவருக்கு நிகழ்வின் தலைவர் என்ன சொல்ல வருகின்றார் என்று தெரியாமலா இருக்கும்...? மள மளவென்று அவரும் பேசி முடித்துவிட்டு வந்தமர்ந்தார்.

வந்தமர்ந்தவர் தன்னுடைய பேச்சு எப்படி என அருகிலிருந்த தலைவரிடம் கேட்டார். இன்றைய கூட்டம் 'மே தினக்' கூட்டம். நீங்கள் தொழிலாளர்கள் பற்றியும் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லியிருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்றார்.

"ஓம்..என்ன...! அதனை முன்னரே சொல்லியிருக்கலாமே?" என்று அங்கலாய்த்தார் பேசி முடித்தவர்.

"அதுதான் காதோடு வந்து சொன்னேன்... நீங்கள் கேட்கவில்லையே" என்றார் தலைவர்.

"அட ...! நான்நினைச்சன் எல்லாக் கூட்டங்களிலையும் தலைவர் காதுக்க வந்து கெதியாப் பேசி முடியுங்கோ! எண்டு சொல்லுறது போலத்தான், நீங்களும் சொல்லுறீங்களாக்குமெண்டு, கெதியா முடிச்சிட்டன். ச்சா... இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாம் என்ன...?" என்றார் அப்பாவித்தனமாக.



# 'சோக்குத்தான்'

தடிமனும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும். என்று ஆதங்கப்பட்டார் ஒருத்தர்.

கணனியில் தமிழில் தட்டச்சு செய்யின், விசைப்பலகையில் 'ள'வும் 'ன' வும் அருகருகேதான் உள்ளன. கொஞ்சம் மாறினாலும் 'ன' 'ள' மாறி விடுவடும்.

தட்டச்சு அடித்தவர் 'முன்னாள்' என்பதற்குப் பதிலாக 'முன்னான்' என்று அடித்து, அதைப் பிரதியெடுத்து வந்து அதிகாரியிடம் கொடுத்தார். "இது என்ன முன்னான்?" என்று கேட்டார் உயர் அதிகாரி. அதற்கு ரைப் செய்தவர் "எனக்குத் தடிமன் சேர்... சளி பிடித்து விட்டது.....அதுதான் 'ள்' வர மாட்டே னென்கிறது" என்றார் சர்வ சாதாரணமாக...

எனக்கும் அப்படித்தான் தலையங்கம் 'ஜோக்குத்தான்' என்று வந்திருக்க வேண்டும் தடிமன் காரணமாக அது 'சோக்குத்தான்' என்று வந்துவிட்டது.

செல்வராசா

இராம. இராகவா



# பண்டாரவன்னியன்

## புதிய குறள் வடிவம் காணத் தொடங்கியது

03

"முல்லைத்தீவில்நான்
நிற்பதாய்
கதிர்காமநாயக முதலி
கடிதம் வரைந்தானாம்
வெள்ளையனுக்கு!
வந்து சொன்னான்
என் ஒற்றன்
ஓட ஓட என்னை
விரட்டலாம் என்று
ஒண்ட வந்த
பிடாரியின் நினைப்பு
என்னவனை வலைவீசி
எனக்கெதிராய்த் திருப்பிவிட்டு...
கொக்கரிக்கிறான்
வெள்ளையன்.
விழ விழ எழுமிந்த
வேங்கைப் படையின்
வேகம் தெரியாத
சிறுகுரங்கு
மீண்டும் வருவான்டா
வன்னியன்"

நிலம் அறைந்து
சபதமேற்றான்
பண்டாரவன்னியன்.

காதலாய் அழைத்து
கடமையை உரைத்து
கடலாய் ஆர்ப்பரிக்கும்
வன்னியன் குரலில்
கலங்கிப் போனாள்
நாச்சியார்.

"படையைத் தி[illegible]ம்
பகையை விர[illegible]
தங்கள்
கைவந்த கலை[illegible]
ஏனிந்த வீண்[illegible]

மெல்ல நெரு[illegible]
தணிக்க முய[illegible]
குருவியின் [illegible]

"ம்...
தெரியாதா [illegible]
சுற்றிவர
எதிரி சூழ்ந்த
என் படைக[illegible]
சொற்பந்தான்.
எந்த நேரமும்
என்னைப் பிடிக்க
எலிகளின் வலைகள்
பின்னப்பட்டேயிருக்கின்றன
குருவி...!
இதுதான் எம்
இறுதிச் சந்திப்பு
நாடு விலங்குடைத்து
விடுதலை அடைகையில்
உன்னை
நான் அடைவேன்..
களம் காண
விரைக நீ..."

குரலின் கம்பீரத்தில்
குருவியின்
வாயடைத்துப்போனது.
கற்பனைச் சிறகுகள்
கண் சிமிட்டி
விரிகையில் தானா
என்
ஒற்றைப்பனை
[illegible]ற்றி எரிவது...?

சிந்திய விழிநீரை
மெல்லத் துடைத்து
[illegible]கத்தை
[illegible]ழிகள்

[illegible]போது...?"

[illegible]ல் தொங்கியது.

[illegible]ருள்

[illegible] கூரியபடி
ஏறிப்பறந்தான்.
பரிதனில் பண்டாரவன்னியன்

வன்னி
அதிர்ந்து கொண்டிருந்தது
அடங்காப்பற்றின் மக்கள்
அடலேறாய்க்
களம் கண்டனர்
சுற்றிமுளைத்து விட்ட
சுடுகாட்டுப் பேய்களால்
முற்றம்
நித்தம்
பிணக்குவியல்களில்
நிலைத்துக் கிடந்தது.

ஒளிஇறகு அசைத்து
வான் ஏறிய
நிலவில்
குருதியின்
அழுக்கேறிக் கிடந்தது.
முல்லைத்தீவில் பூத்த
சிறுமுல்லை கூட
எல்லை காக்க
விரையத் தொடங்கியது.
எங்கும் வெள்ளையர்கள்
[illegible] கிடந்தனர்

இயந்திரக் கலனுக்கும்
இரும்பு வாளுக்கும்
மூண்டது போர்
வாள்க்கொடி உயர்த்தி
களம் புகுந்தனர்
வன்னியர்கள்
அவர் வீரம்
குருதியால்
வரையப்படத்
தொடங்கியது.

"கொற்றம்
குலைக்கும்
கொடுவாள்
கையேந்தும்
தம்முற்றம்
இழக்கும் இனம்"
என்ற
புதிய குறள்
வடிவம் காணத்
தொடங்கியது

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்பு முனையைத் தரவல்ல

# இரு முக்கிய சந்திப்புக்கள்

பிரகாஸ்

வளர்ச்சியடைந்த நாடுகளின் ஜி20 மாநாடு ஜேர்மனியின் ஹம்போர்க் நகரில் நேற்று, நேற்றுமுன்தினம் என்று இரண்டு தினங்கள் நடைபெற்றன. இந்த மாநாட்டில் இரு முக்கிய சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன. ஓர் சந்திப்பு திட்டமிட்ட சந்திப்பாக உள்ளது. மற்றொரு சந்திப்பு எவரும் எதிர்பாரா, திட்டமிடாச் சந்திப்பாக உள்ளது. திட்டமிட்ட சந்திப்பாக ட்ரம்ப் - புடின் இடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது. திட்டமிடாச் சந்திப்பாக சீன அதிபர் ஜ ஜின் பிங், இந்தியத் தலைமை அமைச்சர் மோடி இடையிலான சந்திப்பு நடந்துள்ளது.

**ட்ரம்ப் - புடின் சந்திப்பு**

உலக அரசியலில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான சந்திப்பு அமைந்துள்ளது. உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்தும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிவற்றின் தலைமையிலேயே நடைபெற்று வருகின்றன. சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தலைமை தாங்குகிறது. அதேநேரம் சிரிய அதிபர் அசாத்தை பதவி நீக்குவதற்காக உருவான ஆயுதக் குழுக்களுக்கு அமெரிக்கா உதவி செய்கிறது. இந்த விடயத்தில் ரஷ்யா அமெரிக்காவுக்கு எதிராக அதாவது அசாத்துக்கு ஆதரவாக உள்ளது. சிரியாவை மையமாக வைத்து அமெரிக்காவும், ரஷ்யாவும் சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக கடுமையாக முரண்படுகின்றன. இந்த நிலையில் இந்தச் சந்திப்பு சிரிய மக்களுக்கு விடிவைக் கொடுக்கும் விதமாக அமையுமா என்பது பலரினதும் எதிர்பார்ப்பு.

அமெரிக்க அதிபர் தேர்தல் கடந்த வருடம் நடைபெற்றது. ஜனநாயகக் கட்சியின் ஹிலாரிகிளிங்டனை வீழ்த்தி குடியரசுக் கட்சியின் ட்ரம்ப் வெற்றிபெற்றார். உலகமே ஹிலாரி தான் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்த்தது. இதனால் ட்ரம்ப் வெற்றிபெற்றமை அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ட்ரம்பின் வெற்றியின் பின்னணியின் ரஷ்யா உள்ளது என்று அமெரிக்க புலனாய்வுத்துறை எச்சரித்தது. இது தொடர்பில் அமெரிக்க விசாரணை நடத்த முன்வந்த ஜேம்ஸ் கோமே பதவி விலக்கப் பட்டார்.

மொத்தத்தில் ட்ரம்ப், ரஷ்யாவுடன் மிகநெருக்கமாக உள்ளாரா என்பது தொடர்பில் அமெரிக்க ஊடகங்களின் நுணுக்கமான பார்வை விழுந்துள்ளது. இந்தப் பின்னணியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு எதிர்மாறான தாக்கத்தையும் அமெரிக்காவில் ஏற்படுத்தலாம்.



**மோடி - ஜி ஜிங்பிங்**

ஜி20 மாநாட்டில் நடைபெற்ற மற்றொரு முக்கிய சந்திப்பாக இந்தியத் தலைமை அமைச்சர் மோடி - சீன அதிபர் ஜி ஜின் பிங் இடையிலான சந்திப்பு அமைந்தது. இது திட்ட மிடப்படாத சந்திப்பாகவே அமைந்துள்ளது. சிக்கிம் மாநில எல்லையில், இந்தியா சீனாபூடான் நாடுகளின் எல்லைகள் சங்கமிக்கும் முச்சந்திப்பான டோகா லா பகுதியை ஆக்கிரமித்துள்ள சீனா, அங்கு சாலை அமைக்கும் பணிகளை மேற்கொண்டது. இதை இந்தியா தடுத்து நிறுத்தியதால் ஆத்திரமடைந்த அந்த நாடு, இந்திய இராணுவத்தின் இரு பதுங்கு குழிகளை அழித்தது.

சீனாவின் இந்த அத்து மீறல்களுக்கு பதிலடியாக இந்தியா, சுமார் 3 ஆயிரம் சிப்பாய்களை அங்கே குவித்துள்ளது.

இந்திய இராணுவத்தை அங்கிருந்து விலக்கிக்கொள்ளுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வரும் சீனா, தவறும் பட்சத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் போர் பதற்றம் நீடித்து வருகிறது. இந்தப் பின்னணியில் மோடி - ஜின் பிங் இடையிலான சந்திப்பு முக்கிய சந்திப்பாக அமைந்தது.

சீனாவின் தலைமையின்கீழ் பிரிக்ஸ் அமைப்பு ஆற்றிவரும் அபார செயல்திறனை மோடி புகழ்ந்து பேசினார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சீனாவில் உள்ள க்சியாமென் நகரில் நடைபெறவுள்ள ஒன்பதாவது பிரிக்ஸ் மாநாடு வெற்றிகரமாக அமைய தேவையான ஒத்துழைப்புகளை இந்தியா அளிக்கும் என்ற வாக்குறுதியையும் மோடி வழங்கினார். இதனால் சிக்கம் விவகாரத்துக்கு தற்காலிகத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**ட்ரம்புக்கு எதிர்ப்பலை**

ஜ20 மாநாட்டுக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுதிரண்டு ஹம்போர்க் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவுக்கும் அதன் அதிபர் ட்ரம்புக்கும் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டது. உலக வெப்பமயமாதலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிரான்ஸின் தலைநகர் பரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு மாநாடு நடைபெற்று, உலக வெப்பமயமாதலை.2 செல்சியஸ் குறைவடையச் செய்தல் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா இந்தத் தீர்மானத்தை மிகையாகவே ஆதரித்திருந்தார்.

ஆனால் ட்ரம்ப் அதற்கு எதிரான போக்கையே கொண்டுள்ளார். இதனால் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது. ட்ரம்பின் முடிவு சிறுபிள்ளைத் தனமானது என்பதைச் சித்தரிக்கும் விதத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடம்

குடும்பத்தில் குதூகலம் கூடும். மனத்தில் உற்சாகம் பெருகும். இனிமையாகப் பேசி மற்றவர்களைக் கவருவீர்கள். செயலில் வேகம் அதிகரிக்கும். எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசு உதவி கிடைக்கும். முக்கியஸ்தர்களும் மேலதிகாரிகளும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நிலபுலங்கள் இலாபம் தரும். புதிய சொத்துக்களும் பொருட்களும் சேரும். இயந்திரப்பணிகள் இலாபம் தரும். பொறியியலாளர்களின் நிலை உயரும். கணவன் மனைவி உறவு நிலை திருப்தி தரும். கூட்டுத் தொழில் லாபம் தரும். கலைஞர்களுக்கும் மாதர்களுக்கும் செழிப்புக் கூடும். ஆடை, அணிமணிகள் சேரும். சனி 8இல் இருப்பதால் அதிகம் பாடுபட வேண்டிவரும். கெட்டவர்களின் தொடர்புக்கு இடம் தரலாகாது. உத்தியோகஸ்தர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் முன்னேற்றம் தடைப்படும்.

## இடபம்

தோற்றப்பொலிவு கூடும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும் சுப காரியங்கள் நிகழும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களும் கைக்கு கிடைக்கும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களது எண்ணம் நிறைவேறும். ஆசிரியர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் மதிப்பு உயரும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் கிடைக்கும். அலைச்சல் வீண்போகாது. எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நல்லது. குடும்ப நலனில் அக்கறை தேவை. வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. கெட்டவர்களின் தொடர்பு கூடாது.

## மிதுனம்

நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் கூடும். ஜலப் பொருட்கள் இலாபம் தரும். புதியவர்களின் தொடர்பும் அதனால் நன்மையும் உண்டாகும். பயணத்தினால் முக்கியமான எண்ணம் நிறைவேறும். கணிதம், எழுத்து, பத்திரிகை, விஞ்ஞானம், போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். நிலபுலன்கள் ஓரளவு இலாபம் தரும். அயல்நாட்டுத் தொடர்பு பயன்படும். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் கூடிவரும். நல்லவர்கள் உங்களைச் சூழ்ந்து இருப்பார்கள். ஜன்ம ராசியில் சூரியனும் செவ்வாயும் இருப்பதால் எதிலும் பதற்றப்படாமல் நிதானமாக யோசித்து ஈடுபடுவது நல்லது. உஷ்ண சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். உடல் நலனில் கவனம் செலுத்தி வருவது நல்லது.

## கடகம்

ஆடை, அணிமணிகளின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைக்கும். பயணத்தின்போதும் இயந்திரங்களில் பணிபுரியும்போதும் பாதுகாப்புத் தேவை. பொருளாதாரப் பிரச்னைகள் ஏற்படும். உடல் நலம் ஒருநாள் போல் மறுநாளிராது. குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். குடும்பத்தை விட்டுச் சிலர் பிரிந்திருக்க வேண்டிவரும். கண் உபத்திரவம் ஏற்படும். சுப காரியங்கள் நிகழ வாய்ப்புக் குறைவு. பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. மக்கள் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். மறதியால் அவதி ஏற்படும். புதியவர்களிடம் எச்சரிக்கை தேவை. உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு அவசியமாகும். வீண் வம்பு, வழக்குகளைத் தவிர்க்கவும். அரசாங்கத்தாராலும், தந்தையாலும், •உடன்பிறந்தவர்களாலும் பிரச்னைகள் சூழும். தொழில் ரீதியாக இட மாற்றம் ஏற்படும்.

## சிங்கம்

மதிப்பும் அந்தஸ்தும் செல்வாக்கும் உயரும். வாழ்க்கை வசதிகள் பெருகும். அரச உதவி கிடைக்கும். வேலை சிலருக்கு அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் விளையாட்டு, விநோதங்களிலும் போட்டிப் பந்தயங்களிலும் வெற்றி கிடைக்கும். முக வசீகரம் கூடும். நல்லவர்கள் உங்களுக்கு நலம் புரிவார்கள். உத்தியோகஸ்தர்களது நிலை உயரும். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புக்களும் பதவிகளும் கிடைக்கும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். அலைச்சலும் உழைப்பும் கூடும் என்றாலும் அதற்கான பயன் கிடைக்கும். வியாபாரத்தில் அதிக கவனம் தேவை. தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பிரச்னைகள் சூழும். எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் பொறுப்புடன் செயல்படுவது நல்லது.

## கன்னி

செல்வாக்கும் மதிப்பும் உயரும். முக்கியமான எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். நல்லவர்களின் நட்பும் அதனால் அனுகூலமும் உண்டாகும். குடும்ப நலம் திருப்தி தரும். பண நடமாட்டம் கூடும். எதிரிகள் அடங்குவார்கள். காரியத்தில் வெற்றி கிடைக்கும். வேலையில்லாதவர்களுக்கு நல்லதொரு வாய்ப்புக் கூடிவரும். வேலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெறுவார்கள். பொது நலப்பணியாளர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். அரசு உதவி பெற வாய்ப்பு உண்டாகும். விளையாட்டு விநோதங்களில் வெற்றி கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். வாழ்க்கைத்துணைவரால் நலம் உண்டாகும். பிதுரார்ஜித சொத்துக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். கடல் வாணிபம், இலாபம் தரும். கூட்டுத் தொழிலில் வளர்ச்சி காணலாம். முயற்சி பலிதமாகும்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

### 09.07.2017 தொடக்கம் 15.07.2017 வரை

## துலாம்

தொழிலில் வளர்ச்சி காணலாம். கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். பெண்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். வியாபாரத்தில் வளர்ச்சி காண வழிபிறக்கும். கணிதம், எழுத்து, விஞ்ஞானம், பத்திரிகை போன்ற இனங்கள் ஆக்கம் தரும். ஜலப்பொருட்களால் இலாபம் கிடைக்கும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். நண்பர்களும் உறவினர்களும் உதவுவார்கள் கணவன் மனைவி உறவு நிலை திருப்தி தரும். கூட்டுத் தொழில் இலாபம் தரும். தொழிலை மேம்படுத்தச் செலவு செய்வீர்கள். தோல் பொருட்கள், வயிறு, கால் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். மறதி உண்டாகும். பெரியவர்கள், சாதுக்கள் ஆகியோரது அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. அலுவலகப் பணியாளர்கள் பொறுப்புடன் கடமையாற்றிவருவது அவசியமாகும் கொடுக்கல்வாங்கலில் கவனம் தேவை.

## விருச்சிகம்

புதியவர்களின் சந்திப்பும் அதனால் நன்மையும் உண்டாகும். பொருளாதார நிலை திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்வாங்கல் இனங்களால் ஆதாயம் கிடைக்கும். பொன்னும் பொருளும் சேரும். மக்களால் நலம் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். வார முன்பகுதியில் முக்கியமான எண்ணங்கள் சில நிறைவேறும். வாரப் பின்பகுதியில் செலவுகள் சற்று அதிகரிக்கும். இடமாற்றம் உண்டாகும். அதிகம் உழைக்க வேண்டிவரும். சிறு விபத்துக்கு ஆளாக் நேரலாம். எக்காரியத்திலும் பதற்றம் கூடாது. யோசித்து ஈடுபடவும். எரிபொருட்கள், மின்சாரம், வெடிப்பொருட்கள், கூரிய ஆயுதங்கள் ஆகியவறைப் பயன்படுத்தும் போது பாதுகாப்புத் தேவை. விளையாட்டு, விநோதங்க ளின்போதும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

## தனுசு

குடும்ப நலம் சிறக்கும். நண்பர்களும் உறவினர்களும் உதவி புரிவார்கள். சாதுக்கள் தரிசனம் கிடைக்கும். தியானம், யோகா ஆகியவற்றில் ஈடுபாடு கூடும். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். எழுத்தளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு அதிகரிக்கும். கணவன் மனைவி உறவு நிலை பாதிக்கும். கலைஞர்கள் விழிப்புடன் செயல்படுவது நல்லது. பெண்களுக்குப் பிரச்னைகள் சூழும். பிறரிடம் கோபப்படாமல் சுமுகமாகப் பழகுவது அவசியமாகும். கூட்டுத் தொழிலில் ஈடுபாடு உள்ளவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. பயணத்தின்போது விழிப்புத் தேவை. பொருளாதார நிலை ஏற்றம் இறக்கமாகவே காணப்படும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர்களும் பொறுப்புடன் கடமையாற்றினால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம்.

## மகரம்

மனத்துக்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழும் நேரமிது. திருமணம் போன்ற சுப காரியங்கள் கைகூடும். பண நடமாட்டம் திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் வாங்கல் இனங்கள் இலாபம் தரும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலம் உண்டாகும். மகப்பேறு பாக்கியம் சிலருக்கு கிடைக்கும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பெண்களால் ஆடவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். புதிய ஆடை, அணிமணிகள் சேரும். தெய்வ தரிசனம் கிடைக்கும். தான, தர்மப்பணிகளில் ஈடுபாடு கூடும். தொலைதூரத் தொடர்பு பயன்படும். செய்து வரும் தொழிலில் வளர்ச்சி காணலாம். உத்தியோகஸ்தர்களும், தொழிலாளர்களும் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். உயர் பதவிகள் கிடைக்கும். நல்ல இடத்துக்கு மாற்றம் உண்டாகும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் வெற்றி கிடைக்கும்.

## கும்பம்

கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும் நிலபுலன்கள் சேரும். ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைக்கும். வியாபாரிகளுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். கணிதம், எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். தொழிலாளர்களுக்கு அனுகூலமான போக்கு நிலவிவரும். விவசாயிகளுக்கு வருவாய் கூடும் சமுதால நலப்பணியாளர்கள் புகழ் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு முன்னேற்றம் தடைப்படும். பொருளாதாரம் சம்பந்தமான காரியங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. சுப காரியங்கள் நிகழக் குறுக்கீடுகளும் தடைகளும் ஏற்படும். புதியவர்களி[illegible] கொள்வது அவசியமாகும்.

## மீனம்

பண வரவு திருப்தி தரும். கலைஞானம் கூடும். நல்ல தகவல் வந்து சேரும். பெண்களுக்கு மன உற்சாகம் கூடும். புதியஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள், ஆன்மிகவாதிகள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். கூட்டுத் தொழில் இலாபம் தரும். பயணத்தின் மூலம் முக்கியமான காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவு நிலை திருப்தி தரும். வாரப் பின்பகுதியில் மனத்தில் ஏதேனும் சலனம் ஏற்படும். உடல் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். உஷ்ணாதிக்கத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. வீண் அலைச்சல் கூடாது. 4இல் சூரியனும், செவ்வாயும் உலவுவதாலும், 9இல் சனி இருப்பதாலும் பெற்றோர் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். இயந்திரப்பணியாளர்கள் விழிப்புடன் செயல்படுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சதந்திரக் க(வி)தை

# புத்தியுள்ள காகம்


தாகம் மிகக் கொண்ட காகம் ஒன்று
தண்ணீரைத் தேடி,
சோகத்தில் அலைந்து திரிகையில் கண்ணில்
பட்டது ஒரு குவளை
"ஆகா! தண்ணீர் கிடைத்தது" என்று
ஆனந்தமாய்ப் பாடி
வேகம் மிகவாய் குவளை இருக்கும்
இடத்துக்குப் பறந்தோடி

குவளையின் அடியில் சிறிதே தண்ணீர்
இருப்பதைக் கண்டது.
தேடிக் கிடைத்தும் பருகிட முடியாது
கவலை மிகக்கொண்டு
வாடிய நிலையில் சுற்றும் பார்த்தது
ஒற்றைக் கண்கொண்டு.
குவளையின் அருகில் கூழாங் கற்கள்
கிடப்பதைக் கண்டு

சிலநொடி நேரம் சிந்தித்தது. கற்களை
ஒவ்வொன்றாய் எடுத்து
'மள மள' வென்று குவைளைக்குள்
விரைவாய்ப் போட்டது

அலகுக்கு எட்டும் அளவுக்கு நீரின்
மட்டமும் உயர்ந்தது காகம்
இலகுவாய் நீரைப் பருகித் தாகம்
தீர்த்தே பறந்து சென்றது.

தேவை ஏற்படும் வேளையில் தேவை
அற்றபொருள் கூட
தேவையைப் பூர்த்தி செய்திட உதவும்
என்பதையும் இக்கதை யூடு
யாவரும் உணர்ந்திட வைத்திடும் என்பது
நல்லதொரு பாடமே
உணர்ந்து உமக்கு நானும் பகர்ந்தேன்
க(வி)தையிலே...



டே.த.எட்வின், உடுவில்

## சொற்சிலம்பம் போட்டி இல: 479

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | | ■ | 9 | 10 | | | ■ |
| 11 | | 12 | ■ | | | ■ | 13 |
| | ■ | | ■ | 14 | | | |
| ■ | 15 | | | ■ | 16 | | ■ |
| 17 | | | ■ | 18 | | | 19 |
| ■ | ■ | | ■ | 20 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..................................................................
கையொப்பம்:................................................

**இடமிருந்து வலம்**

1. விட்டுக் கொடுக்காமை
4. வேகவை
6. பிரதிமை
7. சூரியன் உதித்ததிலிருந்து மறையும் வரையுள்ள கால இடைவெளி
8. பழுக்காத நிலை
9. மிகப் பெரிய
11. பற்களால் அரை
14. தேங்காயைத் துருவி எடுத்த பின் மீந்திருப்பது
15. பாதுகாப்புக்காகவே இதனைப் பயன்படுத்து கின்றோம்
16. சுனை
17. உரிய
18. சண்டை
20. மிகக் குறைந்த பெறுமதியுடைய நாணயக் குற்றி

**மேலிருந்து கீழ்**

1. ஒளியினால் ஏற்படும் வெளிச்சம்
2. இசைக் கருவிகளை மீட்டு
3. சங்ககால இலக்கியங்களில் பொதுவாக வரும் முக்கிய பெண் பாத்திரம்
4. உள்ளம்
5. பண்டைக் காலப் பயன்பாட்டில் இருந்த போர்க் கருவி
7. பல பெண்களை மணந்து கொள்வது
10. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் போது விசாரிக்கப்படும் தரப்பொன்று
12. இதனைப் படிப்பதால் அறிவு வளரும்
13. முடிக்கற்றை
19. பிரஜை

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 477 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) அகம்பாவம் (6) சரி (7)வட (8)சக (9)கலம்பகம் (11)பாமரன் (13)கதி (14)விதம் (15)பால் (17)தலை (18) கட (19)உரு (20) விளம்பரம் (22)விரைவு (23) லாம்பு

**மேலிருந்து கீழ்**
(1)அசம்பாவிதம் (2)கரி (3)பாவலன் (4)வடம் (5)தாகம் (8)சகதி (9)கரம் (10)பகல் (12) மதலை (15)பாடம் (16)கரும்பு (18)களவு (19)உரம் (20) விரை (21) பலா
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 477 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கேதீசன் துளசி,
இல. 115/1 ஞானபண்டித - ஆடிய பாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**2 ஆம் பரிசு**
செ.விசாலன்,
விநாயகர் வீதி, கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்.

**3 ஆம் பரிசு**
சி.யோகராசா,
முகமாலை, எழுதுமட்டுவாழ்.

**4 ஆம் பரிசு**
திருமதி ச.லிங்கமூர்த்தி,
அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

**5 ஆம் பரிசு**
திருமதி இ. பத்மதேவா,
புத்தூர் வீதி,
மீசாலை வடக்கு,
மீசாலை.

**பாராட்டுப் பெறுவோர்**

கா.கார்த்திகா,
இல. 57, 2ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.

இ.யூஜினா மரியா,
இல. 85/4 கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பூ.வனஜா மலர்,
தையிட்டி புலம்,
வித்தகபுரம்,
தெல்லிப்பழை.

**சொற்சிலம்பம் போட்டி இல.479**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முக வரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (19.07.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.479இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.07.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 477 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 4 | | 6 | | | 5 |
| | 8 | | | | | 9 | 7 | 6 |
| 5 | | 6 | 1 | | | | 4 | |
| | | 3 | 2 | | | | | 7 |
| | 5 | | | | | | 9 | |
| 9 | | | | | 1 | 5 | | |
| | 4 | | | | 3 | 7 | | |
| | | 8 | | | | | 5 | |
| 2 | | | 9 | | 4 | | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஜெயம்ரவியுடன் நடித்தமை பெரிய வாய்ப்பு என்கிறார் சாயிஸா

"என்னைப் போன்ற மொழி தெரியாத புதுமுகத்துக்கு ஜெயம்ரவியுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததை பெரிய அதிர்ஷ்டமாக கருதுகிறேன்" என வனமகன் திரைப்பட கதாநாயகி சாயிஸா கூறியுள்ளார். இயக்குநர் விஜய் இயக்கிய 'வனமகன்' படத்தில் ஜெயம் ரவியுடன் ஜோடி சேர்ந்து தமிழில் அறிமுகமானவர் சாயிஸா. இவர் பிரபல ஹிந்தி நடிகர் திலீப்குமாரின் பேர்த்தி. அடுத்து பிரபுதேவா இயக்கத்தில் விஷால்கார்த்தி நடிக்கும் 'கறுப்பு ராஜா வெள்ளை ராஜா' படத்தில் நடிக்கிறார். வேறு சில படங்களில் நடிப்பது குறித்து பேச்சு நடந்து வருகிறது.

தமிழ் படங்களில் நடிப்பது குறித்து சாயிஸா, "தெலுங்கு, ஹிந்தி படங்களில் நடித்துள்ள எனக்கு 'வனமகன்' படத்தில் தமிழ் முன்னணி நடிகர் ஜெயம்ரவியுடன் ஜோடி சேர்ந்து நடித்தமை மகிழ்ச்சியாக இருந்தது. அவர் அறிமுகம் இல்லாதவர் என்பதால் முதலில் ஒருவித அச்சம் ஏற்பட்டது. ஆனால் நான் சந்தித்த முதல் நாளே அவர் சகஜமாகப் பழகினார். தமிழுக்கு நான் புதுவரவு. என்றாலும், எந்தவித ஈகோவும் இல்லாமல் நடந்துகொண்டார். அது அவர் மீது எனது மரியாதையை அதிகப்படுத்தியது. சில காட்சிகளில் நான் அதிக டேக் வாங்கினாலும், அவர் கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் மீண்டும் மீண்டும் என்னுடன் நடித்தார். தமிழ் வசனம் பற்றி எதுவும் தெரியாமல் இருந்த எனக்கு, அதை புரிந்து கொள்ள உதவி செய்தார். என்னைப் போன்ற மொழி தெரியாத புதுமுகத்துக்கு ஜெயம்ரவியுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததைப் பெரிய அதிர்ஷ்டமாக கருதுகிறேன் என மேலும் தெரிவித்தார்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சிறிய பணிக்கும் விடாமுயற்சி தேவைப்படும். அனுபவசாலிகளின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனபயணத்தில்மிதவேகம்பின்பற்றவும்.

**இடபம்:** சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடலாம். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்கு பணமின்றி திண்டாடுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். காணாமல் தேடிய பொருள் புதிய முயற்சியால் வந்து சேரும்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருவீர்கள். கடந்த கால உழைப்புக்குரிய பலன் தற்போது கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** சிலர் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறி நடப்பர். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர் விடயத்தில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும்.

**துலாம்:** முன்யோசனையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். கடந்த கால உழைப்பின் பலன் தற்போது கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.


**விருச்சிகம்:** நட்பு விடயத்தில் கவனம் தேவை. தன்மானத்திற்கு சோதனை வரலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** லட்சிய நோக்குடன் செயற்படுவீர்கள். குடும்பத்தினரின் அன்பும், பாசமும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், வருமானமும் உண்டாகும். பெண்கள் ஆடம்பரப் பொருள்களை வாங்கி மகிழ்வர்.

**மகரம்:** பேச்சில் நிதானம் காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் குளறுபடி உருவாகலாம். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

**கும்பம்:** மதிநுட்பத்துடன் நடந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.













twitter

**மெத்த வீட்டான்** @HAJAMYDEENNKS
இப்போதைய பண்டிகைகள் எல்லாம் செல்பி எடுத்து சமூக வலைத்தளங்களில் பகிர்வதோடு முடிந்துவிடுகிறது...!
1 17 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 62 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பு ?

ஸூடோ ஸ்வாமி

சில வாரங்களுக்கு முன்னர் வடமாகாண சபையில் ஏற்பட்டிருந்த வெடிப்பைக் கட்டுப்படுத்தியதில் வடபுலத்து மதப்பெரியார்களின் பங்கு சிலாகிக்கப்பட்டிருந்தது. யாழ். பேராயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் விலக்குப்பிடிப்பால் வடக்குக் குழப்பநிலை தீர்வை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்திருந்தது. போர்க்காலச் சூழலின்போது, நத்தார் பண்டிகையை ஒட்டிய காலப்பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்ட குறுகிய காலப் போர்நிறுத்தங்களைச் சாத்தியமாக்கியவர்களும் சமயப்பெரியார்களே. இதைவிட 2015இல் நடந்த நல்லாட்சி அரசியல் திருப்பத்தில் மாதுலுவாவே சோபித தேரரின் வகிபாகம் மறக்கப்பட்டு விடமுடியாதது. இவ்வாறு சமயத்தலைமைகளின் தலையீடு பற்றிய விம்பங்கள் நேர்மறையானவை என்று கருதியிருக்க, கடந்த வாரத்தில் இலங்கைப் பௌத்த தலைமைகளிடமிருந்து வெளிப்பட்டிருக்கும் கருத்து, அதிர்ச்சியையும் விசனத்தையும் தோற்றுவித்திருக்கிறது. ஆமாம்...! புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசின் திட்டத்துக்கு மகாநாயக்க தேரர்களிடமிருந்து கல்லெறி கிடைத்திருக்கிறது.

**எதிர்ப்பும் எதிர்பார்ப்பும்**

இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களான மல்வத்த, அஸ்கிரிய, ராமாஞ்ய நிக்காய மற்றும் அமரபுர நிக்காயாவைச் சேர்ந்த தேரர்கள் அஸ்கிரிய பீடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒன்றுகூடி புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாட்டுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். புதிய அரசமைப்போ அல்லது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பில் திருத்தம் செய்வதோ தேவையற்றது என்று தெரிவித்திருக்கும் அதேவேளை, அரசின் ஏனைய சில முன்னெடுப்புக்களையும் கண்டித்திருக்கிறார்கள். 2015 அரசதலைவர் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளரை முன்னிறுத்தி முன்வைக்கப்பட்ட பெருங்கோஷமான 'மாற்றம்' வெற்றி பெற்றதனையடுத்து நாட்டின் இருபெருங்கட்சிகளும் ஏதோ ஒருவிதத்தில் சமரசம் நிலவக்கூடிய வகையில் தேசிய அரசை நிறுவியிருந்தன. அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றம் கண்டிருந்தது. இதனூடாகப் புதிய அரசமைப்பை உருவாக்கும் பெரும் பணிக்கான அத்திபார வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. வழிகாட்டல் குழுவொன்று அமைக்கப்பட்டதுடன் அதனுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்களும் அமைக்கப்பட்டன. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு அரசமைப்புச் சபை அமைந்திருந்தாலும், மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து அரசமைப்பு உருவாக்கத்தில் அவற்றையும் உள்ளீடு செய்வதற்காக மாவட்டங்கள் தோறும் பொதுமக்களுக்கான அமர்வுகள் கூட முன்னெடுக்கப்பட்டிருந்தன. செயற்பாட்டுத் தொடர் ஒன்றினூடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் புதிய அரசமைப்புக்கான பணிகளின் ஒரு திருப்பமான கட்டமாக வழிகாட்டல் குழுவின் முதலாவது இடைக்கால அறிக்கையை எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பது எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**படிமுறைகள்!**

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாகக் கடந்த மாதம் 28ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட அரசமைப்புச் சபையின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் தொடரப்படவுள்ள படிமுறைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் கீழ் அமைக்கப்பட்ட 6உப குழுக்களும் தத்தமது விடயப்பரப்புத் தொடர்பான அறிக்கையை வழிகாட்டல் குழுவுக்கு வழங்கியிருந்தன. அவற்றைக் கருத்திலெடுத்து வழிகாட்டல் குழுவால் உருவாக்கப்படும் அறிக்கையே ஒகஸ்டில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். அந்த அறிக்கை, அரசமைப்புச் சட்டமூலத்துக்கான வரைபு அல்ல; அரசமைப்பு மீதான அறிக்கை. குறித்த அறிக்கை தொடர்பில் பொதுமக்களின் கருத்தறியப்பட்டு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும். அந்த விவாதத்தின் அறிக்கை நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்படும். அதன் பின்னரே அரசமைப்புக்கான வரைபைத் தயாரிப்பது பற்றி விவா திக்கப்படும். இது ஒரு நீண்ட செயல்முறை என்றிருந்தார்.

**கூட்டமைப்பின் எதிர்ப்பு**

1833ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தத்திலிருந்து அரசமைப்பு வரலாற்றைக் கொண்டிருக்கும் இலங்கை, காலத்துக்குக் காலம் யாப்புச் சீர்திருத்தங்களை கண்டே வந்திருக்கிறது. இறுதியாக நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறைமையைச் சிறப்பம்சமாகக் கொண்ட 1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு, இதுவரைக்கும் 19திருத்தங்களைக் கண்டிருக்கிறது. இதில் 6, 13, 17, 18ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்கள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. 2006ஆம் ஆண்டளவில் மகிந்த ராஜபக்ச அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு வழிவகுக்கும் வகையில் சகல கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை நியமித்திருந்தார். எனினும் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருமளவுக்கு அது பங்காற்றவில்லை.

நாட்டின் இருபெரும் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து உணர்ந்து அரசியல் திருத்தத்துக்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருக்கையில் அதற்கு எதிர்க்கட்சித் தரப்பிடமிருந்தும் ஆதரவு கிடைத்திருக்கின்றது. ஆனாலும் மகாநாயக்கதேரர்களின் எதிர்ப்பு அரசியல் பரப்பில் அதிர்வலைகளைத் தோற்றுவித்திருக்கிறது. அதுவும் குறித்த செயல் நகர்வில் கணிசமான காலம் கடந்த பின்பு, பௌத்த மற்றும் சிங்கள பௌத்த விவகாரங்களுக்கான முதன்மைப்படுத்தல்களுக்குப் பின்னகர்வு நேர்ந்துவிடக்கூடும் எனக்கருதிப் பௌத்த தலைமைகள் எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பில் தமிழத் தேசிய கூட்டமைப்பு தனது எதிர்ப்பைப் நாடாளுமன்றில் தெரிவித்திருக்கிறது.

நாட்டின் இருபெரும் தேசிய க் கட்சிகளும் ஒன்றிணைந்து உணர்ந்து அரசியல் திருத்தத் துக்கான ஏற்பாடுகளை முன்னெ டுத்திருக்கை யில் அதற்கு எதிர்க் கட்சித் தரப்பிடமிருந்தும் ஆதரவு கிடைத்திருக்கின்றது. ஆனாலும் மகாநாயக்கதேரர்களின் எதிர்ப்பு அரசியல் பரப்பில் அதிர்வலைகளைத் தோற்று வித்திருக்கிறது.


**பேச்சுக்களில் இறங்கியுள்ளார் மைத்திரி**

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட மகாநாயக்க தேரர்களின் எதிர்ப்பையடுத்து வியாழக்கிழமை கண்டிக்கு விஜயம் செய்திருந்த அரசதலைவர் அங்கு பௌத்த தலைமைகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கிறார். அதன்போது அரசமைப்புத் தொடர்பாக அரசின் முன்னெடுப்புக்கள் பற்றி விளக்கமளித்த அவர், இது தொடர்பில் தொடர்ந்து கலந்துரையாட இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அவருடைய கண்டிப் பயணத்துக்கு முன்பதாகக் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, அரசமைப்பு விடயத்தில் அரசு பின்வாங்காது எனத் தெரிவித்திருந்தார். அரச தேர்தலில் 62இலட்சம் மக்களின் ஆணையைப் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அந்த ஆணையை நடைமுறைப்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

**மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கவேண்டும்!**

பௌத்த தலைமைகளின் நிலைப்பாடு தொடர்பில் கருத்து தெரிவித்திருக்கும் ஜே.வி.பி.யின் பிமல் ரத்நாயக்க, அரசமைப்புத் திருத்தம் அல்லது புதிய அரசமைப்பு உள்ளடக்கம் பற்றிய போதிய தெளிவின்மையாலேயே தேரர் கள் குறித்த அரசமைப்புக்கு முரணான நிலைப் பாட்டை எடுத்திருப்பதாகத் தெரிவித்திருப்பதுடன் அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர், மகாநாயக்க தேரர்களுக்கு இது தொடர்பில் தெளிவூட்ட வேண்டும் என்றும் குறிப்பிட் டிருக்கிறார். மக்களின் கருத்துக்களை உள்வாங்கி, அதனை நாடாளுமன்றில் விவாதித்து, கூடவே, தேவையெனில் சர்வஜன வாக்கெடுப்புக்கும் ஒப்புதல் பெறக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டிருக்கும் புதிய அரசமைப்பின் வேலைகளை நாயக்க தேரர்களின் கருத்துக்களுக்காக ஆறப்போட்டுவிடக்கூடாது. சந்திர கிரகணம், சூரிய கிரகணம் வருவதைப் போன்று அரியதொரு அரசியல் சூழ்நிலை நிலவுகின்ற வேளையில், ஆட்சிப்பீடத்தை மூன்றாம் முறையும் தனதுவசமாக்க முயற்சி செய்தவரை வீழ்த்தி, ஒருமுறைக்கு மேல் ஆட்சியைத் தொடர விரும்பாது தனக்குள்ள அதிகாரங்களை நாடாளுமன்றுக்கும் குடிமக்களுக்கும் கையளிக்க விரும்பும் ஒருவரை அரச தலைவராகக் கொண்ட காலத்தில், ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அரசமைப்புப் பணிகள் தொய்வின்றித் தொடரப்பட வேண்டும். 1949ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2016இல் சுதந்திர தினத்தன்று தமிழில் தேசிய கீதம் பாடுவதற்குச் சந்தர்ப்பமளித்துச் சாதனை நிகழ்த்திய நல்லாட்சி அரசு, அரசமைப்பு விவகாரத்திலும் சாதனை படைக்க வேண்டும். ஏனெனில் இதற்குப் பின்னால் 62இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவாலிப் படுகொலைகளது 22ஆவது நினைவுதினம்

மு.ஈழத்தமிழ்மணி

**1994** ஆம் ஆண்டு நாட்டின் அரச தலைவியாகப் பதவியேற்றுக்கொண்ட சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப்புலி களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி அவர்களை அழித்தொழிக்க முழுவீச்சில் செயற்பட்டார். யாழ்.மாவட்டத்தை விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாகக் கைப்பற்றும் திட்டத்தை முழுவீச்சில் செயற்படுத்தியிருந்தார்.

முன்னாள் அரச தலைவியான சந்திரிகாவின் ஆட்சியில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலைசெய்யப்பட்ட வரலாறு எவராலும் இலகுவில் மறந்து விட முடியாததொன்று. யாழ்.மாவட்டத்தைக் கைப்பற்றுவதற்காக சுமார் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களை குடாநாட்டை விட்டு வெளியேற்றுவதிலும், போரைத் தீவிரமாக முன்னெடுப்பதிலும் சந்திரிகா அக்கறை காட்டிச் செயற்பட்டார்.

சந்திரிகாவின் ஆட்சியின்போது அரச படைகள் மேற்கொண்ட படுகொலைகளில் தமிழ் மக்கள் மனதில் ஆறாத வடுவை ஏற்படுத்திய கொடூரமான படுகொலையாகக் கருதப்படும் நவாலி தேவாலயப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 22 ஆண்டுகளாகி விட்டன.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது அரச படைகளால் ஈவு இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்ட வானூர்திக் குண்டு வீச்சுத்தாக்குதல் சம்பவம் பன்னாட்டுச் சமூகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது மட்டுமன்றி, தமிழ் மக்களைப் பெரும் சோகத்துக்குள்ளாக்கியிருந்தது. ஈழத்தமிழர்களின் வரலாற்றில் குருதி ஆறு ஓடிய பயங்கர நாளாக அமைந்தது. 1995 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் ஒன்பதாம் திகதியாகும்.




> தேவாலயத்தின் சுவர்கள், மதில்கள், மரங்கள் யாவற்றிலும் குருதிக் கறைகள் படிந்திருந்தன. சதைகள் நிலத்தில் ஒட்டியிருந்தன. மண்குவியல்களுக்கு மத்தியில் உயிரற்ற சடலங்களைத் தேடி எடுத்துக் கொண்டிருந்தனர். குழந்தைகள் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் 147 அப்பாவிப் பொது மக்களது உயிர்களை நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் அரசின் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் காவு வாங்கியது.

## முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பு

தமிழர் பிரதேசங்களை ஏப்பமிடுகின்ற நடவடிக்கையாக முன்னேறிப்பாய்தல் (லீப் போர்வேட்) எனப் பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி அரச படைகள் வலிகாமம் பிரதேசத்தில் தமது உக்கிர எறிகணைத் தாக்குதல்களுடன் ஆரம்பித்திருந்தன. உடுத்த உடையுடன் கைகளில் அகப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு அந்தப் பிரதேசமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரத் தொடங்கினர். சொந்த இடங்களிலிருந்து வெளியேறிய மக்கள் போக்கிடமில்லாமல்ஆலயங்கள், மற்றும் பொதுக்கட்டடங்களில் அடைக்கலம் புகுந்தனர். அராலி வட்டுக்கோட்டைப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் காரைநகர் வீதியூடாக நவாலியில் வந்து தஞ்சமடைந்த நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய வளாகம் மக்களால் நிரம்பி வழிந்திருந்தது.

வலிகாமம் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அரசபடையினரது முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் மக்களை அச்சுறுத்தும் வகையில் பலாலியிலிருந்தும், அளவெட்டியிலிருந்தும் எறிகணைத்தாக்குதல்கள் படுமோசமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன. 9 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்குப் பின்னர் வலிகாமம் பிரதேசம் முழுவதும் மக்கள் குடியிருப்புகளைநோக்கி முப்படையினரின் தாக்குதல்கள் ஓயாது இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

தேவாலயத்தில் தங்கியிருந்த மக்களின் உடனடித்தேவைகளை நவாலியூர் மக்களும்,பல்வேறு அமைப்புக்களும்,யுவதிகள், இளைஞர்களும் ஒன்று சேர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். அதேசமயம் சகலவீதிகளிலும் உலங்குவானூர்திகளின் அகோரமான எறிகணைத்தாக்குதல்களினால் படுகாயப்பட்டவர்களையும் , உயிரிழந்தவர்களது சடலங்களையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு எதுவித வசதிகளும் இருக்கவில்லை.

## தேவாலயக் கட்டடம் மீது குண்டுகளை வீசிய விமானங்கள்

நவாலிதேவாலயமும் அதன் சுற்றுப்புறங்களும் பரபரப்பாகிக் கொண்டிருந்தவேளையில் மாலை 5 மணியளவில்தேவாலயத்தை நோக்கி வானில் பறந்துவந்த விமானப்படையினரின் மூன்று புக்காரா விமானங்கள் குண்டுகளை தேவாலயக் கட்டடம் மீது வீசின. தேவாலயத்தில் அருகிலிருந்த உயரமான மரமொன்றில் செஞ்சிலுவைக் கொடி பறக்க விடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் எல்லோரையும் கதிகலங்க வைக்கும்படி பேரிரைச்சலுடன் வானிலிருந்து பல குண்டுகளை இரக்கமின்றி வீசித்தள்ளியது. விமானப்படையினரது புக்காரா விமானமொன்று. நவாலி முருகமூர்த்தி கோயிலுக்குச் செல்லும் வீதிக்கு எதிர்ப்புறமாக காரைநகர் வீதியில் உள்ள வீடொன்றின் மீது முதல் குண்டை வீசியதைத் தொடர்ந்து, எட்டுக்குண்டுகள் தொடர்ந்து வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. தேவாலயப்பகுதி முழுவதும் மரண ஓலம்; எங்கும் புகைமூட்டம்; அந்தப் பிரதேசமே ஒரு கணத்தில் மயான பூமிபோன்றானது. இருள் கவ்விக் கொண்டிருந்தது.மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடினர். இறந்தவர்கள் யார்? காயப்பட்டவர்கள் யார்? என்று தெரியாமல் அங்கு தங்கியிருந்த மக்கள் அந்தரித்தனர்.

தேவாலயம் முழுவதும் மயானம் போன்று காட்சியளித்தது. விடியற்காலை நேரம், அங்கு தங்கியிருந்த உயிர் பிழைத்தவர்கள், உயிரிழந்த உறவுகள், அயலவர்களின் உடல்களை இனம் காணத் தொடங்கினர். தேவாலயத்தின் கூரைமரங்கள், ஓடுகள் யாவும் முற்றாகச் சேதமடைந்திருந்தன. தேவாலயத்தின் முன்பாக நின்ற பெரிய மரத்தின் கிளையில் ஒருவருடைய சடலம் தொங்கிக் கொண்டிருந்தது. பச்சிளம் குழந்தையொன்றின் தலை தேவாலயத்தின் பூந்தொட்டியில் தூக்கி வீசப்பட்டிருந்தது.

## அப்பாவிப் பொது மக்களது அநியாய உயிரிழப்புக்கள்

தேவாலயத்தின் சுவர்கள், மதில்கள், மரங்கள் யாவற்றிலும் குருதிக் கறைகள் படிந்திருந்தன. சதைகள் நிலத்தில் ஒட்டியிருந்தன. மண்குவியல்களுக்கு மத்தியில் உயிரற்ற சடலங்களைத் தேடி எடுத்துக் கொண்டிருந்தனர். குழந்தைகள் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் 147 அப்பாவிப் பொதுமக்களது உயிர்களை நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் அரசின் வானூர்தி குண்டு வீச்சுத் தாக்குதல் காவு வாங்கியது.

அன்றைய நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான குண்டு வீச்சுத் தாக்குதல்களில் உயிரைச் துச்சமென மதித்து மக்களுக்காகப் பணியாற்றிய சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர் ஹேமலதா செல்வராசா, சில்லாலைப் பிரிவு மூத்த கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபிரியேல் பிள்ளை ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்த அரச உத்தியோகத்தர்களாவர். இடம்பெயர்ந்த மக்களுக்குத் தொண்டு செய்து கொண்டிருந்த 48 பொதுநலத் தொண்டர்களும் விமானத் தாக்குதலில் காவுகொள்ளப் பட்டனர்.

வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அந்தத் துயரநாளை தமிழினம் ஒருபோதும் மறக்காது என நவாலி தேவாலயப்படுகொலைகள் குறித்து லண்டன் பி.பி.சி தமிழோசை செய்திச்சேவை தெரிவித்திருந்தது.

படுகொலைசம்பந்தமான விடயம் பற்றி சந்திரிகா அம்மையார் ஒரு அரச தலைவர் என்ற வகையில் கடுகளவேனும் கவனத்திலெடுக்கவில்லை. அகம்பாவம் தொனிக்கும் விதத்தில் பதிலளித்திருந்தார். ஈழத்தமிழர்கள் வரலாற்றில் நீதிமறுக்கப்பட்ட நவாலி தேவாலயப்படுகொலைகளுக்கான விலையை எந்தவொரு அரசாக இருந்தாலும் என்றோ ஒருநாள் கொடுத்தே ஆகவேண்டும். தமிழினத்தின்மீது அரசுப்படைகள் மேற்கொண்ட பல நூற்றுக்கணக்கான படுகொலைகளுக்கான பொறுப்பை எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களும் இதுவரை ஏற்றுக்கொண்டதுமில்லை. குற்றவாளிகளைத் தண்டித்ததும் கிடையாது.

## நவாலிப் படுகொலைக்கான பொறுப்பை ஏற்க மறுத்த கொழும்பு அரசு

நவாலிப்படுகொலைகளுக்கு சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நீதிகிடைக்கவில்லை. எந்தவொரு படைவீரர்களும் தண்டிக்கப்படவுமில்லை. சந்திரிகா இந்தவருடம் மார்ச் மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, இந்த நாட்டைப் போர்க்காலத்தில் பாதுகாத்த இராணுச் சிப்பாய்களுக்கு எதிராக நல்லாட்சி அரசு ஒருபோதும் சட்ட நடவடிக்கை எடுக்காது எனத் தெரிவித்திருந்தார். இப்படிப்பட்ட சந்திரிகா தனது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தமிழர் படுகொலைகளை மறந்துவிட்டு மீண்டுமொரு சமாதான தேவதையாக அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுத்து செல்ல முனைகிறார். இதனை எந்தவொரு தமிழனும் சீரணித்துக்கொள்ள மாட்டான்.

22 ஆண்டுகள் நிறைவடைகின்ற இந்தப் படுகொலைகளது நினைவுகள் யாவும் தமிழ் மக்களுக்கான உரிமைகள் கிடைக்கும் வரையில் தமிழ்மக்களின் இதயங்களில் நினைவலைகளாக எப்போதுமே நிலைபெற்றிருக்கும். ஏனென்றால், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுகின்ற சந்திரிகா அம்மையாரின் நிகழ்ச்சிநிரலில் இடம்பெற்ற கறைபடிந்ததொரு வரலாற்றுப் படுகொலையே நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலையாகும்.

தமிழர்களின் இதயங்களை விட்டு அகலாத நவாலிப்படுகொலைகளில் உயிரிழந்தவர்களுக்கான நினைவுச்சின்னங்கள் நவாலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியிலும், நவாலி சென்பீற்றர்ஸ் ஆலயப்பகுதியிலும் அமைக்கப்பட்டு வருடாவருடம் வலிகாமம் மக்களால் தவறாது நினைவுகூரப்படுவது என்பது நவாலிப்படுகொலை வரலாற்றை காலம் காலமாக நினைவுபடுத்திக்கொண்டிருக்கின்ற வரலாற்றுத்துயர் கொண்ட நிகழ்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2016 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சையில் மத்திய மாகாணத்தில் கணித பாடத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள வழிக்காட்டிய பாடசாலை ஆசிரியர்களையும், அதிபர்களையும் மற்றும் கல்வி அதிகாரிகளையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ஹற்றன் சீடா வள நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எ.சத்தியேந்திரா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ)





கண்டி உதவி இந்தியத் தூதுவராயலயத்தின் ஏற்பாட்டில் யோகா உடற்கலைப் பண்புகள் தொடர்பாக மலையகத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் பொது மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு கண்டி உதவி இந்தியத் தூதரகத்தின் பாராதி கலாகேந்திர நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கண்டி உதவி இந்தியத் தூதுவராயத்தின் கொன்சியூலர் ராதா வெங்கட்ராமன் பாடசாலை மற்றும் பொது மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை வழங்கி வைத்தார். (ஐ)



வவுனியா கல்மடு மகாவித்தியாலய மாணவி டயந்தினி கண்ணதாசனுக்கு பிரிட்டனில் இயங்கும் வீ - 3 அமைப்பு வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகமூடாக துவிச்சக்கர வண்டி ஒன்றை வழங்கி வைத்தனர். நிகழ்வில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கே.வசந்தன் சமூக ஆர்வலர் புருஸோத்தமன் பாடசாலை உப அதிபர் நிமலன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ)



வவுனியா யூனியன் அஷ்யூரன்ஸ் ஆயுட் காப்புறுதி நிறுவனத்தில் கடந்த 20வருடமாக பணியாற்றி பணியாளர் கணபதிப்பிளை கோகிலன் 20வருட சேவையை முன்னிட்டு வடகிழக்கு தலைமை விற்பனை அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். கடந்த 20வருடத்துக்கு முன்னர் அலுவலக உதவியாளராக பணிக்கு நியமிக்கப்பட்டு தற்போது 11 ஆவது உயர் பதவியை அவர் பெற்றுள்ளார். (ஐ)







இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் சிறப்புச் செயற்குழுவினர் திருகோணமலை குமரபுரம் பகுதிக்கு நேரில் சென்று அங்கு தாய் அல்லது தந்தையை இழந்த 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (ஐ)



பனை அபிவிருத்திச் சபையில் சிறப்பு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பனை சார் உற்பத்தி பயனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியிலும், அம்பாறையிலும் அண்மையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி நிகழ்வில் 102 பயனாளிகளும், அம்பாறை நிகழ்வில் 27 பயனாளிகளும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வுகளில் சபையின் பொது முகாமையாளர் பா.சுதாகரன், உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் என்.நவநந்தன், நிதி முகாமையாளர் வி.பி.தேவராஜா, விரிவாக்கல் முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஆ.கௌசிதரன் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது எதிரணியில் எவருமே இணையார்

கொழும்பு, ஜூலை9
அரசில் இருந்து 18 பேர் பொது எதிரணியில் இணையவுள்ளதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி ராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன தெரிவித்தார். அவ்வாறு இடம்பெற்றால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபட்டு தொடர்ந்து எதிர்க்கட்சியில் இருக்கவேண்டிய நிலையே ஏற்படும். அதற்கு இடமளிக்க முடியாது எனவும் அவர் கூறினார். (த)

## புதிய அரசமைப்பை கொண்டு வருவதில் தவறேதும் இல்லை

### கூறுகின்றார் கிழக்கு ஆளுநர்

கொழும்பு, ஜூலை 9
மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதில் எவ்வித தவறும் இல்லையெனக் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார். அத்தோடு, காணாமற்போனோர் தொடர்பான சட்டத்தையும் நிறைவேற்ற முடியுமெனக் குறிப்பிட்ட அவர், மக்களின் கருத்துக்களை அறிந்துகொண்ட பின்னரே குறித்த சட்டவரைவைச் செயற்படுத்த வேண்டுமெனவும் கூறினார். மூன்று தசாப்த காலப் போரின் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தையும் நீடித்த சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு, நல்லாட்சி அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (த)

**விநியோக (Sales) வாகனம் வாடகைக்குண்டு**
சாரதியுடன் விநியோக (Sales) வாகனம் வாடகைக்கு உண்டு.
Tata Super AC (Full Body)
077 925 4050, 077 958 8558

**ஆட்டோ, பியானோ விற்பனைக்கு**
எம்மிடம் நல்ல நிலையிலுள்ள 203 - XXXX இலக்க ஆட்டோவும், பியானோவும் விற்பனைக்குண்டு.
077 711 5453

**விற்பனைக்கு**
40Cose Power Motor Prm - 1 Stoner பெரிது - 1
077 375 5630

**காணி விற்பனைக்கு**
தெற்கு மானிப்பாய் லோட்டன் வீதி (புளியடிச்சந்தை ஒழுங்கை)யில் உள்ள 6 பரப்புக் காணி மின்சாரம், கிணறு, சுற்றுமதில் வசதியுடன் வியாபாரத் துக்கோ, வீடு கட்டவோ விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.
(பரப்பு 8 இலட்சம்)
076 804 5556

**சொர்க்கம் திருமணசேவை**
கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய செவ்வாய் குற்றம் இல்லாத மணமகனுக்கு அழகான யாழ்.இந்து மணமகளைத் தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 41 வயது மணமகனுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 29 வயதுடைய வங்கியில் பணிபுரியும் றோமன் கத்தோலிக்க மணமகனுக்கு அழகான படித்த மணமகளைத் தேடுகின்றோம்.
T.P& Viver
00141 6666 1855, 00164 7504 3336

**மணமகள் தேவை**
நீர்கொழும்பு - யாழ்ப்பாணம் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் 1973 இல் பிறந்த கன்னிராசி - உத்தர நட்சத்திர லண்டன் சிற்றிசன் மகனுக்கு நற்குடும்பத்தைச் சேர்ந்த படித்த, அழகிய (32 -39 வயதிற்குட்பட்ட) மணமகளை எதிர்பார்க்கின்றனர். (மணமகன் ஆகஸ்டில் இலங்கை வரவுள்ளார்.)
தொடர்பு:
077 815 4858/ 031 222 7552

**அலுவலக வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணம், கொக்குவிலில் அமைந்துள்ள கணக்காய்வு நிறுவனத்தில் (Audit Firm) இணைந்து பணியாற்ற கணக்குத்துறையில் அனுபவமுள்ள கணக்காய்வு முகாமையாளர் (Audit Manager) தேவை. ஓய்வுநிலையிலுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
அனுபவ விவரக்குறிப்பு (Curriculum Vitae) அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் :
viravindran@gmail.com

**ஐரோப்பிய STUDENT விசா**
*Medicine *Engineering *Business Management
* Language Studies * Hospitality & Tourism
*IT & many more...
- NO Need IELTS
- NO Age Limit
- NO Need Sponsor
- No Need Bank Balance

2017 September Intake now on

Contact : EURO UNI
No. 44, Vajira Road, Colombo - 04
email : eurounilk@gmail.com
Phone - 077 4796 483

**பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு**
Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.
(Jaffna Branch)
- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.
After Training Rs.60,000
→ Over seas travel
→ Vehicle Allowance
Training Period Rs. 30, 000
ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.



G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

**வேலை வாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.
- சுத்திகரிப்பாளர் - Labours
- பூந்தோட்ட பராமரிப்பாளர்கள் - Gardening Labours

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
021 222 5969/ 077 981 7617

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்

### கேள்விப்பத்திரம் கோரல்
### கட்டடங்களை இடித்தல் மற்றும் அகற்றுதல்

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள, இலங்கை திறந்த பல்கலைக்கழக, யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில், பயன்படுத்த முடியாத இரண்டு கட்டடங்களை இடித்தல் (இடிபாடுகளை அங்கிருந்து அகற்றுதல்) மற்றும் அகற்றப்படும் பொருள்களைக் கொள்வனவு செய்தல் (குறித்த இரண்டு கட்டடங்களையும் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்போருக்கு அடையாளம் காட்டுவார்) ஆகியவற்றுக்கு 2017 ஜூலை 14 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பணியில் கட்டடங்களின் அனைத்து இடிபாடுகளும், அதிலிருந்து அகற்றப்படுபனவும் முழுமையாக குறித்த பகுதியில் இருந்து எடுத்துச் செல்வதையும் உள்ளடக்குகிறது.

விசேட தேவைப்பாடுகள் மற்றும் கேள்விப்பத்திரங்கள் தொடர்பான விண்ணப்பங்களை யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, கொக்குவிலிலுள்ள, யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். குறித்த விண்ணப்பத்தில் கேள்விப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பவர், அங்கிருந்து அகற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்யவுள்ள விலையை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் நிலையானதாக இருக்க வேண்டும். 30 நாள்களுக்கு மீளப் பெற முடியாதிருத்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் நிராகரிக்கவும் அல்லது எவ்வித காரணமும் இன்றி எந்தவொரு கேள்விப்பத்திரதாரருக்கும் பல்கலைக்கழகத்தின் நன்மைகருதி குறித்த பணியை ஒப்படைக்க இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துக்கு உரிமை உள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக்குழுத் திணைக்களம்,**
**ஆதன நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**நாவல, நுகேகொட.**
09 ஜூலை 2017

## சிவபூமி பாடசாலை

### 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் புதிய மேல்மாடி கட்டட திறப்பு விழாவும்

அன்புடையீர் !

இறையருளாலும் உங்கள் அனைவரதும் நல்லாசியாலும் 14ஆம் ஆண்டில் எமது பாடசாலை காலடி எடுத்து வைத்துள்ளது. எமது பாடசாலையில் தொழிற்பயிற்சி பிரிவுக்கு அமரர் அருளானந்தம் நினைவான அவரது குடும்பத்தவர்களால் அருளானந்தம் நினைவு மண்டபம் கட்டப்பெற்று ஆண்டு விழாவில் திறந்து வைக்கப்பட்ட இறையருள் கைகூடியுள்ளது.

எமது பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட தாங்கள் அனைவரும் இவ் விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இடம் : சிவபூமி பாடசாலை கோண்டாவில்.**
**காலம் : 09.07.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி**

**நிகழ்ச்சி நிரல்**

**தலைவர்**
" செஞ்சொற்செல்வர் "
**கலாநிதி. ஆறு திருமுருகன்**
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**ஆசியுரை**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**
(நல்லை ஆதீனம்)

**பிரதம விருந்தினர்**
**செல்வி. றூபா அருளானந்தம்**
(தொழில் அதிபர் - லண்டன்)

**சிறப்பு விருந்தினர்**
**வைத்திய நிபுணர் சு.ரவிராஜ்**
(பீடாதிபதி, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்**
**வைத்திய நிபுணர் ந.சரவணபவன்**
(ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை)

**கலை நிகழ்ச்சிகள்**
**சிவபூமி பாடசாலை மாணவர்கள்**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இனங்களிடையேயான புரிந்துணர்வு

## அனுபவங்களையும் பாடங்களையும் கற்றறிந்துகொள்ளும் ப(பா)ணி

தென் ஆபிரிக்காவில் நிலவிய இனப்பாகுபாட்டை நீக்கிய அதே தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் இலங்கையில் நிலவும் இன முரண்பாடுகளையும் தீர்க்க முடியுமா என்பதான ஆய்வினை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை மேற்கொண்டமை குறித்து இவ்வாக்கம் நோக்குகின்றது.

உண்மையும் ஒப்புரவாதலும் என்ற தென் ஆபிரிக்க ஆணைக்குழு அங்கு நடந்ததான நிஜங்களைக் கற்றறிந்து இனங்களிடையே புரிந்து ணர்வைக் கட்டியெழுப்ப மேற்கொண்ட செயற்பாடுகளை ஒத்தவிதமாக இலங்கையிலும் அது சார்ந்த முன்முயற்சி களை மேற்கொள்வதற்கு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் மூன்று தமிழ் ஆயர்களும், நான்கு சிங்கள ஆயர்களும் தென் ஆபிரிக்காவுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டனர் என்பது பலரும் அறிந்திராத விடயமாகும்.



### ஆய்வுப் பயணம்

இந்த ஆய்வுப் பயணத்தில் யாழ். மறை மாவட்ட முன்னாள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,திருமலை மட்டுநகர் ஆயர் கின்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை,கண்டிஆயர்வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை,குருநாகல் ஆயர் கரல் அன்ரனி பெரரோ ஆண்டகை,அனுராதபுர ஆயர் நேபேட் அன்ராடி ஆண்டகை, பதுளை ஆயர் வின்ரன் பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோரும் அன்றைய இலங்கை செடேக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் ஜோர்ச் சிகாமணி அடிகளாரும் கலந்துகொண்டிருந்தனர்.

2011ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த ஆய்வுப் பயணம் இடம்ருபெற்றிருந்தது. தென்னாபிரிக்காவில் டாக்டர் நெல்சன் மண்டேலா, பேராயர் டெஸ்மன் டூட்டு போன்றோரின் அயராத கூட்டு முயற்சி கொண்டு அங்கு ஏற்படுத்தப்பட்டதான அமைதியையும் சமாதானத்தையும் இலங்கையிலும் ஏற்படுத்துவது குறித்தான ஓர் ஆய்வுக் கள முயற்சியாகவே அவர்களது பயணம் அமைந்திருந்தது எனலாம்.

தென் ஆபிரிக்காவில் நீண்ட காலமாக நிலவி வந்த வெள்ளையினத்தவர், கறுப்பினத்தவர் என்ற நிறப்பாகுபாட்டு ரீதியான பிரச்சினைகளுக்கு அங்குள்ள கத்தோலிக்கத் திருச்சபைகள் ஏனைய கிறிஸ்தவ சபைகளோடு இணைந்த விதமாக உருவாக்கிய செயற்திட்டத்தின் அடிப்படைகள் தீர்வை முன்வைத்தன. அங்கு அமைதியும் சமாதானமும் ஏற்படுத்தப்பட்டது. இதனடிப்படையிலே இலங்கையிலும் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணமுடியுமா..? என்ற விடயங்களைத் தர்க்க ரீதியிலே கற்றறிவதற்கு தென்னாபிரிக்காவுக்குபயணம் மேற்கொண்ட இலங்கை கத்தோலிக் ஆயர் பேரவையினர் ஜொகானஸ் பேக்,கேப்ரவுண்,டேர்பன் போன்ற தென்னாபிரிக்காவின் பிரதான நகரங்களுக்கு பயணத்தை மேற்கொண்டதுடன் இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த உழைத்த தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர். மேலும் இனப்பிரிவினையைச் சித்தரிக்கும் காட்சியகங்கள்,தேசிய நினைவுச் சின்னங்கள், உள்ளூர் நினைவுச் சின்னங்கள்,மக்கள் குடியிருப்புகள், பேராலயங்கள்-போன்ற இடங்களையும் தரிசித்து உண்மை நிலமைகளை நேரடியாகக் கற்றறிந்து கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொண்டனர்.

### ஆணைக்குழுவின் செயற்பாடுகள்

உண்மையும் ஒப்புரவாதலும் என்ற தென்னாபிரிக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அங்கு பிரதான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. இக்குழுவினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு ஒப்புரவின் வழி ஒற்றுமையை அடைய முழு நம்பிக்கையோடு செயற்பட்டனர். குறிப்பாக கிறிஸ்தவ, கத்தோலிக்க மதத்தில் பெரிதும் மதித்துப் பேணபப்படும் மன்னிப்பு,ஒப்புரவு என்ற விழுமியங்களை பயன்படுத்தினர். தென் ஆபிரிக்கா ஒரு கிறிஸ்தவ நாடு என்கின்ற வகையில் இந்த அணுகு முறைகள் சாதகமானதாகவும், வெற்றிகரமானதாகவும் அமைந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

உண்மையும் ஒப்புரவாதலும் என்ற தென்னாபிரிக்காவின் இந்த ஆணைக்குழுவானது தென்னாபிரிக்காவில் நடந்த நிஜங்களை கற்றறிந்து கொண்டது. நிலமைகளை ஆய்வு செய்து சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்தது. பிரச்சினைக்குரிய தரப்பினரை நேரடியாகச் சந்திக்க வைத்ததுடன் நடந்த சம்பவங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து அவர்கள் மனதில் தாம் நடந்துகொண்ட நிலமைகளை உணரவைத்தனர். அதன்வழி நடந்தவற்றை மன்னித்தும்,பழையவற்றை மறந்தும் மனதில் ஒப்புரவாகி நல்லுறவைக் கட்டியெழுப்ப உதவி புரிந்தனர். உளத்தூய்மை பெற்று அமைதியும், சமாதானமும், புரிந்துணர்வும் நிறைந்த ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கிட வழிசமைத்தனர்.



தென்னாபிரிக்காவில் மிக நீண்ட காலமாக நிலவி வந்த வெள்ளையர் கறுப்பினர் என்ற நிறப் பாகுபாட்டின் தீவிரத் தன்மைகளை மகாத்மா காந்தி தொடக்கம் டாக்டர் நெல்சன் மண்டேலா வரை பலரும் எதிர்த்து வந்துள்ளனர். இந்த எதிர்ப்புகளும் அதற்காக நடந்த போராட்டங்களும்,மக்கள் அனுபவித்த கஸ்ரங்களும்,எதிர்கொண்ட துன்ப துயரங்களும்,உள ஆழத்தில் பதிந்த வடுக்களையும்,மனதில் உருவாக்கிய வெறுப்புணர்வு மற்றும் பழிவாங்கும் எண்ணங்களையும் களைந்து உண்மையான புரிந்துணர்வையும், அன்புணர்வையும் ஒப்புரவின் வழியாக இனங்களிடையே கட்டியெழுப்ப தென்னாபிரிக்காவின் உண்மையும் ஒப்புரவாகுதலும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பெரிதும் உதவிபுரிந்துள்ளன எனலாம்.

### அறிக்கை

தென்னாபிரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினர் நிலைப்பாட்டு வெளியீட்டு அறிக்கையொன்றை வெளிப்படுத்தினர். அவ்வறிக்கையில் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.அந்த விடயங்களை இங்கு நோக்குவோம்.

### நம்பிக்கை

"இலங்கையில் உள்நாட்டுப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்தது. அமைதி ஏற்பட்டு நிலமைகள் வழமைக்குத் திரும்பின.மக்கள் சுதந்திரமாக நடமாடவும்,வன் செயல்கள் பற்றிய அச்சம் இன்றி வாழ்வை முன் நகர்த்துவதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. அத்தோடு நீதியோடு கூடிய நிரந்தர தீர்வுக்கும், இனங்களுக்கிடையேயான புரிந்து ணர்வுக்கும், கடந்தகால அனுபவங்களில் இருந்து விடுபட்டு நம்பிக்கையான வாழ்வைக் கட்டியெழுப்ப சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கைகளும் உருவானது.



போருக்குப் பின்பான காலப்பகுதியில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளாக சுற்றுலாத்துறை, வீதியமைப்பு,பாலங்கள் அமைத்தல் போன்ற விடயங்களை அரசு மேற்கொண்டது. அதேவேளை தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதிலும்,அரசியல் தீர்வொன்றை தேசியப் பிரச்சினைக்காக கண்டெடுப்பதிலும் வேகமும் விவேகமும் காட்டப்படவில்லை.ஆனாலும் ஜனநாயகம், நல்லாட்சி போன்ற விடயங்கள் இங்கு முன்னுரிமை ப்படுத்தப்பட்டன. வடக்கு கிழக்கின் இராணுவமயப்படுத்தல், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் இருந்துவந்த தயக்கம் என்பன வடக்கு கிழக்கு வாழ் மக்களின் மனங்களில் அச்சத்தையும்,பய உணர்வையும் ஏற்படுத்தியது.

அதேபோன்று ஊடக சுதந்திரத்துக்கு இருந்து வந்த கட்டுப்பாடுகள்,பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையை அனுமதிக்க மனமின்மை போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியன.தவிர போரின் இறுதிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதான மனிதஉரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுகள் என்பனவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தடைக்கற்களாகின.

### ஒருமைப்பாடு

இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையானது காயப்பட்ட உள்ளங்களைக் குணப்படுத்தப்படுவதில் கவனம் செலுத்தியது. குடிமக்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமான உரிமையுள்ள மனிதர்களாக பயமின்றியும், நம்பிக்கையீனம் இன்றியும் வாழும் நிலைகளை உருவாக்குவது குறித்து அதிக கவனத்தைச் செலுத்தியது.

சிங்களவர்களையும்,தமிழர்களையும் உள்ளடக்கியதாக கிறிஸ்தவ சமுகம் அமைந்திருப்பது திருச்சபைக்குக் கிடைத்த பெரு வாய்ப்பாக அமைந்திருந்தது.இந்த முக்கியத்துவமான காலகட்டத்தில் திருச்சபையானது தன்னை இன்னமும் ஆழமான பணிநிலைக்கு உட்படுத்த வேண்டும் என நினைக்கிறது. இங்கு பல முக்கியமான விடயங்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.இனங்களுக்கிடையேயான சிதறடிக்கப்பட்ட ஒற்றுமை குணப்படுத்தப்பட்டு நல்லிணக்கம் பெறவேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், கலாசாரம், மொழி, சமயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு இனத்தவரும் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றிய அறியாமை என்பன பற்றியெல்லாம் கற்றறிந்து கொள்ள வேண்டும். அவை எப்படி மக்களை பிரச்சினைக்குள் தள்ளுகிறது..? போருக்குப் பின்னான காலப்பகுதியில் அவற்றை எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றிக் கற்றறிந்து அவை பற்றியதான புரிந்துணர்வைப் பெற வேண்டிய தேவை எமக்கு உண்டு. எனவே பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டுகொண்டு அதனை சிறந்த முறையில் உள்வாங்கிக் கொள்ள வேறுநாடுகளின் அனுபவங்களையும் பாடங்களையும் கற்றுக்கொள்வது அவசியமாகிறது."

### இலங்கை குறித்தான ஆயர்களின் கருத்து வெளிப்பாடு

தென்னாபிரிக்க கத்தோலிக்க ஆயர் பேரவையுடன் டேர்பன் நகரில் நடந்த சந்திப்பில் ஒரு கர்தினால் உட்பட தென்னாபிரிக்கக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் 32 ஆயர்களும் கலந்துகொண்டு இலங்கை ஆயர்களை வரவேற்று இலங்கை நிலமை பற்றிய சுருக்க விளக்கத்தினை பகிருமாறு அழைத்தனர். இலங்கை ஆயர் குழுவினர் சார்பாக வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை இலங்கை நாட்டின் சரித்திரத்தையும் இன்றைய நிலையையும் முன்வைத்தார். அவர் தனதுரையில்,

"சுதந்திரம் பெறப்பட்ட 1948 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது என்ற உரிமைப்போராட்டம்,அதற்குத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கொடுத்த பதிலுரைகள்,கத்தோலிக்கப் பாடாசாலைகள் அரசுடமையாக்கப்பட்டமை,தனி சிங்கள மசோதா உருவாக்கப்பட்டமை, கத்தோலிக்கத் திருச்சபை அருட்சகோதரிகள் நாடுகடத்தப்பட்டமை என்பவற்றோடு தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான கசப்புணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படாமை போன்ற விடயங்கள் குறித்து விரிவாகக் குறிப்பிட்டார்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும்,மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் போரினால் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்தவர்கள் என்ற வகையில் மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களையும், இடப்பெயர்வுகளையும்,அழிவுகளையும் தமது தனிப்பட்ட அனுபவங்களிலிருந்து வெளிப்படுத்தினர்.

குறிப்பாக, "இலங்கை ஆயர்களுக்கிடையில் வேறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதும் அவர்கள் நாட்டைப் பிரித்தல் என்பதற்கு எதிராகவே இருந்தனர். எல்லா ஆயர்களும் இக்கருத்தில் ஒன்றித்திருந்தனர். ஆயர்கள் அரசை சந்தித்து அவர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் என்பதை தெரிவித்ததோடு தமிழீழ விடுதலைப் புலிகளையும் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்த தேடலில் அர்ப்பணிப்போடு ஈடுபடுமாறு அறிவுறுத்தினர்." என்ற விடயங்களைத் தெளிவுபடுத்தினர்.

### தென்னாபிரிக்க ஆயர்களின் பதிலுரை

இவ்விடயங்களைக் கேட்ட தென்னாபிரிக்க ஆயர்கள் தென்னாபிரிக்காவில் இடம்பெற்றதான செயன்முறைகளை எடுத்தியம்பினர். எவ்வாறு ஒன்றரை தசாப்தத்தின் பின்னர் உண்மைக்கும் ஒப்புரவுக்குமான ஆணைக்குழுவின் பங்களிப்பு அமைந்திருந்தது என்பது குறித்தும் அதில் பேராயர் டூட்டு வகித்த பணியாற்றுதல்கள் குறித்தும் விளக்கினார்.

தவிர, வெள்ளையர்களுக்கும் கறுப்பினத்தவர்களுக்கும் இடையில் இன்று அரசியல் சண்டைகள் இல்லை. ஒருவருக்கொருவர் அன்பாகவும் புரிந்துணர்வாகவும் செயற்படுகின்றனர்.இருப்பினும் திருச்சபை இன்னமும் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் உண்டு எனத் தெரிவித்தனர்.தமது செயற்றிட்டம்,கடந்த காலம், தரப்படவேண்டிய நீதி,ஒப்புரவு என்ற இரு விடயங்கள் குறித்தும் கருத்தில் கொள்வதாகத் தெரிவித்தனர். கடந்த காலத்தைப் பற்றி ஆய்வு செய்யாமலும், நடந்த உண்மைகளை தேடித் தவறுகளைத் திருத்திக் கொள்ளா மலும் ஒற்றுமையை நோக்கி நகரமுடியாது என்பதை தெளிவுறுத்தினர்."

ஆக,இந்தப் பின்னணியின் அடிப்படையிலே இலங்கையில் நடந்து முடிந்த நீண்டகாலப் போரின் பின்னர் அமைதி ஏற்பட்டுள்ளது.எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வை நிரந்தரமாகக் கண்டடையலாம் என்பது பற்றிக் கற்றறிந்து கொள்ளத் தென்னாபிரிக்க அனுபவம் துணைபுரியும். அது குறித்தான வழிமுறைகளைத் தேடுகின்ற கத்தோலிக்க ஆயர் பேரவையானது இனப்பிரச்சினைக்கான தீர்வில் தன் பங்களிப்பை இலைமறைகாயாக இருந்துகொண்டு எப்போதும் வழங்கும். வழங்கிக்கொண்டே வந்திருக்கிறது இதில் எந்த ஐயப்பாடுகளும் இல்லை. இனங்களிடையேயான புரிந்துணர்வை மேம்படுத்திக்கொள்ள அனுபவங்களையும், பாடங்களையும் கற்றறிந்து கொண்டு அதன் வழி பணி செய்தல் என்பது இன்றைய கால கட்டத்தில் அவசியமாகிறது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயபூபதி நாகராசா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபூபதி நாகராசா 08.07.2017 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - மனோன்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அரசரட்ணம், தர்மரட்ணம் மற்றும் சீவரட்ணம், கமலபூபதி, இராசபூபதி, செல்வபூபதி, பாலரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணி, பூலோகராசா, மகேஸ்வரி, சாந்தறூபி, மாலினி, இராதாகிருஷ்ணன், இரவீந்திரகுமார், கமலேந்திரன், ஜெயரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெயமோகன், ஜெயரூபி, சுகந்தினி, ஜெயப்பிரியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபேசன், சுபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலக்சன், ஜினோசன், கிருசயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.07.2017 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் -
மல்லாகம். குடும்பத்தினர்.

**077 038 2966**

## மரண அறிவித்தல்கள்

### சீனியப்பா சண்முகம்பிள்ளை
**(நவரட்ணம் மாஸ்டர் - ஓய்வுபெற்ற ஆசிரியர்)**



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனியப்பா சண்முகம்பிள்ளை (நவரட்ணம் மாஸ்டர் - ஓய்வுபெற்ற ஆசிரியர்) 07.07.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியப்பா - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், இராஜரட்ணம், காலஞ்சென்ற செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்னேஸ்வரன், திருமதி விஜயலட்சுமி, சிவனேஸ்வரன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று புன்னாலைக்கட்டுவன் வடக்கு பிள்ளையங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் -
G.G.பொன்னம்பலம் வீதி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.
ச.விக்னேஸ்வரன்
(மகன்)

### சரவணமுத்து சுப்பிரமணியம்
**(ஓய்வுநிலை அஞ்சலர் கோப்பாய்)**



மலர்வு 13.12.1933 உதிர்வு 07.07.2017

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் 07.07.2017 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களனா சரவணமுத்து அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பூரணம் தம்பதியரின் அன்பு மரு மக னும், சத்தியபவாணி, அமிர்தினி, குகானந்தன், கிருபானந்தன், லோஜினி, கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜன், சிவேந்திரன், மாலினி, பவானி, கோபிராஜ், சிவரமணன் ஆகியோரின் மாமனும், பிரசன்யா, மலரவன், சஷ்வினி, கிருஷோத், பவீஷன், பவிஷனா, ரதுஷன், ரதுமிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசமணி, இராசதுரை, தெய்வானைப்பிள்ளை மற்றும் இரத்தினம், சரஸ்வதி, இராசநாயகம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்ளான பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், மகாதேன், மகேந்திரன், ராஜசேகரம் மற்றும் சிவகுமார், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (10.07.2017) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
தகவல்: குடும்பத்தினர்.

**077 453 3608**

### அந்தோனி வஸ்தியாம்பிள்ளை



இத்தாவில், பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி வஸ்தியாம்பிள்ளை 07.07.2017 வெள்ளிக் கிழமை காலமானார்.


அன்னார் மரியம்மாவின் அன்புக் கணவரும், றொபேட், றெசில்டா, ஜோர்ஜ், ஜெசில்டா, எட்வேட், நோபேட், காலஞ்சென்ற கெனடி ஆகி யோரின் அன்புத் தந்தையும், மேர்லூட்ஸ், இராயப்பு, அசாந்தினி, அல்பிரட், சைலஜா, பெல்சியா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சினி, நிவேதிக்கா, கிசோ, தினேஸ்ராஜ், ரிசானி, நிதுஜினி, மக்சியா, அனஸ்கர், பெலிக்ஸ், டொறி, டிவோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இத்தாவில் புனித பார்பரர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பின்னர் இத்தாவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**இத்தாவில் - 077 984 8786, பளை - 077 272 7745**



பிறப்பு 19 . 09 . 1951
இறப்பு 04 . 07 . 2017

### கந்தையா கதிர்காமலிங்கம்
(Colombo High Court Steno Grapher)

நயினாதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கதிர்காமலிங்கம் 04.07.2017 செவ்வாய்க்கிழமை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பிகை அரன் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சௌந்தரம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், மதுரைலிங்கம் - விஜயகுலராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் மாலினி (ஓய்வுபெற்ற ஆசிரியை கொ/ விவேகானந்தா கல்லூரி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், கிஷோராகுலின் பாசமிகு தந்தையும், அன்னசோதி, செல்வராணி, செல்வராசா, செல்வமலர், காலஞ்சென்ற சிவமணி, உலகநாயகி, புண்ணியலிங்கம், நவரெட்ணராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம், காலஞ்சென்ற சந்திரசேகரம், லங்காதேவி, மகேந்திரராசா, சத்தியபாலன், செல்வரட்ணம், குணேந்திரா, யோகேஸ்வரி, மைதிலி, மஞ்சுகா, மதிவதனா, கேதிஸ்வரன், விஜி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சங்கரன், அம்பிகைபாகன், ரோஹான் ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்: M.சிவசண்முகராசா

**077 107 9752**

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதன் சாந்தகுமார் (சாந்தன்)
**(ஆசிரியர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி)**



கந்தரோடை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் சாந்தகுமார் 07.07.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் (மணியம்) - சந்திராதேவி (வவா) தம்பதிகளின் அன்பு மகனும், செல்வநாதன் - நாகராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வரஞ்சனியின் அன்புக் கணவரும், ஹரணி, பிரதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிக்குமாரின் (பிரான்ஸ்) அன்பு சகோதரரும், மைதிலி (பிரான்ஸ்), செல்வதாசன், செல்வசாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.
தகவல்:- குடும்பத்தினர்.

**0213735498**

### நவாலி...

அறிவிக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு வலிகாமத்தில் அரச படைகளது முன்னேறிப் பாய்ச்சலில் படை நடவடிக்கையால் இடம் பெயர்ந்து நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி சிறி கதிர்காம முருகன் ஆலய சூழலிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருந்தனர். அவர்கள் மீது 1995 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 9ஆம் திகதி இலங்கை வான் படையின் புக்காரா போர் விமானங்களின் மூலம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதல் காரணமாக தேவாலயத்தில் தங்கியிருந்த 147 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தனர். 360ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்தனர். இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்று இன்று 22 ஆண்டுகள் நிறைவடை கின்றன. 22ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று காலை 6 மணியளவில் பங்குத் தந்தை றோய் பேடினன் தலைமையில் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளுடன் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 5.30 மணியளவில் நவாலி சிறி கதிர்காம (சின்னகதிர்காம) முருகன் ஆலயத்திலும் ஆலய முதன்மைக்குரு சிவஸ்ரீ மாரிமுத்து பத்மநாதன் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. நவாலியில் அமைக்கப்பட்டுள்ள நவாலி வடக்கு புலவர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவு சின்னங்களிலும் "ஒளித் தீபம்" ஏற்றி உறவுகளால் நினைவு கூரப்படும்.

இதேவேளை மறைந்தவர்கள் ஞாபகார்த்தமாக இன்று நவாலியில் குருதிக் கொடை நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குண்டுத் தாக்குதலில் மறைந்த கிராம அலுவலர் ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்தமாக பாடசாலை வறிய மாணவர்கள் 50 பேருக்கு ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தால் கல்வி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (வ-21-50)

### எமது...

வோம். நாம் விலகிய பின்னர் அல்லது எம்மை வெளியேற்றிய பின்னர் அரசமைப்பு உருவாக்கத்தை மேற்கொள்ளலாம் என்று அரசு பகல் கனவு காணக்கூடாது. இவ்வாறு மகிந்த அணி எச்சரித்துள்ளது. மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்கதேரர்கள் கூறியுள்ளனர். அரசு அதனையும் மீறியும் செயற்படுத்துவதாக இருந்தால், எமது யோசனைகளை இடைக்கால அறிக்கையில் உள்வாங்க வேண்டும். 14 விடயங்களை முன்னிறுத்தி எமதுயோசனை வரைவைச் சமர்ப்பித்துள்ளோம். ஒற்றை ஆட்சி முறைமை தொடர வேண்டும். அதில் எந்த மாற்றமும் செய்யப்படக் கூடாது.

எமது யோசனைகளைக் குப்பைத் தொட்டிக்குள் அரசு போடுமாக இருந்தால், வழிநடத்தல் குழுவிலிருந்து நாம் வெளியேறுவோம். வழிநடத்தல் குழுவிலிருந்து நாம் விலகிய பின்னர் அரசமைப்பு முயற்சிகளை முன்னெடுக்கலாம் என்று அரசு பகல் கனவு காணக் கூடாது. மக்களை அணி திரட்டி நாம் போராட்டம் நடத்துவோம் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாவை...

கோத்தபாய ராஜபக்ச உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் என்று அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். களனியில் நேற்று இடம்பெற்ற மத வழிபாட்டு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மோசடிகள் புரிந்திருந்தால் கொலைகள் செய்திருந்தால்நிதி மோசடி செய்திருந்தால் அவ்வாறான வர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

அவ்வாறானவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். அந்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் எமக்கு மக்கள் வாக்களித்தனர்.

மக்களின் விருப்பத்தை அவர்கள் வழங்கிய வாக்குறுதியை நாம் நிறைவேற்று வதற்கு முற்படுகிறோம். அந்த வகையில் மேற்படி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள கோத்தபாய நிச்சயம் கைது செய்யப்பட வேண்டும் சிறையில் அடைக்கப்படவேண்டும்.

மகிந்த குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப் பொலிஸ் மற்றும் அரசியல் என பலதுறைகளில் உள்ள சிலர் முயற்சி செய்வதை நாம் அறிவோம். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். காணாமற்போனோர் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. போர்க் காலத்தில் இன.மத பேதங்களுக்கு அப்பால் அதிகமானவர்கள் காணாமற்போனார்கள். படையினரும் ஆயிரக்கணக்கில் காணாமற்போயுள்ளனர். அவர்களைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் இந்தச் சட்டவரைவு. படையினரைத் தண்டிப்பதற்காக அல்ல.

சுனாமியால்கூட மக்கள் காணாமற்போனார்கள். இந்தச் சட்டவரைவு ஊடாக அவர்களின் உறவினர்களுக்கும் நிவாரணம் கிடைக்கும். இந்தச் சட்டவரைவினால் படையினருக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாது. வெள்ளை வான்களின் மூலம் கடத்தல்களில் ஈடுபட்ட கோத்தபாயவின் ஆள்களுத்தான் இதனால் பயம் ஏற்பட்டுள்ளது - என்றார்.

(த-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

09.07.2017



### திருமதி இராஜநாயகி திருச்செந்தில்நாதன்

(நிர்வாக உத்தியோகத்தர்
தெல்லிப்பழை பிரதேச செயலகம்)

ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு கதிரவேற்பிள்ளை



புலோலி மேற்கு, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா, சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கதிரவேற்பிள்ளை 05.07.2017 புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - நாகம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும், சிதம்பரப்பிள்ளை - இராசரத்தினம் தம்பதிகளின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், சிவஞானாம்பிகையின் அன்புச் சகோதரரும், சிதம்பரநாதனின் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மைத்துனரும், தமிழ்ச்செல்வி (ஆஸ்திரேலியா),மோஷேதயான் (நோர்வே), முரசொலி மாறன் (கனடா), கனிமொழி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விசாகுலன், நந்தகுமார், விஜி, தயாவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவி, ஜானவி, ஸ்ரெபி, பிறிட்ஜெஸ், ஹரினி, ஷாருதி, சந்தோஷி, குழலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆஸ்திரேலியாவில் உள்ள காடியன் மலர்ச்சாலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

தகவல்:-
சி.சிவஞானாம்பிகை (சகோதரி)

**076 426 8663**

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி தவயோகநாதன்



தோற்றம் 27.09.1958
மறைவு 07.07.2017

ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி தவயோகநாதன் நேற்று முன்தினம் (07.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - பாலஞானமணி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் தவயோகநாதனின் பாசமிகு மனைவியும் நந்தனின் (சிவசங்கரி அகம், ஆவரங்கால்) பாசமிகு சிறிய தாயும் கவிதா (ஜேர்மனி), சத்தியசீலன், சிவசீலன், வனிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் தவராணி, றொபின்சன் (ஜேர்மனி), சிவநிதி, உமா, தர்மசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் நாகேஸ்வரி (கனடா), சகுந்தலேஸ்வரி, பாலச்சந்திரன் (லண்டன்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), செல்வச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் நடராசா (கனடா), பாலச்சந்திரன், வதனி (லண்டன்), சிவதர்சினி (பிரான்ஸ்), கிருஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திவ்வியன், அர்ஷா, அர்ஷாந், அக்ஷா, பானுஷா, கபிசன், பாசறைவாணன், சாலுசன், சாருஜன், ரபீனா, ஆடேஸ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்காலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று நாளை மறுதினம் (11.07.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 3041 2861

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் ரஞ்சித்குமார்



சிறுப்பிட்டி மேற்கு,நீர்வேலியை பிறப்பிடமாகவும், லண்டன் (Klalthamstow) வோல்தம்ஸ்ரௌவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ரஞ்சித்குமார் கடந்த (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வான் இரத்தினம்- சந்திரா தம்பதியரின் ஏகபுத்திரனும் லிங்கம் - விஜிதா(இத்தாலி) அவர்களின் அன்புச்சகோதரனும் சிங்கராசா சறோஜாதேவி தம்பதியரின் மருமகனும் றஜிதா அவர்களின் அன்புக் கணவரும் அக்ஷயா, அஸ்விகன்(இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற ஆழ்வான் - இளையபிள்ளை அவர்களின் செல்லப் பேரனும் காலஞ்சென்ற ஆழ்வான் நவராஜா மற்றும் சின்னராசா, மகேந்திரம் (சுவிஸ்), ஜீவரத்தினம் ஆகியோரின் அன்பு பெறாமகனும் இலட்சுமி, பூமணி, பாக்கியம், சின்னம்மா, திரவியம், நல்லதம்பி, தவராசா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில்நாளை(10.07.2017) திங்கட்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

### பூலோகசிங்கம் கொன்ஸ்ரன்ரையின் (S.P.ராஜன்)




கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூலோகசிங்கம் கொன்ஸ்ரன்ரையின் (S.P.ராஜன்) 06.07.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (08.07.2017) சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 03. ஹதிற்றல் லேன்.
மடத்தடி. யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



### அருள்மொழி வள்ளல், யாழ்ரத்னா
### கல்வயலூர் ஆர்.வீ கந்தசுவாமி J.P

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான ஓய்வுபெற்ற கால்நடை வைத்தியரும் போதனாசிரியருமான திரு. ஆர்.வீ கந்தசுவாமி அவர்கள் 07.07.2017 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் யோகபாக்கியம் (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் சிவப்பிரகாசம், நாகம்மா, காலஞ்சென்ற கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி, இராமநாதன், சுந்தரலிங்கம், துரைசிங்கம், சந்தானலஷ்மி ஆகியோரின் மூத்த சகோதரரும், கலா (Interpreter - Swiss) யோகா (Registered Nurse - Scarborough Centenary Hospital Canada), கேதீஸ், தயா (Finance and admin Manager I.C.R.€ - Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெனாத்தோ - Swiss, மனோகரன் - Canada, Dr. கென்னத் - Consultant Physician General Hospital Trinco ஆகியோரின் மாமனாரும், துஷான்ா, ஷாயினா, அஷானா, றொஷானா, நிகேஷ், சஹானா ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 10.07.2017 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
Dr. கென்னத்
19, அருத்துசா லேன்,வெள்ளவத்தை
0112363425

தொடர்புக்கு
கலா றெனாத்தோ - 0041779938441
மனோ யோகா - 0016475027562
தயா கென்னத் - 0773747660

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SUPER BALL**

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 673
சீட்டிழுப்பு திகதி 08.07.2017 சனிக்கிழமை

F 06 14 38 48

சுப்பர் ஜக்பொட் ரூ. 51,485, 632/=
வெல்லப்படவில்லை

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 15 29 52 65

ஊதா நிறடிக்கட்டுகள் 10.07.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500 5500. 9000

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா. குளிசை. கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**

பதிவு இல : 16168
077 2106 155
221. நாவலர் றோட். யாழ்ப்பாணம்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2900 திகதி 08.07.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 05 13 51 71 Y
போனஸ் இல. 27
திங்கட் கிழமை ஜக்பொட் 30, 254, 815/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 17 31 36 46

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.07.10 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

www.dlb.lk
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## யாழ். அம்மா பெண்கள் விடுதி

இல.49 ,நாவலர் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இவ் விடுதியில் கல்விகற்கும் மற்றும் தொழில் புரியும் பெண்களுக்கு சகலவசதிகளுடன் கூடிய அறைகள் (உணவுடன்) மாதவாடகைக்கு விடப்படும்.

**தொடர்புகளுக்கு.076 919 8259,076 920 1153**

## வேலையாள்கள் தேவை

கைதடியில் இயங்கும் மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள
காசாளர் (பெண்)
விற்பனையாளர் (ஆண்) தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்புகளுக்கு.075 617 8761**

## ENGLISH CLASSES

- SPOKEN ENGLISH
- GRAMMAR
- IELTS (ACADEMIC & GENERAL)

**அனுபவம் பெற்ற ஆசிரியரால் தனிப்பட்ட கவனத்துடன் கற்பிக்கப்படும்.**

**Telephone Number: 077 024 8951**

## கேரள மலையாள மந்திர சக்தி Will Power

மலையாள மந்திர சக்தி மூலம் 105 அதிஸ்ட சக்கரம் அணிந்தால் அதிஸ்ட வாழ்க்கையும் திருப்தியான சூழ்நிலைகளையும் பெறும் புகழையும் தரும். இது மட்டுமா சொத்து சேரும் நல்ல சந்ததி உண்டாகும் ஒருவருக்கு முன் வினை பாவ வினை கரும வினை சகலதும் அக்கினி குண்டல பூசைக்கு பின் தோசங்கள் நீங்கி சொத்து குவியல் அச்சரங்கள் அனுக்கிரகம் தரும்.
வெளிநாட்டவர்களுக்கு ஈர்ப்பு சக்தி மந்திரம்
கடந்த 53 வருடங்களாக தொண்டு தொட்டு கேரள மலையாள சித்தி பெற்று அன்பர்களுக்கு மிக நேர்மையான சேவை செய்கிறேன். வெளிநாட்டவர்களுக்கு அதிவிசேட உச்சாட்டங்கள் உண்டு. இன்னும் குடிபோதை அகல கல்வி கடாச்சம் பெற மனையில் திடீர் அதிஸ்டம் பெற தடைப்பட்ட திருமணம் கைகூட இன்னும் நிறை குறைகளுக்கு என்னை வந்து சந்திக்கவும்.

ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம் மலையாள மாந்திரீக உச்சாடபீடம்
Management - P.K. Samy Associate (Pvt) Ltd
தலைமை காரியாலயம் கொழும்பு.
23, மேபீல்ட் றோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
011 234 2483, 011 234 2464, 011 247 0615 Fax : 011 2344831
Email : @gmail.com

கிளைக்காரியாலயம் - நுவரெலியா
33, கண்டி றோட், திரைச்சந்தை கட்டடம், நுவரெலியா.

## நுரையீரல் பாதிப்பிலிருந்து விடுபடுங்கள்

இருமல், இழுப்பு நோய், மார்பு இறுக்கம், சுவாசக்குறைபாடு ஆகியன சுவாசத்தொகுதியின் செயற்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி, இழுப்பு நோய், சயரோகம், நிமோனியா, நுரையீரல் புற்றுநோய் என்பன சுவாசம் இழப்பு தொடர்பான நோய்களுக்கு வழிவகுக்கும்.

எமது உன்னதமான ஆயுர்வேத மருந்தானது சுவாசப்பாதையின் சளியை அகற்றுவதன் மூலம் சுவாசத்தை இலகுபடுத்தும். வைரஸ் மற்றும் பக்டீரியா தொற்று நோய்களிலிருந்து குணப்படுத்துவதும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**Hotline: 0777555600
0777708310
0777708330**



FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA. BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## இலங்கையில் முதல் தடவையாக

பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி
பயிற்சிகள் + சேவைகள்

Olialakan Studio - British College of Beauty Studies
வழங்கும்.

அழகுக்கலை, தையற்கலை, சிங்களம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

- Diploma in Beauty Culture
- Diploma in Advance Beauty Theraphy
- Diploma in Advance Makeup

Other Diplomas

- Diploma in Tailoring
- Diploma in Singalam

குறிப்பு :
அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கு இணையும் அனைவருக்கும் நிரந்தர நிகம் எவ்வாறு செய்வது என்பது (Acrylic Nail) பயிற்சி முடிவில் பயிற்சியளிக்கப்படும்.

3D, HD, Airbrush, Comeaflage, Makeup கள் இன்னும் பல Makeup பெக்கச் மணப்பெண் அலங்காரத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

**British College of Beauty Studies**
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
076 701 1645

## ஆர்தரைடிஸ்!!! (Arthritis)

கார்டிலேஜ் தேய்வடைதல் தேய்வடைவதால் ஏற்படும் வலி மற்றும் மூட்டு வலிகளுக்கு!!!




**Baraka**
ஆரோக்கியமான வாழ்க்கை, நாளாந்தம்

கருஞ்சீரகத்தின் பரிபூரண நற்குணங்களுடன்...

**Jointsafe**

இயற்கை *Glucosamine* மற்றும் கருஞ்சீரகம் அடங்கியது

தினமும் 3 வில்லைகள் வீதம் ஏனைய மருந்துகளுடன் பாவிக்கலாம்
30s - Rs. 435/- | 60s - Rs. 680/-
Hotline: 0117772277
www.baraka.lk

- தேய்ந்துபோன கார்டிலேஜினை (Cartilage) மீளமைக்கும்.
- மூட்டுக்களின் அசைவை இலகுவாக்கும்.
- மூட்டு வலிகளுக்கு நிவாரணம் தரும்.

Fair Choice

## மகாநாயக்க...

அம்பலாங்கொடைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆட்சி பொறிமுறைமை உள்ளிட்ட நாட்டின் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பீடங்களின் மாநாயக்க தேரர்கள், நடுநிலையான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது.
புதிய அரசமைப்பு ஊடாகப் பௌத்த மதத்துக்கு உரிய இடம் வழங்கப்படும். மகாநாயக்க தேரர்கள் ஒரு பக்கச்சார்பாகக் கருத்து வெளியிடுவது பொருத்தமாக அமையாது என்றார். (த-5)

## காணவில்லை

பால் கறக்கும் பசுமாடு (3 மாதகன்றுஉண்டு) நிறம் இளம் சிவப்பு கட்டை கொம்பு இனம் யேசி (மூக்கு நாணயமும் (நீலம்) கழுத்து (வெள்ளை) கயிறும் உண்டு) கொக்குவில் தலையாழி பகுதியில் இருந்து 29.06.2017 வியாழன் பின் இரவு முதல் காணவில்லை. பதிவு இல . 42/1128

**தொடர்பு.077 0687 328**

## தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரும், வர்ணபூச்சாளரும் (பெயின்ரர்) தேவை.

**தொடர்பு.077592 5371,076316 5730**

## தேவை

Multi Trade Product - சந்தைப்படுத்தலுக்கு Sales Rep தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. **அழையுங்கள்.0777033494**

## வேலைவாய்ப்பு-T.O/QS

வடபகுதியிலுள்ள கட்டட நிர்மாண வேலைத்தளங்களிற்கு Technical officers, QS போன்றோர் உடன்தேவை.

**தொடர்புகளுக்கு.077 344 4801**

## புறாக்கள் விற்பனைக்கு

கறணம், பாகிஸ்தான் றைசர், 22 புறாக்களுடன் புதிய கூடும் விற்பனைக்கு உண்டு. ரூபா 26000/-

**தொடர்புகளுக்கு.075 0919267**

## கட்டட இடிபாடு விற்பனைக்கு

தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் பகுதிகளில் கட்டட இடிபாடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகதக்கு.077 344 4801**

## வீடு விற்பனைக்குண்டு

3 அறைகள், சமையலறை, கிணறு உள்ளிட்ட வசதிகளுடன், ஆஸ்பத்திரி வீதியில் (Greengrass Hotel) க்கு அருகில் ஒரு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு-077 867 7261**

## நாய்க்குட்டி விற்பனைக்கு

41/2 வயது றொட்பீலர் - ஆண்
1 1/2 வயது ஜேமன்சப்றேட் - ஆண்
41/2 வயது டாசன் - ஆண் | பெண்
72 நாள் றொட்பீலர் - பெண்குட்டி

**தொடர்பு-077 434 1551**

## Roast Chicken விற்பனைக்கு

1 Kg கோழி இறைச்சி - 390/- (பக்கற்றில் அடைக்கப்பட்டது) Roast Chicken (பொரித்த கோழி) -650/-
**127 , K.K.S றோட், யாழ்ப்பாணம்.(தபால் கந்தோர் முன்பாக) 0774546371**

## உடனடி வாடகைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி A9 வீதியில் 03 Phase மின்சார வசதியுடன் கூடிய 3,200 சதுர அடி உடைய Tile பதித்த கட்டிடம் ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு.

10 - 12 வாகனத் தரிப்பிடவசதி கடை, களஞ்சியசாலையாக பயன்படுத்தலாம்.

தொடர்புகளுக்கு
**0773 979 593**

SHIRDI Ads

## வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபை/ நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் பிரதான வீதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**070 236 3676**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

இவை தவிர்ந்த வேறு எந்தத் திருத்தங்களையும் அரசமைப்பில் மேற்கொள்ள முடியும் என்று அஸ்கிரிய பீடத்தின் முதன்மைச் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பிலும் பௌத்த பீடங்கள் முன்னாள் அரச தலைவர் மகிந்தவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பௌத்த தேரர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று நேற்று கண்டி மாலிகாத்தன்ன சிறி போதிசத்வா விகாரையில் இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய மெதகம தம்மானந்த தேரர் மேலும் கூறியவை வருமாறு;

உத்தேச அரசமைப்புக்கு எதிராக நாம் எதிர்ப்புத் தெரிவித்ததால் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்கள் மகிந்தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன. மகிந்தவை இனி யாரும் அதிகாரத்துக்குக் கொண்டு வர முடியாது என்பதை அறியாதவர்களே இவ்வாறு குற்றச்சாட்டுக் களை முன்வைக்கின்றனர்.

நாங்கள் கட்சி சார்ந்தவர்கள் அல்லர். அரசமைப்பில் ஏதாவது மாற்றம் செய்வதாக இருந்தால் யாராக இருந்தாலும் எம்மிடம் வந்தே ஆக வேண்டும். நாம் எமது நிலைப்பாட்டைக் கூறுவோம். அதற்காக எம்மை ஒரு பக்கச் சார்பான அமைப்பாகச் சித்திரிப்பது பிழை.

நாங்கள் அரசியல்வாதிகளின் பின்னால் போகின்றவர்கள் அல்லர். அவர்கள்தான் எங்களிடம் வருவர். உருவாக்கப்படவிருப்பது புதிய அரசமைப்பா அல்லது அரசமைப்புத் திருத்தமா என்று எமக்குத் தெளிவில்லை. புதிய அரசமைப்பை உருவாக்குவதாக இருந்தால் நாம் முன்வைக்கும் விடயங்கள் அதில் உள்வாங்கப்படவேண்டும்.

பௌத்த மத்துக்கான முன்னுரிமையை நீக்குதல், ஒற்றை ஆட்சியை நீக்குதல், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்காமல் புதிய அரசமைப்பை உருவாக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ முடியும். இவை தவிர ஏனையவற்றைத் திருத்தினாலும் பரவாயில்லை-என்றார். (த-3)

## கடற்படையின்...

குறிகாட்டுவான் இறங்குதுறையில் திரண்டனர். பாதுகாப்பு அங்கிகள் போதியளவு இல்லாத நிலையில் பாதுகாப்பு அங்கி அணியாதவர்கள் படகில் பயணிக்க முடியாது என்று கடற்படையினர் அனுமதி மறுத்தனர். கடற்படையின் இந்தக் கெடுபிடியால் தேர் உற்சவ நேரத்துக்கு செல்ல முடியாது மக்கள் மனக்கிலேசமடைந்தனர்.

"பாதுகாப்பு அங்கி இல்லை என்று கூறிக் கடற்படையினர் எம்மைத் தடுத்து வைத்தனர். ஆனால் நயினாதீவு விகாராதிபதியின் படகில் அளவுக்கு அதிகமானவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டதை நாம் பார்த்தோம்." என்று சம்பவ நேரம் அங்கிருந்த மக்கள் தெரிவித்தனர்.

வேலணைப் பிரதேச செயலர் அங்கு சென்று கடற்படையினருடன் பேசினார். கடற்பாதைப் படகில் மக்களை ஏற்றிச் செல்லுமாறு அவர் ஆலோசனை வழங்கினார். அதன்பின்னர் கடற்படையினர் பாதுகாப்பு அங்கி இல்லாமல் பொதுமக்களை கடற்பாதைப் படகில் ஏற்றிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படடது.

"பாதுகாப்பு அங்கி இல்லாமல் எவரும் படகில் பயணிக்க முடியாது என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்பு அங்கிகள் போதியளவு இல்லை. கடற்படையினர் அனுமதி மறுத்ததால் ஏராளமான பக்தர்கள் ஆலயத்துக்குச் செல்ல முடியாது ஒரு மணி நேரத்துக்கு மேலாகக் காத்திருந்தனர். பின்னர் கடற்பாதைப் படகின் ஊடாக அவர்களை நயினாதீவுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது." என்று வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-8-37)

## கிளி...

கப்படவேண்டிய நிதியை விடுவிக்க வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நாளை முதல் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களும் பணியாளர்களும் ஒன்றிணைந்து இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்தள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தில் உள்ள எமது சங்க நிதிகளை மீள வழங்குமாறும், பேரிணையத்தில் இருந்து கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தை விலக்கிவிடுமாறும் வலியுறுத்தி கடந்த 10.08.2016ஆம் திகதி பொதுச்சபையின் சிறப்புக் கூட்டத்தின் 4 ஆம் இலக்க தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த 19.08.2016 ஆம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வடமாகாண பேரிணையம் ஆகியவற்றுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 01.09. 2016 ,13.09.2016 மற்றும் 21.09.2016 ஆம்திகதிய கடிதங்கள் மூலம் நினைவூட்டப்பட்டது. கடந்த ஒரு வருடமாக எந்தவிதமான பதில்களையும் வழங்காத நிலையில் தற்போது கடந்த 5 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்கப்படாதுவிடில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது.

வடமாகாண பேரிணையத்தால் கடந்த 30ஆம் திகதி இடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் குறித்த பிரச்சினை தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரே தீர்வுகாண வேண்டும் என்றும் அவரிடம் இந்தப் பிரச்சினையை பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. ஆனால் 03.07.2017 ஆம் திகதிய உதவி கூட்டுறவு ஆணையாளரினால் எமக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் சங்கத்தின் பிரச்சினை தொடர்பாக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையம் தமக்கு எதனையும் தெரியப்படுத்தவில்லை என்றும் பேரிணையத்தில் இருந்து சங்கம் தாமாக விலகுவதாக இருந்தால் பொதுச்சபையின் தீர்மானத்துக்கமைவாக 90 நாட்களின் பின்னர் விலகலாம் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

அவ்வாறு எனின் தற்போது தெரிந்த இந்தச் சட்டம் ஏன் கடந்த ஒரு வருடமாக தெரியவில்லை என்கின்ற சந்தேகம் எம்மிடம் எழுகிறது. அதுமட்டுமல்ல கடந்த 4ஆம் திகதியிடப்பட்டு வடமாகாண கூட்டுறவு ஆணையாளரால் எமக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு சட்டங்களுக்கு அமைவாக பேரிணையத்தில் இருந்து ஒரு சங்கம் விலகுவதை அனுமதிக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் விலகலாம் எனவும் வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் விலகமுடியாது எனவும் குழப்பமான கருத்துகளை கூறியுள்ளனர். எனவே இவர்கள் மீது நம்பிக்கையில்லை என உணர்ந்த கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் எமது நிதிகள் கிடைக்கும் வரை தொடர் காலவரையறையற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்- என்றுள்ளது. (வ-21-35)

## மகிந்தவுக்கு...

செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவை ஒரு மாதத்துக்குள் கைது செய்யப் போவதாக நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினேன் என்று கோத்தபாய நேற்று முன் தினம் கண்டியில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

இது முற்றிலும் பொய். நான் ஒருபோதும் அப்படிக் கூறவில்லை. இந்தச் செய்தியைப் பார்த்ததும் நான் மிகவும் கவலையடைந்தேன். உடனே கோத்தபாயவுடன் தொடர்புகொண்டு விசாரித்தேன். அவரது குடும்பத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் இவ்வாறு கூறியதாகக் கூறினார்.

நான் ஒருபோதும் அப்படிக் கூறவில்லை. வீண் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக இவ்வாறு பொய்த் தகவல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என்று நான் அவரிடம் கூறினேன். கோத்தபாய பாதுகாப்புச் செயலாளராக இருந்து நாட்டுக்குப் பல சேவைகளைச் செய்துள்ளார். அவ்வாறான ஒருவரைச் சிறையில் அடைத்து சந்தோசமடையும் அளவுக்கு நாம் கீழ்தரமானவர்கள் அல்லர். எமது கட்சியில் அவ்வாறானவர்கள் இல்லை.

இவ்வாறான செய்திகளைப் பரப்பி மக்களைக் குழப்புவதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர் என்றே எனக்குப் படுகின்றது. மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் ஏவ்வாறான குற்றங்கள் செய்திருந்தாலும் அவர்கள் நாட்டுக்குச் செய்த சேவையைக் கருத்திற்கொண்டு அவர் களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்-என்றார். (த-3)

## பிறக்காத...

விடம், மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று முன்தினம் சந்தித்தார்.

தம்மைக் கைது செய்வதற்கு அரசு முற்படுவதாக அவர் மகாநாயக்க தேரர்களிடம் முறையிட்டுள்ளார். அத்துடன் அரசமைப்புத் தொடர்பிலும் பேசியுள்ளார். இதன்போது பதிலளித்த மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர், அரசமைப்புத் தொடர்பாகக் கூட்டு எதிரணியினர் வெளியிடும் எதிர்ப்புக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

'உத்தேச அரசமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எந்த அடிப்படையும் அற்றது. இது பிறக்காத குழந்தைக்குச் சோதிடம் பார்ப்பது போன்றது. அரசமைப்பு வரைவு உருவாக்கப்படாத நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவது அர்த்தமற்றது. நாடாளுமன்றத்தில் தினேஸ் குணவர்த்தன ஆவேசமாக ஆற்றும் உரைகளை நான் கவனித்து வருகிறேன். அதில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. நாங்கள் அரச தலைவரைச் சந்தித்து, சாதாரண மக்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு வலியுறுத்தியிருக்கிறோம். விலைவாசி அதிகரித்து மக்கள் சாப்பிட முடியாத நிலையில் இருக்கின்றனர் என்பதை தெரியப்படுத்தியிருக்கிறோம்' என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் பௌத்தமதத்தின் முக்கிய தேரர்கள் ஒன்று கூடி, புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மாவட்டச்...

ணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தீர்மானத்துக்கு அமைய 3 கட்டடங்களையும் உடனடியாக மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைப்பதே நேர்த்தியான செயல்பாடு. இந்த 3 கட்டடங்களில் ஒன்று என்னிடம் உள்ளதாக பதிவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவிடப்பட்டுள்ள கட்டடத்தில் ஒரேயொரு நாள் மட்டுமே பணியின் நிமித்தம் நான் தங்கிச் சென்றேன். அதன் பின்பு அந்தக் கட்டடத்திற்கும் எனக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. எனது பெயரில் உள்ள கட்டடத்தைத் தீர்மானத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகம் மீளப் பெற்றுக் கொள்ளும் செயல்பாட்டை மேற்கொள்ள முடியும், என்று மு.சந்திரகுமார் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் இருவரும் எஞ்சிய இரு கட்டடங்களையும் இன்னமும் தமது பாவனையில் வைத்துக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5-101)

## காணாமல்...

வும் இன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் பிரார்த்த னை முன்னெடுக்கப்படவுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை விடுவிக்க கோரி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை 140 நாள்களை எட்டியுள்ளது. (4-35)

## தேவாலய...

கள் அடித்து உடைக்கப்பட்டன. அத்துடன் மனுதாரர் தரப்பின் வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டதால் அங்கிருந்த உடைமைகள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்களைப் பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை என்றும் குற்றஞ்சாட்டப் படுகிறது.

இந்தச் சம்பவங்கள் கடந்த வியாழக்கிழமையும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்றுள்ளன.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரிய கரிசல் கிராமத்தில் முஸ்லிம் மக்களும் சிறிய கரிசல் கிராமத்தில் தமிழ் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். பெரியகரிசல் கிராமத்தில் ஒரு தேவாலயம் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது. அதற்கான காணி உறுதியும் உள்ளது. எனினும் இரு தரப்பினரும் அந்தக் காணிக்கு உரிமை கோரிவந்தனர்.

இது தொடர்பில் தேவாலயத்துக்குச் சார்பானவர்கள் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். தேவாலயக் காணிக்குரிய உறுதியும் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது. முஸ்லிம்கள் தரப்பில் சட்டரீதியான ஆவணம் மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனைப் பரிசீலித்த நீதிமன்று குறித்த காணி தேவாலயத்துக்கு உரியது என்று தீர்ப்பளித்தது. காணியைத் தேவாலயத்துக்கு வழங்குமாறும் அந்தப் பணியை நேரடியாகச் சென்று நிறைவேற்றுமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு மன்று கட்டளையிட்டிருந்தது.

அதன்படி கடந்த வியாழக்கிழமை முற்பகல் நீதிமன்றப் பதிவாளர் பொலிஸாருடன் சென்று காணிக்கு எல்லைப்படுத்திய பகுதியை உறுதிப்படுத்தினார். இதன்பின்னர் கற்றூண்கள் நடப்பட்டு முட்கம்பிகள் வரியப்பட்டு அது எல்லைப்படுத்தப்பட்டது.

அவ்வாறு எல்லைப்படுத்திய பின்னர் பதிவாளரும் பொலிஸாரும் அந்த இடத்திலிருந்து சென்ற சில நிமிடங்களில் அங்கு நடப்பட்ட கற்றூண்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

அது தொடர்பில் நீதிமன்றுக்கும் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. அன்று பிற்பகல் அந்த இடத்தில் 3 பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டனர். நேற்றுமுன்தினம் மதியம் எஞ்சியிருந்த கற்றூண்கள் நொறுக்கப்பட்டன. அங்கு கடமையிலிருந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்பாகக் கற்றூண்கள் நொறுக்கப்பட்டு, முட்கம்பிகள் அறுத்தெறியப்பட்டன என்றும் தொழுகையின் பின்னர் பள்ளிவாசலில் இருந்து சென்றவர்களே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று மனுதாரர்களான தேவாலயத் தரப்பினரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வழக்கை முன்னெடுத்திருந்த தேவாலயத் தரப்பினரைச் சேர்ந்த ஒருவரின் வீடு மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டது. அதனால் வீட்டிலிருந்த தொலைக்காட்சி, கட்டில் உள்ளிட்ட பல பொருள்கள் எரிந்து வீடு கரிப்பிடித்துள்ளது. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மனுதாரர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். சம்பவ இடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டு வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

கற்றூண்கள் உடைத்த குற்றச்சாட்டில் மனுதாரர் தரப்பினரால் ஒருவர் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். ஆயினும் அமைச்சர் ஒருவரின் வாகனம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவ்வாறு பிடித்துக் கொடுக்கப்பட்டவரை மீட்டுச் சென்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார். குறித்த பகுதியில் ஏற்பட்ட அசாதாரண நிலையை அடுத்து அந்த இடத்தில் மேலதிகமாகப் பொலிஸார் நிறுத்தப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று மாலை கலந்துரையாடல் இடம்பெற்றது. மன்னார் பொலிஸார் பக்கச் சார்பாக நடந்தமையே இந்தப் பிரச்சினை வளர்வதற்குக் காரணம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நீதிமன்றத் தீர்ப்பை மீறியவர்கள், சட்டத்தை மீறியவர்கள் அனைவரும் அரசியல் பாகுபாடின்றிக் கைது செய்யப்படுவர் என்றும், அதற்காகச் சிறப்புக் குழுவினர் அமர்த்தப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் வவுனியா பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் கலந்துரையாடலில் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-101)

## விபத்தில்...

ணித்தவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை மோதினார் என்று கூறப்படும் ஹைஏஸ் வான் சாரதி வானுடன் தப்பியோடிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் சுதாகரன் (வயது - 42) என்பவரே உயிரிழந்தார்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தின் குடமுறுட்டிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குறித்த வாகனம் தப்பியோடுவதைக் கண்ட சிலர் வாகனத்தை விரட்டிச் சென்றபோதும் வாகனம் வேகமாகத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூர்ச்சையற்றுச் சாலையில் கிடந்தவரை பூநகரி வைத்தியசாலை நோயாளர் காவு வண்டியில் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்திருந்தமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்தாவுக்கு கிடைத்தது தங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டு எறிதலில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. விபுலானந்தாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கிங்ஸ்லி றெஜினோல்ட் 13.05 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.சானுஜன் 12.55 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பா.ஆனந் 12.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

(ம-108)

## டயமன்ஸ், றேஞ்சர்ஸ், குறிஞ்சிக்குமரன் அணிகள் அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
நவிண்டில் கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.
கலைமதியின் கால்பந்தாட்ட மைதானத்தின் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்த காரணத்தால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது குறிஞ்சிக் குமரன்.
பிறிதொரு ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியை 2:0 என்று வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

(ம-108)



## கொக்குவில் இந்துவுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம்பாய்தலில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.பிரணவன் வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கம் வென்றார்.
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தலில் பி.பிரணவன் 4.45 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஜே.கலைக்குமரன் 4.28 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் கட்டையடம்பன் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ரஜிதன் 4.26 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினார்.

(ம-108)

## உயரப் பாய்ந்தது வேலணை மத்தி.

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வேலணை மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுபீஜன் வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வேலணை மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுபீஜன் 1.84 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச்சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த ஏ.திலீப்குமரன் 1.82 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.அபிமன்யு 1.78 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

(ம-108)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 10ஆவது தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகிறது. மூன்றாம் நாளான நேற்று 16 வயதுப்பிரிவுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியும் நடைபெற்றது. (ம-23)

## கௌரியம்பாள் அ.த.க.பா. தங்கத்தைத் தனதாக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் மன்னார் கௌரி அம்பாள் அ.த.க. பாடசாலைக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
மன்னார் கௌரி அம்பாள் அ.த.க. பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரியதர்சினி 5.07 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ஆரணி 5.05 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த வை.வனிசா 4.87 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.

(ம-108)



## 80 மீற்றர் ஓட்டத்தில் உடுப்பிட்டி மிசனுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 80 மீற்றர் ஓட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செந்தீஸ் தங்கப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினார்.
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 80 மீற்றர் ஓட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செந்தீஸ் 10.40 செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.கோயாணன் 10.60 செக்கன்களில் ஓடி வெள்ளிப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், இடைக்காடு மகா வித்தி யாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த வி.வளவன் 10.60 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றியுள்ளனர்.

(ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வியின் முதலாவது தங்கப் பதக்கம் நேற்றுப் பதிவானது

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய வரலாற்றின் முதலாவது தங்கப் பதக்கம் நேற்றுப் பதிவானது. மாணவி அ.சிந்துஜா இந்தப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் அ.சிந்துஜா தங்கப் பதக்கத்தை பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் சிந்துயா கருத்துத் தெரிவிக்கையில், "தங்கப் பதக்கத்தை பெற்றமை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத்தருகின்றது. சாதனை மங்கையாக மாற்றிய பயிற்றுநர் மயூரன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் அதிபர் போன்றோருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது அப்பா விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ளார். நாங்கள் 5 பிள்ளைகள் ஆகையால் அவரின் உழைப்பு எமது அன்றாடச் செலவிற்குப் போதுமானதாக மாத்திரம் உள்ளது. இதனால் விளையாட்டிற்குரிய பாதணியை





வாங்குவதங்குக்கூட மிகவும் சிரமப்பட்டேன். எனது இலட்சியம் கணித பாட ஆசிரியராக வருவதுதான். தேசிய மட்டத் தடகளத் தொடரில் சாதிப்பது எனது அவா. அதற்காகத் தொடர்ந்து பயிற்சி எடுத்து வருகின்றேன். எமது பாடசாலை மைதானம் முழுமையாக 100 மீற்றர் நீளம் இல்லை. அத்துடன் போதிய புனரமைப்பும் இன்றியே இருக்கிறது. தேசிய மட்டச் சுவட்டு நிகழ்ச்சிகள் செயற்கை மைதானத்தில் நடைபெறுவதால் எம்மால் அதில் சாதிக்க முடியுமா என்ற அச்சம் உருவாகியுள்ளது. எனவே யாழ் மாவட்டத்தில் செயற்கை மைதானம் அமைக்கப்பட்டால் பல சாதனையாளர் உருவாகுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-422)

## நெல்லியடி மத்தி. வென்றது தங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான ஈட்டி எறிதலில் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கம் கிடைத்தது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயது ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி.மதுரன் 51.17 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார்.

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.றீகன் 50.75 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், வேலணை மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி.நிதுசன் 45.99 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-23)



## மடு கருங்கண்டல் அ.த.க. நீளம்பாய்தலில் சாதித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 12வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம்பாய்தலில் மடு கருங்கண்டல் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ்.யாழ்மதி வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 10 ஆவது தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற 12 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தலில் எஸ்.யாழ்மதி 4.16 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், நயினாதீவு சிறிகணேசா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.முப்பிளிகா 3.96 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச்சான்றிழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த பி.மதுரா 3.94 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச்சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)

## ஓல்ட் கோல்ட்ஸ் திருநெல்வேலி சி.சி. காலிறுதியில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 9
இலங்கை கிரிக்கெட் சபை தனது மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டமொன்று இன்று இடம்பெறவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இன்று காலை நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் (ரி.சி.சி.) மோதவுள்ளது. (ம)

## தீவுகள் - இந்தியா ரி-20 இன்று

மேற்கிந்தியத் தீவுகள் - இந்திய அணிகளுக்கு இடையிலான ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
முன்னதாக முடிவடைந்த ஒருநாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இந்த நிலையில் ரி-20 கிண்ணத்தையாவது குறைந்த பட்சம் கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடியில் தீவுகள் இன்று களமிறங்குகிறது. அதிரடி வீரர் கெய்ல் அணியில் இடம்பிடித்திருப்பது கூடுதல் பலம். (ம)



## 16 வயதுப் பிரிவு நீளம் பாய்தலில் சிலாவத்துறை ஆர்.சி. அசத்தியது

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தலில் மன்னார் சிலாவத்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜே.அபிஷா வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கம் வென்றார். 5.10 மீற்றர் தூரத்துக்குப்பாய்ந்தே அபிஷா தங்கப்பதக்கத்தை வென்றார். கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.சகானா 4.87 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுகின்சா 4.73 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L இரசாயனவியல் கருத்தரங்கு**

**INORGANIC CHEMISTRY BY J.J.COLLEINS (B.Sc)**

- 2017 பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்
- இது வினாவிடை வகுப்பு அல்ல
- பண்பறிபகுப்பு, d தொகுப்பு, முக்கியத்துவம் வாய்ந்த இரசாயன தாக்கங்கள் உட்பட்ட பல விடயங்கள்.

12.07.2017 (புதன்) 8.30 -12.30
13.07.2017 (வியாழன்) 8.30 - 12.30
இடம் :- Green Pearl (பிறவுண் வீதி, சந்தியருகில்,நாவலர் றோட்)

077 923 0046
(அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்க)

# இலங்கைக்கு மீண்டும் நேற்றுப் பலத்த அடி இறுதியாட்டத்தில் கிண்ணம் தீர்மானமாகும்



இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி சிம்பாப்வே அணி வெற்றிபெற்றது. இதனால் முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களின் அடிப்படையில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகளைப் பெற்றுள்ளன. நாளை நடைபெறும் ஆட்டத்தில் எந்த அணி வெற்றிபெறுகிறதோ அந்த அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் குணதிலக. இருவரும் மற்றுமொரு சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார். அடித்தாடினார் டிக்வெல்ல. குணதிலகவின் ஆட்டமும் சராசரியை சிறப்பாக பேணும் விதத்தில் அமைந்தது. இணைப்பாட்டமாக 200 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னரும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. அணி 209 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 116 ஓட்டங்களுடன் வோலரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் டிக்வெல்ல. குணதிலக 87 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ஆரம்ப இணை காட்டிய அதிரடியை மத்திய வரிசை தக்கவைக்கத் தவறியது. இதனால் சுமார் 350 ஓட்டங்கள் பெறப்பட வேண்டிய இடத்தில் 300 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை.

பந்துவீச்சில் மொவ்பு வோலர் இருவரும் தலா 2 இலக்குகளையும், சட்டரா, ரசா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வேக்கு அதன் ஆரம்ப வீரர்கள் சிறப்பாக அடித்தாடி சராசரியில் ஏற்றம் காண வைத்தனர். 7.4 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது சிம்பாப்வே. மிரி 30 பந்துகளில் 43 ஓட்டங்களைக் குவித்தார். மழை குறுக்கிட சிம்பாப்வே அணிக்கு 31 பந்துப் பரிமாற்றங்களில் 219 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. எர்வின் சிறப்பாக அடித்தாடி 45 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். ஆரம்பத்திலேயே அதிரடி காட்டியதால் பதற்றம் இல்லாமல் 10 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டியது சிம்பாப்வே. (ஏ)

**சிறுநீரகம் உடன் தேவை**

$B^+$ or $B^-$ or $O^+$ or $O^-$ வகைச் சிறுநீரகம் உடன்தேவை.
வயதெல்லை :- ஆண் - 25 இற்கு மேல்
பெண் - 30 இற்கு மேல்
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
077 087 8973, 076 627 7485

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை.
0777437162, 0766367091

**வேலைவாய்ப்பு**

நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ள எமது புதிய கிளையான ANDRA WEDDING CARDS நிறுவனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள பணியாளர்கள் உடன் தேவை!

அதிகூடிய சம்பளத்துடன்

1. வரவேற்பாளர்கள் (Receptionist)
2. கணினி வடிவமைப்பாளர்கள் (Computer Graphic Designer)
3. பக்க வடிவமைப்பாளர்கள் (Page Layout Designer)

தகைமைகள்: நெல்லியடி, வடமராட்சியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

செவ்வாய்க்கிழமை (11.07.2017) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
ANDRA DIGITAL IMAGE 379,Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

**STUDY in CHINA**

ENGINEERING
Civil | Mechanical | Software | Electrical
100% SCHOLARSHIPS AVAILABLE *Conditions Apply

# Fully English Medium
# IELTS Not Required
# Low Course fee
# Low Living cost
#100% Visa Success Rate
# Part Time Job Allowed
Apply Before 31st July Year 2017
* Conditions Applied
ICS Admission Point
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் 021 4926222
107 B 1/1 Galle Road, Colomb 6 011 4343322
Appointment 077 3013060

**A/L, NVQ Level 4 / 5 கல்விகற்கும் Engineering துறை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு பொறியியலாளராக அரிய வாய்ப்பு**

City & Guilds
Engineering Council (UK) / IESL Recognized Qualification 2017/2018
NVQ Level 4 / 5 படிக்கும் மாணவர்கள் தராதரப்பத்திரம் இன்றி கல்லூரி அதிபரின் சிபாரிசுடன் பின்வரும் துறைகளில் கல்வி கற்பதற்கு அரிய வாய்ப்பு

Civil Engineering | Quantity Surveying
Electrical & Electronics | Telecommunication

அனுமதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் சுயவிபர கோவையுடன் 11,12,13 July 2017 நேரில் வரவும்
10-20% Discount for Technical Students
Course Director: Prof.K.சந்திரபோஸ் (City & Guilds Medal of Excellence Winner)
APSS International (College of Engineering Studies)
No. 4 & 6 Clock Tower Lane, Jaffna
077 3867695
077 2306642

**மரண அறிவித்தல்**

**சபாரத்தினம் இராசரத்தினம் (காந்தி)**



பிறப்பு 01.05.1948 இறப்பு 07.07.2017

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் இராசரத்தினம் 07.07.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வ ரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் செல்வரத்தினம், யோகரத்தினம், இந்திராணி காலஞ்சென்ற தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் புவனேஸ்வரி, சுலோசனாதேவி, ஓம்சிவசக்தி, கணேசபாலன், சந்திரகாந்தன், காலஞ்சென்றவர்களான நவரத்தினராஜா, பீதாம்பரம், அகத்தியர், கபிலராஜா, பூமணி, சிவயோகம், இரத்தினேஸ்வரி, நவநீதம் மற்றும் பவளகேசரி(வினோ சித்தப்பா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுரேன், ஹரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தசின்ராவின் அன்பு மாமனும் கிஷான், சொபியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப.09 மணியளவில் அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் திருநெல்வேலி, பால்ப்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி.
தகவல்: குடும்பத்தினர் - 077 8151798

**FLC FRENCH LANGUAGE CENTRE**

பிரெஞ்சு வகுப்புக்கள்
France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...
சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...
இல. 40, பலாலி வீதி (அரியகுளம்) 0779 789 456 021 221 7781
இல. 181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973
IELTS Life Skills A1,B1 வகுப்புக்களும்....
(நெல்லியடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

**A/L 2017 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் (ICT) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு ICT SEMINAR (10.07.2017 - Monday)**

Database, Programming & Networking ஆகிய பிரிவுகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் பரீட்சைக்கு ஏற்றமுறையில் வழிகாட்டப்படும்.
( Limited to First 50 Students)
No.61, 3rd Floor, Palaly Road, Jaffna.
076 850 8894, 021 722 3444

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.